# என்னருகில் நீ இருந்தால்



சத்யா இராஜ்குமார்

# என்னருகில் நீ இருந்தால்...



## 1

''வா.''

ஒரு வேலைக்காக இண்டர்வியூவிற்குச் சென்று விட்டு உள்ளே வந்த மருமகளை என்னவாயிற்று என்பதைப் போலப் பார்த்தார் மதுரவாணி.

''வேல கிடைச்சுடுச்சு அத்தெ.''

''சந்தோஷம். எப்பிருந்து வரச் சொல்லியிருக்காங்க?''

''இன்னும் ரெண்டு நாள்ல அப்பாயிண்ட்மென்ட் ஆடர் வந்துடும் அத்தெ. வர்ற ஒன்னாந்தேதியிலிருந்து வேலைல ஜாய்ன் பண்ற மாதிரி வரும்.''

''அதுக்கென்ன இன்னும் நாலஞ்சு நாள் தான இருக்கு?''

''ஆமா அத்தெ.''

''உன் வீட்டுக்காரருக்கு போன் பண்ணிச் சொல்லிட்டயா?''

''இன்னும் சொல்லல அத்தெ. உங்ககிட்ட ஒரு வார்த்த சொல்லிட்டு...''

''பேசறதெல்லாம் பிரமாதமாகத் தான் பேசற. சரி. அவனுக்குக் கூப்புடு.''

''இதோ அத்தெ...'' என்று உடனே மொபைலை எடுத்துத் தனது கணவனுக்கு அழைத்தாள் இந்துரேகா.

''லைன் போகுது அத்தெ,'' என்று மருமகள் கொடுத்த மொபைலை வாங்கிக் காதில் வைத்தார் மதுரவாணி.

சில நிமிடங்கள் மகனிடம் பேசியவர், ''சரி தான். உங்க இஷ்டம் எப்பிடியோ பண்ணுங்க. ஒரு நிமிஷம் இருப்பா,'' என்று மருமகளிடம் போனைக் கொடுத்தார்.

ஹலோ என்றவளுக்குக் கணவனின் கணீரென்ற ஆழ்ந்த குரலில் தொடர்ந்து நிறையப் பேச வேண்டும் போல ஆசையாக இருந்தது.

ஆனாலும் வேலை கிடைத்து விட்ட விஷயத்தை மட்டும் சொல்லிவிட்டு, அடுத்த சில வினாடிகளில் போனை வைத்திருந்தாள்.



எதிர்முனையில் கணவனும் பேச மிகுந்த ஆர்வம் காட்டியது புரிந்தது.

''சரி சரி வா. விட்டா மணிக் கணக்குல இல்ல பேசுவீங்க!'' என்ற மதுரவாணி, ''நீ மட்டும் தான் மிச்சம். வந்து சாப்புடு - எல்லாத்தையும் எடுத்துக் கழுவப் போட்டுடலாம்,'' என்றார்.

பசியும் வயிற்றைக் கிள்ள, உடனே சென்று தட்டில் போட்டுக் கொண்டு சாப்பிடத் தொடங்கி விட்டிருந்தாள் இந்துரேகா.

அப்பொழுதிருந்த வயிற்றுப் பசிக்குத் தனது அத்தையின் கை வண்ணத்தில் சமைக்கப்பட்டிருந்த அந்த உணவு தேவாமிர்தமாக இருந்தது.

திருப்தியாகச் சாப்பிட்டு முடித்தவள், பெரிய கிண்ணங்களில் இருந்த பதார்த்தங்கள் அனைத்தையும் சிறு சிறு கிண்ணங்களுக்கு மாற்றிவிட்டுப் பிறகு அந்தப் பாத்திரங்களைத் தேய்த்துக் கழுவிக் கவிழ்த்தாள்.

அடுத்ததாக டைனிங் டேபிளைத் துடைத்து விட்டு, டைனிங் அறையையும் சமையல் அறையையும் கூட்டித் துடைத்து விட்டாள்.

அப்படியே கலைந்து கிடந்த பொருட்களையெல்லாம் ஒதுக்கி வைத்தாள்.

வயிறு நிறையச் சாப்பிட்டதற்கும், காலையிலிருந்து வெளியே அலைந்து விட்டு வந்ததற்கும் ஒரு குட்டித் தூக்கம் மட்டும் போட முடிந்தால் என்று மனம் ஏங்கியது.

சுவர்க் கடிகாரத்தில் நேரம் பார்த்தாள்.

மதியம் மூன்றே கால்.

''இந்துரேகா.''

''அத்தெ, சொல்லுங்க.''

''இந்தா போய் மல்லி, முல்லை, எல்லாத்தையும் பறிச்சுட்டு வா,'' என்று தனது அத்தை கொடுத்த பூக் கூடைகளைக் கைகளில் வாங்கிக் கொண்டாள் இந்து ரேகா.

''ஒன்னாப் பறிச்சுப் போட்டுட்டு வந்துடாத, கட்டும் போது சிரமம்.''

''சரி அத்தெ.''

குட்டித் தூக்க ஆசை கனவாகவே முடிந்தது.

தனது அத்தை சொன்னது போல இரண்டு விதமான பூக்களையும் ஒன்று விடாமல் தேடித் தேடிப் பறித்துத் தனித்தனிக் கூடைகளில் போட்டு எடுத்துக் கொண்டு வீட்டிற்குள் வந்தாள்.

தனது மருமகளிடமிருந்து பூக்கூடைகளை வாங்கிக் கொண்ட மதுரவாணி, ''நூல் எடுத்துட்டு வா,'' என்றார்.

''இதோ அத்தெ!'' என்று வந்து இந்துரேகா பூ தொடுக் கும் நூலோடு பூக்களைக் கீழே கொட்டி ஒவ்வொன்றாக எடுத்துத் தொடுப்பதற்கு ஏதுவாக நியூஸ் பேப்பரையும் எடுத்து வந்து கொடுத்தாள்.

''இங்க வா, அதுக்குள்ள எங்க போற?''

''துணி மாத்திட்டு வர்றேன் அத்தெ.''

''சரி சரி. சீக்கிரம் வா. என்ன, சொல்லு?''



''துவைச்சுப் போட்ட என் காட்டன் சேலைகளை அயர்ன் பண்ணணும். அத முடிச்சுட்டு வேணும்னா வந்துடட் டுமா அத்தெ?''

''சரி. போ போ. என்ன நோஞ்சான் உடம்போ இந்தக் காலத்துப் பொண்ணுங்களுக்கு. ரெண்டு வேல செய்யற துக்கு முன்னாடி ரெஸ்ட் தேவப்படுது.''

''இல்ல அத்தெ. துவைச்ச துணிகளையெல்லாம் மடிச்சு வெச்சுட்டு, அப்புறமா தான் தேய்க்..''

''சரி போன்னு சொல்லிட்டேனல்ல? அப்புறம் எதுக்கு இத்தனை காரணம் சொல்ற? நான் என்ன உன்ன அந்த அளவுக்குக் கொடுமப் படுத்தறேனா?''

''அச்சச்சோ! இல்ல அத்தெ!'' என்று அவசரமாக மறுத்த இந்துரேகா அடுத்த சில வினாடிகளில் தங்களுடைய அறைக்கும் வந்து சேர்ந்திருந்தாள்.

உஷ் அப்பாடா என்றிருந்தது.

பேசாமல் கதவைத் தாழிட்டுக் கொண்டு சிறிது நேரம் படுத்து விட்டிருந்தாள்.

ஆனால் தூங்கும் மனநிலை தான் இருக்கவில்லை.

தான் திருமணமாகி வந்தே ஒரு மாதம் தான் முடிந் திருக்கிறது. எப்படி இந்த வீட்டில் காலம் முழுவதும் சமாளிக்கப் போகிறோம் என்று பயம் வந்து விட் டிருந்தது.

இந்துரேகாவைப் பொறுத்தவரை அவள் எப்பொழு துமே வேலைக்கு அஞ்சுபவள் கிடையாது, நோஞ்சானும் கிடையாது.

ஆனால் வேலை செய்வதற்கும் ஒரு வரைமுறை இருக்கிறதல்லவா!

வேலை செய்யும் போது, செய்யும் நேரத்தில் வேகமாகவும், சுறுசுறுப்பாகவும் செய்ய வேண்டும் தான்.

ஆனால் இது என்ன, எந்த நேரமும் வேலை வாங்கிக் கொண்டே இருக்க வேண்டுமென்ற எண்ணம்.

அப்படி வேலை செய்து கொண்டே இருந்தால் தான் உடம்பில் வலு இருக்கிறதென்று நம்புவேன் என்றால் என்ன அர்த்தம்.

குடும்பம், வீடு என்றால் விடாமல் செய்து கொண்டே இருக்குமளவிற்கு வேலைகளும் இருந்து கொண்டே தான் இருக்கும்.

நாம் தான் திட்டம் போட்டு ஓய்விற்கும் நேரம் கிடைக்கும்படி வேலைகளையும் பிரித்துச் செய்யப் பழகிக் கொள்ள வேண்டும்.

அப்படிக் கிடைக்கும் ஓய்வு நேரத்தை அவரவர்களுடைய விருப்பத்திற்கும், ஆசைக்கும் ஏற்றவாறு பயன்படுத்திக் கொள்ளவும்.

இது இந்துரேகாவிற்கு மட்டும் தான் என்றில்லை, பெரும்பான்மை குடும்பப் பெண்களின் கருத்தும் அதுவாகத் தான் இருக்கும்.

ஏன் இந்துரேகாவுடைய தாயே கூட அதிகாலை ஐந்து மணிக்குள் எழுந்தாரென்றால் அதிக பட்சம் பத்து மணிக்குள் அனைத்து வீட்டு வேலைகளையும் முடித்து விடுவது வழக்கம்.



அதற்குப் பிறகு இருக்கும் மீதி நேரத்தை அவருடைய மனதிற்குப் பிடித்தவாறு டி.வி பார்ப்பது, நாளிதழ்கள், புத்தகங்கள் படிப்பது, வெளியே சென்று வருவது, தூக்கத்திற்காக என்றில்லாவிட்டாலும் சும்மாவாவது மதிய நேரம் சற்று படுத்திருப்பது, பக்கத்து வீட்டினருடன் பேசிவிட்டு வருவது இப்படி மனதிற்கு உற்சாகம் தரும் வேலைகளைப் பார்த்துக் கொண்டு போய் விடுவார்.

மீண்டும் சமையலறை வாசம் இரவு டிஃபனுக்காகத் தான்.

இடையிடையே சிறு சிறு வேலைகள் இருக்கும் தான் என்றாலும், மனதிற்குப் பிடித்தபடி திட்டம் போட்டு வேலை செய்வதால் அதுவும் செய்வதற்கு மிகவும் எளிதான ஒன்றாகி விடுகிறது.

இந்து ரேகா அவளுடைய திருமணம் முடிந்திருக்க அவளுடைய கணவன் ரகுபாலனுக்குச் சென்னையில் ஒரு பெரிய ஸாஃப்ட்வேர் கம்பெனியில் நல்ல பொறுப்பான வேலை.

அவனுக்கும் அதிகபட்சம் இன்னுமொரு பதினைந்து, இருபது நாட்களில் சொந்த ஊருக்கே மாற்றல் கிடைக்க இருக்க, அதற்காகத் தான் அனைவரும் காத்திருந்தார்கள்.

மணமாகிப் புகுந்த வீடு வந்திருந்த இந்த ஒரு மாதத்தில் தனக்குக் கொஞ்சமேனும் சுதந்திரம் கிடைக்க ஒரு வழி இருக்கிறதென்றால் அது தான் வேலைக்குச் செல்வது தான் என்பதை நன்கு புரிந்து கொண்டு விட்டிருந்தாள்.

அந்த அளவிற்கு இந்துரேகா நன்கு படித்தும் இருந் தாள்.

அப்படி வேலைக்குச் செல்லத் தொடங்கி விட்டால் அந்தப் போர்வையில் சற்று, சற்றென்ன... முழுக்க சுதந் திரப் பறவையாகி விடலாம் என்பதில் அவளுக்குத் துளியும் சந்தேகமிருக்கவில்லை.

எப்படியோ இனி வேலையும் கிடைத்து விட்ட மாதிரி தானே என்று தோன்றிய எண்ணதில் சந்தோஷமாகக் கூட இருந்தது.

அது மட்டுமல்லாமல் வேலைக்குச் சென்று நாலு மனிதர்களைப் பார்க்க வேண்டும், நன்கு சம்பாதிக்க வேண்டும் என்ற ஆசை இந்துரேகாவிற்கும் எப்பொழு துமே உண்டு.

அதற்கு அவளுடைய கணவன் ரகுபாலனும் பச்சைக் கொடி காட்டி விட்டிருந்ததில் அவளுக்கு அளவு கடந்த ஆனந்தம்.

அது மட்டுமல்லாமல், கணவன் லேசாக முணுமுணுத் துக் கொண்டிருந்த அவனுடைய தாயையும் அழைத்து இந்துரேகா வேலைக்கு செல்லப் போவது உறுதி என்று சொல்லி அந்த விஷயத்தைப் பற்றி அதற்கு மேல் பேச இனி எதுவுமில்லை என்று முடித்து விட்டிருந்ததும்.

சம்பளமாக மகன் சொன்ன தொகை மதுரவாணியை யும் உடனே சரியென்று சொல்ல வைத்து விட்டிருந்தது.

அதே சமயம் இவள் அவ்வளவு பணத்தைச் சம்பளமாக வாங்கினால் நம்மை மதிப்பாளா என்ற பயமும் அவ ருக்கு இருக்கவே செய்தது.



ஆனாலும் அவர் அதைத் துளியும் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

அப்படி இல்லாமலும் கூட இருக்கலாம். நாமே ஏன் வலியப் போய்ச் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்று பேசாமல் இருந்து விட்டிருந்தார்.

மதுரவாணி - விநாயகமூர்த்தி அவர்கள் தான் இந்து ரேகாவின் கணவன் ரகுபாலனைப் பெற்றவர்கள்.

ரகுபாலனுடன் பிறந்தவர்கள் இன்னும் மூன்று பேர் இருந்தனர்.

மூத்தவன் வினுபாலன் அவனுக்கு அடுத்ததாக ரகு பாலன். அவர்களுக்கு அடுத்ததாக இரண்டு பெண்கள் சுபர்ணா, அடுத்தது சுசித்ரா.

அதில் மூத்தவன் வினுபாலனுக்குத் திருமணம் முடிந்து நான்கு வருடங்கள் முடிவடைந்திருந்தன.

அந்த வீட்டின் பெரிய மருமகள் அதாவது வினுபால னின் மனைவி அபர்ணா மதுரவாணியின் உடன் பிறந்த தம்பியின் செல்ல மகள்.

அதனாலோ என்னவோ அந்த வீட்டின் மூத்த மருமக ளான அபர்ணாவுக்கு எப்பொழுதுமே அந்த வீட்டுப் பெண் பிள்ளைகளைப் போலவே அனைத்து உரிமை களும் உண்டு. அதிகாரமும்.

நினைத்தால் தாய் வீட்டிற்குக் கிளம்பிச் சென்று விடுவதும் வாரக் கணக்கில் தங்கி விட்டு வருவதும் கூட அடிக்கடி நடப்பது தான்.

தாய் வீட்டிற்குத் தான் என்று கிடையாது. நினைத்தால் கோவில், சினிமா, பிக்னிக் டூரென்று எப்பொழுதும் ஜாலியான வாழ்க்கை தான்.

திருமணம் முடிந்து நான்கு வருடங்கள் ஆகியும் அவளுக்கு இன்னும் குழந்தை பாக்கியம் கிடைத்திருக்க வில்லை.

அண்ணன் மனைவியைப் பிரசவத்திற்கு மருத்துவ மனையில் சேர்த்திருக்கிறார்கள். உடனிருக்க என்று அண்ணியின் பிறந்த வீட்டுச் சொந்தங்கள் தான் யாரு மில்லையே. அதனால் நான் சென்று உடனிருந்து பார்த் துக் கொள்ள வேண்டுமென்று கணவனுடன் காலையில் நேரத்திலேயே கிளம்பிச் சென்றிருந்தாள் அபர்ணா.

இனி அவள் எப்பொழுது திரும்புவாளோ, அது அந்தக் கடவுளுக்குத் தான் வெளிச்சம்.

எப்படியும் பிரசவத்திற்கு டாக்டர்கள் சொன்ன தேதிக்கே இன்னும் ஒரு வாரம் இடைவெளி இருப்பதால் குழந்தை பிறந்த பிறகு குறைந்த பட்சம் ஒரு வாரம் என அவள் திரும்பவே எப்படிப் பார்த்தாலும் இன்னுமொரு பத்து நாட்களுக்கு மேலாகும் என்பது மட்டும் புரிந்தது.

ஏதேதோ யோசித்துக் கொண்டே படுத்துக் கொண் டிருந்த இந்துரேகா அப்படியே தூங்கியும் போய் விட் டிருந்தாள்.

மீண்டும் அவள் கண்விழித்துப் பார்த்த போது அரை மணி நேரத்திற்கும் மேலேயே சென்றிருந்தது தெரிந்தது.

குட்டித் தூக்கம் தான் என்றாலும் இந்துரேகா மன தாலும், உடலாலும் மிகவும் சுறுசுறுப்பாகி விட்டதைப் போல உணர்ந்தாள்.

பிறகு வேகமாக எழுந்தவள் அத்தையிடம் சொல்லி விட்டு வந்தது போலத் தனது காட்டன் சேலைகள்



அனைத்தையும் எடுத்து அயர்ன் செய்யத் தொடங்கி விட்டிருந்தாள்.

கணவனின் நினைவு தான் வந்தது.

ஏனென்றால் அப்பொழுது அவள் தேய்த்துக் கொண் டிருந்த புடவை அவளுடைய கணவன் ரகுபாலன் மனைவிக்காக என்று பார்த்துப் பார்த்து எடுத்துக் கொடுத்தது.

இந்துரேகாவுக்கு விதவிதமான நூல் புடவைகளின் மேல் எப்பொழுதுமே பிரியம் அதிகம்.

அதிலும் அவளுடைய ஒல்லியான உடல்வாகிற்கு அது மேலும் அழகு சேர்ப்பதால் நூல் புடவைகளை அணிய எப்பொழுதும் விரும்புவாள்.

இந்த நேரம் கணவன் என்ன செய்து கொண்டிருப் பான் என்று நினைக்கத் தோன்றியது.

என்ன செய்து கொண்டிருப்பான், வேலையில் இருப் பான்.

பேசப்பேசத் தான் போனை வைத்து விட்டதற்காக மீண்டும் பேசும் போது கோபப்படுவானோ?

ஆனால் அதற்கான காரணமும் அவனுடைய தாய் தான் என்பதையும் ஒன்றும் அவன் அறியாததல்லவே.

கணவனை அழைத்துப் பேசலாம் என்று மிகவும் தோன்றி விட்டிருந்ததில் போனை எடுத்தவள் உடனே வேண்டாமென்று வைத்தும் விட்டிருந்தாள்.

தான் இப்பொழுது அழைத்தாலும் கூட எப்படியும் இரவு அவனும் அழைப்பான். அவனும் தூங்காமல்

தன்னையும் தூங்க விடாமல் வெகுநேரம் பேசவும் தானே போகிறானென்று மீதியிருக்கும் புடவைகளைத் தேய்ப் பதில் முனைந்தாள் இந்துரேகா.

மேலும் ஒரு மணி நேரத்தில் தேய்த்து முடித்து அனைத்தையும் பீரோவில் எடுத்து வைத்திருந்தவள், பிறகு கை கால் முகம் கழுவித் தலை வாரிக் கொண்டு வெளியே வந்தாள்.

நாத்தனார்கள் இருவரும் கல்லூரியில் இருந்து வந்து விட்டிருந்தது தெரிந்தது.

அதில் சுசித்ரா அந்த வருடம் தான் கல்லூரியில் அடியெடுத்து வைத்திருக்க, சுபர்ணா இரண்டாவது வருடம்.

''ஹாய் சுசி, சுபா, இப்பதான் வந்தீங்களா?''

''ஆமா அண்ணி,'' என்று சுபா சொல்ல,

''உங்களுக்கு வேலை கிடைச்சுடுச்சாமே?'' என்று கேட் டாள் சுசி, அதாவது சுசித்ரா.

''ஆமாம்மா. அநேகமா இன்னுமொரு ரெண்டு நாள்ல அப்பாயிண்ட்மென்ட் ஆடர எதிர்பாக்கறேன்.''

''அப்ப ட்ரீட்?''

சுபர்ணா கேட்க, ''அதுக்கென்ன முதல் மாதச் சம் பளத்த வாங்கிக் குடுத்துட்டாப் போச்சு!'' என்றாள் இந்து ரேகா.

''சம்பளமா, அது அம்மா கைக்கல்ல போகும்.''

அப்படிச் சொன்ன சுசித்ராவின் வார்த்தைகள் தனது காதுகளில் விழாதது போலக் காட்டிக் கொண்டவள்,



''அப்ப ட்ரீட் தர்றேன்,'' என்று புன்னகையுடன் தனது நாத்தனார்கள் இருவரையும் பார்த்துச் சொன்னாள்.

# 2

ஒரு வாரம் சென்றிருந்தது.

எதிர்பார்த்தது போல இண்டர்வியூவிற்குச் சென்று வந்த மூன்றாம் நாளே அப்பாயிண்ட்மென்ட் ஆடர் கைக்கு வந்திருக்க, அவர்கள் ஆடரில் குறிப்பிட்டிருந் தது போல ஒன்னாம் தேதியில் இருந்து வேலைக்குச் செல்லத் தொடங்கி விட்டிருந்தாள் இந்துரேகா.

அன்று அவள் வேலைக்குச் சென்று விட்டு வந்த மூன்றாம் நாள்.

இந்துரேகா நினைத்தது போலெல்லாம் வேலைக்குச் சென்று விட்டு வந்தால் ஒன்றும் வீட்டு வேலைகள் குறைந்து விட்டிருக்கவில்லை.

மாறாக அதிகம் தான் ஆகியிருந்தன.

அவளே காபி கலக்கிக் கொள்வது, தோசை இட்லி ஊற்றிக் கொள்வது, ஏன்... வெளியே கொடியில் காய்ந்து கொண்டிருந்த அவளுடைய துணிகளைக் கூட யாரும் எடுத்து வைத்திருக்கவில்லை.

விடாது பெய்த மழையில் வெகுநேரம் நனைந்திருந் ததில் நூல் புடவைகள் இரண்டும் சாயம் வெளுத்துப் போய்க் கிடந்தன.

அது மட்டுமல்லாமல் இந்து ரேகாவின் பங்காகவும் பாதி வேலைகளுக்கும் மேல் செய்யப்படாமல் அப்ப டியே கிடந்தன.

போய்த் துணியை மாற்றிக் கொண்டு வந்து காபியைக் கலந்து குடித்து விட்டு, இரண்டு மணி நேரங்களில் வேலைகள் அனைத்தையும் செய்து முடித்தாள்.

வேலைகளை முடித்த கையோடு டிபன் வேலைகளும் ஆரம்பமாகியிருக்க, அதற்கும் சேர்த்து மேலும் ஒரு மணி நேரமும் தனது அத்தைக்கு உதவினாள்.

பெரும்பாலான வேலைகள் முடிந்திருக்க, ''அத்தெ, இனி நான் வேணும்னாப் போய்க்கட்டுமா?'' என்று தயங்கிக் கொண்டே கேட்டாள்.

''ஏன், இனி டிஃபன எடுத்து வெச்சா ஒவ்வொருத்தரா வந்து சாப்பிடுவாங்கள்ல?''

''சரி அத்தெ.''

''ஏன் வேற முக்கியமான வேல ஏதுவும் இருக்கா?''

''இல்லில்ல அத்தெ,'' என்றவள், மீண்டும் வேலை களைப் பார்க்கத் தொடங்கி விட்டிருந்தாள்.

சரி தான், இனி அப்படியே நாமும் உண்டு முடித்து விட்டே சென்று விட்டால் போயிற்று என்று அனைத்து வேலைகளும் முடிந்து இந்துரேகா தன்னுடைய அறைக்கு வந்து சேர்ந்த போது இரவு பத்தரைக்கும் மேலேயே ஆகி விட்டிருந்தது.



வந்தவள் கசகசப்புத் தீர நேராகச் சென்று குளிர்நீரில் நன்கு குளித்து விட்டு வெளியே வந்தாள்.

இரவு உடையுடன் கூந்தலைத் தளர்வாக எடுத்து விட்டுக் கொண்டு வந்து மொபைலை எடுத்துப் பார்த்த வளுக்குக் கணவன் இரண்டு முறை அழைத்திருந்தது தெரிந்தது.

உடனே கணவனுக்கு அழைத்தவள் அரை மணி நேரத்திற்கும் மேல் பேசிவிட்டு அதற்குப் பிறகே போனை வைத்தாள். அதாவது அவளுடைய கணவன் வைக்க விட்டிருந்தான்.

மேலும் பத்து நாட்களும் சென்றிருந்தன.

நாளுக்கு நாள் இந்துரேகாவிற்கு வேலைகள் அனைத் தும் அதிகம் தான் ஆனதே தவிர சற்றும் குறைந்திருக்க வில்லை.

மறுநாள் ஞாயிற்றுக் கிழமை.

விடிந்தால் கணவன் வந்து விடுவான். இனி எப் பொழுதும் தன்னைப் பிரியவே மாட்டான் என்ற எண்ணமே அவளை மிகுந்த உற்சாகத்தில் தள்ளி யிருந்தது.

அதே நேரம் தனது கணவனுடைய அண்ணனின் மனைவி அபர்ணா உள்ளே வர, புன்னகையுடன் வர வேற்றுப் பேசினாள் இந்துரேகா.

தாய் வீடு கிளம்பிச் சென்றிருந்தவள் பதினைந்து நாட்களுக்குப் பிறகு மீண்டும் அன்று தான் வந்திருக் கிறாள்.

வந்ததும் வராததுமாக அத்தை என்று சத்தமாக அழைத்துக் கொண்டே அவள் உள்ளே செல்வதைக் கண்டாள்.

ஏன், அப்படித்தான் அக்கா என்று வலியச் சென்று பேசிய தன்னிடம் நின்று ஒரு வார்த்தை பேசிவிட்டுச் சென்றிருந்தால் ஆகியிருக்காதாமா என்று ஆதங்கத் துடன் நினைத்தாள் இந்துரேகா.

அதிசயமாக அன்று வீட்டு உறுப்பினர்கள் அனை வருமே ஒன்றாக டிஃபன் சாப்பிட வர, மீண்டும் புன்னகையுடன் அபர்ணாவிடம் பேசினாள் இந்துரேகா.

''உங்க அண்ணி, குழந்தை எல்லாரும் நல்லார்க்காங் களாக்கா?''

''அதெல்லாம்...'' என்ற அபர்ணா, ''அப்புறம் வேலைக் கெல்லாம் போக ஆரம்பிச்சுட்டயாமே?'' என்று கேட் டாள்.

''ஆமாம்கா, அப்ளை பண்ணியிருந்த வேலையே கிடைச்சது. அதான்.''

''என்ன சம்பளம்?''

''நாப்பதாயிரம்.''

''அவ்வளவா...'' என்று தன்னையறியாமலேயே கேட்டு விட்டிருந்த அபர்ணா அடுத்த வினாடியே பேச்சை மாற்றியிருந்தாள்.

''இந்தக் காலத்துல பணத்துக்கு என்ன மதிப்பிருக்கு? அதான் நேத்துப் படிச்சு முடிச்சவங்க கூட அம்பதாயிரம், ஒரு லட்சம்னு வாங்கறாங்களே!'' என்றாள்.



''அது சரிதான்க்கா!'' என்று வெகுளித்தனமாகத் தானும் உடனே ஒத்துக் கொண்டாள் இந்துரேகா.

''ஓ அப்ப வேலைக்குப் போறதுனால தான் என் அண்ணன் குழந்தைய வந்து பாக்க முடியலையாக் கும்?''

அபர்ணா கேட்க, அப்படியில்லை யென்று அவசர மாக மறுத்தாள் இந்துரேகா.

''நாளைக்குக் காலைல அவர் வந்துடுவார்க்கா, அதான் அவர் கூடவே வந்து பாத்துக்கலாம்னு வெயிட் பண் ணிட்...''

''ஓ அப்படிப் பண்ணிக்கலாம்னு உங்க வீட்டுக்காரர் சொன்னாராக்கும்?''

''அதெல்லாம் ஒன்னு...''

''சரி சரி. விடு. நீதான் உன் வீட்டுக்காரர விட்டுக்குடுக்க மாட்டியே!'' என்று அபர்ணா சொல்லிக் கொண்டிருக்கும் போதே,

''எல்லாரும் வாங்க, சாப்பிடலாம்,'' என்று வந்தார் அவர்களுடைய அத்தை மதுரவாணி.

அங்கு வந்து விட்டிருந்தவருக்கு அதற்குப் பிறகு தான் ஏற்கெனவே சாப்பிடுவதற்காக அனைவரும் வந்து அமர்ந்திருப்பது தெரிந்தது.

''மாமா எங்க அத்தெ, காணல?''

''அவருக்கென்னமா, எப்பப் பாத்தாலும் தோட்டம், தோட்டம், தோட்டம் தான். ரகு கல்யாணத்துக்கு ஒரு

ரெண்டு மாசம் இங்கயே இருக்க நேர்ந்ததால அதுக்கெல்லாம் சேத்து இந்த இருபது நாளாத் தோட்டமே பழியாக் கிடக்கறார்.''

''என்னமா நீங்க, அப்பா என்னவோ அங்க போய் ஜாலியாத் தூங்கிட்டிருக்கற மாதிரி சொல்லிட்டிருக்கீங்க. தோட்டத்துக்குள்ள இறங்கிப் பாடுபட வேண்டாம்?''

அப்படிச் சொன்ன தனது சிறிய மகளைத் திரும்பிப் பார்த்த மதுரவாணி,

''சரிதான் வாயாடி, சாப்புடு,'' என்றார்.

''ஏன் உண்மைய சொன்னா அதுக்கு பதில் சொல்ல முடியலையாக்கும்?''

அப்படிக் கேட்ட தனது நாத்தனாரைப் பார்த்த அபர்ணா, ''மாமா இங்க இருக்கறதில்லேங்கற ஆதங்கத்துல ஏதோ ரெண்டு வார்த்த அத்தெ சொன்னாங்க. அவ்வளவு தான். அதுக்காக ஏன் நீ அவங்களையே இப்பிடிப் பெரிய மனுஷி மாதிரி கேள்வி கேட்டுட்டிருக்க?'' என்று அதட்டினாள்.

''நானும் என்னோட ஆதங்கத்த சொன்னேன். அவ்வளவு தான். அதுக்கேன் அண்ணி நீங்க இப்பிடி ஸீரியஸா எடுத்துட்டுக் கேள்வி கேக்கறீங்க?'' என்று அபர்ணாவையே திருப்பிக் கேட்டாள் சுபர்ணா.

அதற்குள், ''ஏய், பேசாம சாப்புடு,'' என்று மகளை அதட்டி விட்டிருந்த மதுரவாணி, ''என்ன இப்பிடி நின்னு வேடிக்க பாத்துட்டிருக்க? எல்லாருக்கும் பரிமாறு,'' என்று சிறிய மருமகள் இந்துரேகாவை எரிச்சலுடன் பார்த்துச் சொன்னார்.



# 3

அன்றும் அனைத்து வேலைகளையும் முடித்துக் கொண்டு இந்துரேகா தன்னுடைய அறைக்கு வந்து சேர்ந்த போது நேரம் பத்தரைக்கும் மேலேயே ஆகிவிட்டிருந்தது.

வந்ததும் வேகமாகச் சென்று மொபைலை எடுத்துப் பார்த்தாள்.

கணவன் அழைத்திருந்தது தெரிந்தது.

உடனே கணவனுக்கு அழைத்துப் பேசினாள்.

அப்படியே வெகு நேரம் வரை பேசிக் கொண்டிருந்தவளுக்குக் குளிக்க வேண்டும் என்ற எண்ணமே காணாமல் போய் விட்டிருந்தது.

மொபைலைக் கீழே வைத்தவள் தான், அசதியில் அப்படியே தூங்கிப் போய் விட்டிருந்தாள்.

காலையில் தான் எழுவதற்கு முன்னரே கணவன் வந்து சேர்ந்து விடுவான் என்ற எண்ணமே அப்படியே மயிலிறகால் அவளது உள்ளத்தை யாரோ வருடிக் கொடுப்பதைப் போல தூக்கத்திலும் இதமாக உணர்ந்தாள்.

அதற்குப் பிறகு நன்கு தூங்கி விட்டிருந்தவளுக்கு அதிகாலையிலேயே விழிப்பு வந்து விட்டிருந்தது.

லைட்டைப் போட்டுக் கடிகாரத்தில் நேரம் பார்த்தாள். மணி நான்கு.

வேகமாகச் சென்று ஹீட்டரைப் போட்டு விட்டு, காலைக் கடன்களை முடித்தாள்.

இன்னும் சில நிமிடங்களில் கணவன் வந்து விடுவான் என்ற எண்ணமே, அவளைக் குறுகுறுக்க வைத்தது.

அடுத்த பத்து நிமிடங்களில் அவள் குளித்து முடிக்கவும், அந்த அறையின் கதவை யாரோ வெளியே தட்டவும் சரியாக இருக்க, அந்தப் பெரிய ஆளுயரப் பூத்துவாலையால் உடலை மூடிக் கொண்டு பாத்ரூம் கதவைத் திறந்து அறைக் கதவருகே வந்து நின்று கொண்டு, "யாரு?" என்று கேட்டாள்.

"நாந்தான்!" என்ற கணவனின் ஆழ்ந்த குரலில் வேகமாகச் சென்று துணியை மாற்றிக் கொண்டு விடலாமென்று ஒரு அடி எடுத்து வைத்திருந்தாள் இந்துரேகா.

ஆனால் அதற்குள் கணவன் மீண்டும் ஒரு முறையும் அழைத்து விட்டிருக்க, உடனே சென்று அறைக் கதவைத் திறந்து விட்டிருந்தாள்.

தான் இருந்த நிலையிலும், உள்ளே வந்த கணவனின் பார்வையிலும் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொள்ள, வெட்கத்தில் முகம் இரத்த நிறம் கொண்டு விட்டிருந்தது.

உள்ளே வந்ததும் கதவைத் தாழிட்டு விட்டிருந்த ரகுபாலன், திரும்பி மனைவியைப் பார்த்தான்.



கணவனின் அந்தப் பார்வையில் இந்துரேகாவின் முகம் மேலும் சிவந்து விட்டிருக்க, அப்படியே மனைவியைத் தன்னருகில் இழுத்திருந்த ரகுபாலன் வெட்கத்தில் நன்கு குனிந்து கொண்டு விட்டிருந்த மனைவியின் முகவாயை மிருதுவாகத் தொட்டு நிமிர்த்தினான்.

நிமிர்ந்து கணவனின் முகத்தைப் பார்த்தவளால் அப்படியே தொடர்ந்து அவனுடைய பார்வையை எதிர்கொள்ள முடிந்திருக்கவில்லை.

ஒரு வித மய்க்கத்தில் அவளையறியாமலேயே அவளுடைய கண்கள் மூடிக்கொள்ள, அப்படியே கணவனை அணைத்து அவனுடைய மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள்.

மனைவியின் மன நிலையைப் புரிந்து கொண்டு விட்ட ரகுபாலனின் நிலை பற்றியோ கேட்க வேண்டியதே இருக்கவில்லை.

மனைவியை அப்படியே தனது இரண்டு கைகளாலும் தூக்கிக் கொண்டு போய்க் கட்டிலில் விட்டவன், 'இந்து...' என்று மிருதுவாக அழைத்துக் கொண்டே அவளுடைய முகம் நோக்கிக் குனிந்தான்.

இந்துரேகா அன்று சமையலறைக்கு வந்த போது அவள் வழக்கமாக வரும் நேரத்தை விடவும் சற்று தாமதமாகி விட்டிருந்தது.

அவள் பயத்துடன் எதிர்பார்த்துச் சென்றது போலவே, எரிச்சல் கலந்த கோபத்துடனான மதுரவாணியின் அதாவது அவளுடைய அத்தையின் பார்வையை எதிர்கொள்ள நேர்ந்தது.

"வாடிம்மா. ஞாயித்துக் கிழம ஆனா மட்டும் யாருக் கும் வயிறு பசிக்காமப் போயிடுமா? அப்பிடியே ஆடி அசைஞ்சு மெதுவா வர்ற!

"உன் வீட்டுக்காரர் வந்துட்டாரா?"

"ஆமா அத்தெ. தூங்கிட்டிருந்..."

"ஓ இவ்வளவு நேரமும் நீ அவனுக்குப் பக்கத்துல உக்காந்து தாலாட்டுப் பாடிட்டிருந்தியாக்கும்...?"

தனது அத்தையின் நக்கலான வார்த்தைகளில் என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் அப்படியே குனிந்து கொண்டு விட்டிருந்தாள் இந்துரேகா.

"எல்லாம் ஆச்சு. உன் வீட்டுக்காரரையும் போய்ச் சாப்பிடக் கூட்டிட்டு வா. என்ன, உங்கிட்ட தான் சொல்..."

அவர் மீண்டும் ஏதோ சொல்ல வருவதற்குள், "இதோ அத்தெ..." என்று அங்கிருந்து நகர்ந்திருந்தாள்.

அடுத்த சில வினாடிகளில் தங்களுடைய அறைக்கு வந்திருந்தவள், கணவன் எழுந்திருந்ததைக் கண்டாள்.

மனைவி உள்ளே வந்ததும் கதவைத் தாழிட்ட ரகுபாலன், அவளைத் தன்னருகில் இழுத்து அமர்த்திக் கொண்டான்.

"என்னடா...?"

"அத்தெ சாப்பிடக் கூப்புட்டாங்க..."

"ம், அப்புறம்?"

"அவங்க வெயிட் பண்ணிட்டிருக்காங்க. நான் போறேன். நீங்களும் சீக்கிரம் வாங்க," என்று மெல்லிய குரலில்



சொல்லிக்கொண்டே எழப்போன மனைவியின் கையைப் பிடித்து இழுத்திருந்தான் ரகுபாலன்.

கணவன் இழுத்த வேகத்தில் அவனுடைய மடியிலேயே சென்று விழுந்திருந்தாள் இந்துரேகா.

தொடர்ந்து வந்த சில வினாடிகளில் சமாளித்துக் கொண்டு எழப்போன மனைவியை எழ விடாமல் அப் படியே தன் மேல் தாங்கிக் கொண்ட ரகுபாலன், "ஏன்டா என்னப் புரிஞ்சுக்க மாட்டேங்கற?" என்று கேட்டான்.

அது சரி. இனி தானும் தான் யாரைப் புரிந்து கொள் வது. இவனையா, அல்லது இவனுடைய தாயையா...?

தான் மனதில் நினைப்பதை அப்படியே படிப்பது போலக் கேட்ட கணவனின் வார்த்தைகளில் திகைத்துப் போனாள்.

"சரி தான். அப்ப மத்தவங்களுக்காகப் பாக்கற அள வுக்குக் கூட எனக்காகப் பாக்க மாட்ட இல்லையா? நான் உனக்காக எந்த அளவுக்கு ஏங்கிப் போய் வந்திருக்கேன் தெரி..."

கணவனின் ஏக்கம் கலந்த அந்த வார்த்தைகள் தன்னைக் கசக்கிப் பிழிவதைப் போல உணர்ந்தாள்.

"அச்சச்சோ! அப்பிடியெல்லாம் இல்ல ரகு!" என்று அவசரமாக மறுத்தாள் இந்துரேகா.

ஆனால் அதெல்லாம் கணவனின் காதுகளுக்குள் கூடச் சென்றிருக்கவில்லை என்பதை உணர்ந்தாள். "எனக்கும் மத்தவங்க எல்லார விடவும் நீதான், ஏன்... நீ மட்டும் தான் முக்கியம் ரகு. ப்ராமிஸ்..." என்று கண்கள் கலங்கக் கணவனை இறுக அணைத்துக் கொண்டாள்.

கணவனும் மனைவியும் வெளியே வந்த போது மேலும் ஒரு மணி நேரமும் கூடக் கடந்து விட்டிருந்தது.

''வாப்பா, காலைல வந்தியா?'' என்று சிறிய மகனை வரவேற்றுக் கொண்டே மதுரவாணி வர, கணவனிட மிருந்து விலகி வேகமாக முன்னோக்கி வந்திருந்தாள் இந்துரேகா.

''ஆமாம்மா, அப்புறம் எல்லாரும் எப்பிடி யிருக் கீங்க?''

''நல்லார்க்கோம் ரகு, நைட் எப்ப சாப்பிட்டயோ, எல் லாம் தயாரா இருக்கு. வந்து சாப்புடு.''

''வர்றேம்மா. இந்த இந்துவும் இதே பாட்டு தான்,'' என்று சலித்துக் கொண்ட மகனை எதுவும் பேசாமல் பார்த்தார் மதுரவாணி.

''அப்புறம் எங்கமா யாரையும் காணல?''

''சன்டே யாருப்பா நேரத்துல எழுந்திருக்கறாங்க?''

''அது சரிதான்,'' என்ற ரகுபாலன் அதே நேரம் அங்கு வந்த தனது மனைவியிடம், ''பாத்தியா?'' என்று கேட் டான்.

''சன்டே யாரு நேரத்துல எழுந்திருக்கறாங்க? நீயும் தூங்காம, நைட்டெல்லாம் சுத்தமாத் தூக்கமே இல்லாம வந்து படுத்த. என்னையும் தூங்க விடாம. இது தான் கடைசி. இனிமேல் இப்பிடி நடந்துக்கிட்டாப் பாரு,'' என்று எரிச்சலுடன் முடித்தான்.

கணவன் அவனுடைய தாய்க்காகத் தான் அப்படிக் கேட்டான் என்பதைப் புரிந்து கொள்ளப் பிரமாத மூளை தேவையிருக்கவில்லை.



''சரி தான் ரகு, சாப்டுட்டுப் போய்ப் படுத்தா நல் லாவே தூங்கலாமில்லையா?''

அப்படிக் கேட்ட தாயிடம், ''இல்லமா, இனியெங்க தூங்கறது? எங்களுக்கு வெளியவும் கொஞ்சம் வேலை யிருக்கு,'' என்றவன் சற்றே திரும்பித் தனது மனைவி யிடம்,

''சீக்கிரம் எடுத்து வை. சாப்டுட்டுக் கிளம்பலாம்,'' என் றான்.

''முதல்ல விவேக் குழந்தையத் தாம்மா பாக்கப் போறோம். நீங்களும் வர்றீங்களா?''

''இல்லப்பா, நான் ஏற்கெனவே ரெண்டு மூணு தடவ போய்ட்டு வந்துட்டேன். இனி உங்கப்பா வந்தா அவரு கூட வேற போக வேண்டியது வந்தாலும் வரும்.''

''அப்பா கூப்புட்டிருந்தார்மா. மதியம் இங்க வர்றதா சொன்னார்.''

''ஓ அப்பிடியா, சரிப்பா. நீ போய்ச் சாப்புடு,'' என்று மதுரவாணி நகர, வந்து சாப்பிட அமர்ந்த கணவனுக்குப் பரிமாறினாள் இந்துரேகா.

''நீயும் வாம்மா.''

''இதோ உங்களுக்குப் பரிமாறிட்டு அப்புற...''

''முதல்ல உக்காரு,'' என்ற கணவனின் அதட்டலில் உடனே அமர்ந்து விட்டிருந்தாள்.

அதே நேரம் டைனிங் ஹாலுக்கு வந்த தனது மாமன் மகளை அதாவது அண்ணன் மனைவியைப் பார்த்தான் ரகுபாலன்.

ஆனால் அவனுக்கும் முன்பாகவே பேசத் தொடங்கி விட்டிருந்தாள் அபர்ணா.

''வாவ் ரகு, எப்ப வந்தீங்க?''

''ம், இது தான் மேடம் படுக்கைய விட்டு எழற நேரமோ?'' என்றவன்,

''ஆனா நீ மட்டும் எல்லார மாதிரியும் ஒரு டயலாக்க சொல்லவே முடியாது.'' என்றான்.

''அது என்ன?''

''ம், சன்டே. அதனால தான் கொஞ்சம் லேட்டா யிடுச்சுன்னு தான். ஏன்னா நீதான் பத்து மணியில்லாம எப்பவுமே படுக்கைய விட்டு எழ மாட்டியே!'' என்றான் ரகுபாலன்.

''அப்படியெல்லாம் இல்ல. இப்பவெல்லாம் நான் நேரத்துலயே எழுந்துட்றேன், தெரிஞ்சுக்கோங்க.''

''நேரத்துலயேன்னா எப்பிடி? இப்ப ஒன்பதே காலுக்கு எழுந்து வந்திருக்கியே, அந்த மாதிரியா?''

'எவ்வளவு ஆசையா உங்க கூடப் பேச வந்தேன். ஆனா என்னக் குத்தம் சொல்லலேன்னா உங்களுக்குத் தூக்கமே வராதே!'' என்ற அபர்ணாவிடம், ''சரி சரி. வா. சன்டேன்னு ஸ்பெஷலா அம்மா ஏதேதோ செஞ்சிருக் காங்க. ஒரு வெட்டு வெட்டலாம்,'' என்றான்.

''பின்ன, இப்பத்துக்கு உங்க வீட்டுக்காரம்மாவக் கம்பெனிக்குக் கூப்புட்டுக்கோங்க. நான் போய் சீக்கிரமாப் பல்ல விளக்கிட்டு வந்துட்றேன்.''



''அப்பப் பல்லக் கூடத் துலக்காமயா இவ்வளவு நேர மும் நின்னு இந்த வாயடிச்ச?'' என்ற ரகுபாலனின் வார்த்தைகளில் புன்னகையுடன் அங்கிருந்து ஓடியே போய் விட்டிருந்தாள் அபர்ணா.

புன்னகையுடன் சாப்பிட்டுக் கொண்டிருந்த மனைவி யிடம், ''சீக்கிரம்மா நாம கிளம்பணும்,'' என்றான்.

சாப்பிட்டு முடித்ததும் அடுத்த பதினைந்து நிமிடங் களில் மனைவியுடன் கிளம்பியே விட்டிருந்தான் ரகு பாலன்.

# 4

வெளியே சென்று விட்டு மீண்டும் அவர்கள் திரும்பி வந்த போது மதியத்திற்கும் மேலேயே ஆகி விட்டிருந்தது.

வரும்போதே வெளியில் ஒரு ஹோட்டலில் மதிய உணவை முடித்துக் கொண்டு வந்திருந்தார்கள்.

வீட்டிற்குள் வந்ததும் தூங்குவதற்காக மனைவியை யும் தன்னுடன் கையோடு அழைத்துப் போய் விட்டிருந் தான் ரகுபாலன்.

அத்தை தேடுவார்கள் என்று இந்துரேகாவிற்கு வாய் வரை வந்த வார்த்தைகள் அதற்கு மேல் வரத் தயங்கின.

தூக்கத்திலும் கணவனின் கைகள் தன்னைச் சுற்றி அணைத்திருக்க, தானும் வாகாக அவனுடைய மார்பின் கதகதப்பில் ஒன்றிக் கொண்டு விட்டிருந்தாள்.

இரவெல்லாம் தூங்கினானோ என்னவோ, பாவம்! நன்கு தூங்கட்டுமென்று அப்படியே அசையாமல் படுத்துக் கொண்டு விட்டிருந்தாள்.

சிறிது நேரம் தான், பிறகு அவளும் நன்கு தூங்கி விட்டிருந்தாள்.

மீண்டும் இருவரும் கண் விழித்த போது நேரம் மாலை ஐந்து ஆகியிருந்தது.

அடுத்த சில நிமிடங்களில் முகம் கை கால் கழுவித் தலைவாரிக் கொண்டு கணவனுக்கு முன்பாகத் தப் பித்துக் கொண்டு வெளியே வந்து விட்டிருந்தாள் இந்து ரேகா.

தனது மாமனார் ஊரிலிருந்து வந்திருப்பதைக் கண் டவள் அவரிடம் சில வார்த்தைகள் பேசிவிட்டுப் பிறகு சமையலறைக்குப் போனாள்.

தனது அத்தை மாலை டிஃபன் வேலையில் மும் முரமாக இருக்க, சென்று உதவினாள்.

"இனி அதெல்லாம் இருக்கட்டும். இங்க வாம்மா. சூடு ஆர்றதுக்கு முன்னாடி கொண்டு போய் எல்லாத்துக்கும் ஒரு தடவ குடுத்துட்டு வந்துடு," என்று தனது அத்தை நீட்டிய சூடாக மிளகாய் பஜ்ஜிகள் இருந்த ப்ளேட்களை வாங்கிக் கொண்டு வந்து அனைவருக்கும் கொடுத்தாள் இந்து ரேகா.



கணவன் தனது தங்கைகளிடம் மும்முரமாக விளை யாட்டுக்குப் பேசிக் கொண்டிருந்தது தெரிந்தது.

அதே நேரம் டிஃபன் ப்ளேட்டைக் கொண்டு வந்து நீட்டிய மனைவியிடம், ''வாம்மா. நீயும் வந்து உக்காரு,'' என்றான்.

அபர்ணாவும், ''வா. வந்து நீயும் எடுத்துக்கோ!'' என்று ஒப்புக்கு ஒரு வார்த்தை சொல்லிவிட்டுத் தனது நாத்தனார்களுக்கு அருகில் சென்று அமர்வதைக் கண்டாள்.

மீண்டும் அனைவரும் மும்முரமாகப் பேசத் தொடங்கி விட்டிருக்க, குளிருக்குச் சூடாகக் கொண்டு வந்து வைத்த பஜ்ஜிகள் நிமிடத்தில் காணாமல் போயின.

சூடாகப் போடப் போடக் கொண்டு வந்து கொடுத் துக் கொண்டே இருந்தாள் இந்துரேகா.

ஒரு வழியாக அனைவரும் சாப்பிட்டு முடித்திருக்க, தன்னை எடுத்துக் கொள்ளச் சொல்லி ஒரு வார்த்தை கூடச் சொல்லாமல் மீதமிருந்த நான்கு பஜ்ஜிகளைத் தனது பிளேட்டில் எடுத்து வைத்துக் கொண்டு சென்ற தனது அத்தையைப் பார்த்தாள்.

சரிதான், நாமே இரண்டு போட்டுக் கொண்டால் போயிற்று, அத்தையும் தான் எண்ணெய் அடுப்படியில் ஒற்றையாளாக எவ்வளவு நேரம் காய்வாரென்று வந்து கிண்ணத்தைத் திறந்தாள்.

பஜ்ஜி மாவு முற்றிலுமாகத் தீர்ந்து போயிருக்கக் கழுவப்படாத வெற்றுப் பாத்திரம் மட்டுமே இருப்பதைக் கண்டாள்.

அவள் கழுவுவதற்காகப் பாத்திரத்தை எடுத்துப் போடவும், அவளுடைய கணவன் ரகுபாலன் சமைய லறைக்கு வரவும் சரியாக இருந்தது.

''இந்து...''

கணவனின் அழைப்பில் திரும்பினாள்.

''வாங்க.''

''பால் இல்லாம ப்ளாக் டீ ஒரு கப் கிடைக்குமாம்மா?''

''இதோ போட்டுத் தர்றேங்க,'' என்று டீ பாத்திரத்தை எடுத்த மனைவியிடம் அதை வாங்கி மீண்டும் கீழே வைத்தவன்,

''முதல்ல நீ சாப்டுட்டு அப்புறமாப் போடு,'' என்றான்.

''பரவாயில்லைங்க. நான் முதல்ல டீ போட்டுட்டு அப்புறமா சாப்புட்றேனே...''

''ம்கூம் வா,'' என்று மனைவியை அழைத்து வந் தவன், ''இப்பவே சூடெல்லாம் ஆறிப் போயிருக்கும். அப் பிடியிருக்கும் போது நீ இன்னும் கொஞ்ச நேரம் கழிச்சு சாப்புட்றேன்னு சொல்ற?'' என்று கேட்டுக் கொண்டே எதையோ தேடினான்.

கணவன் பஜ்ஜிகளைத் தேடுகிறான் என்பது புரிய, பேச்சை மாற்ற முயன்றாள் இந்துரேகா.

''எனக்கொரு சின்ன உதவி ரகு, ப்ளீஸ்...''

அப்படிக் கேட்ட மனைவியை நோக்கித் திரும்பி யவன், ''என்னமா?'' என்று கேட்டான்.

''எல்லாருக்கும் குடிக்க என்னென்ன வேணும்னு மட்டும் கேட்டுச் சொல்ல முடியுமா?''



''அதுக்கென்ன, நான் போய் சுசிய அனுப்பறேன்,'' என்றவன் மீண்டும், ''நீ முதல்ல உக்காந்து சாப்புடு,'' என்பதில் வந்து நின்றான்.

''நான் சாப்டாச்...''

திரும்பித் தன்னைப் பார்த்த கணவனின் பார்வையை எதிர் கொண்டவளால் அதற்கு மேல் எதையும் சொல்ல முடிந்திருக்கவில்லை.

''பெரிய தியாகின்னு நினைப்போ?''

ஏன் இப்படிக் கேட்கிறான்? அப்படியானால் தான் சொன்னது பொய்யென்று தெரிந்து விட்டதோ?

''இப்பதான் ஒரு ரெண்டு நிமிஷத்துக்கு முன்னாடி அங்க வந்துட்டு வந்த. அதுக்குள்ள எப்பிடி சாப்புட் டிருப்ப? அதலயும் வெறும் ப்ளேட்ல இருந்து எடுத்து சாப்புட்ற வித்தை யெல்லாம் கூடத் தெரியுமா உனக்கு?''

''..............''

''ம். பேசு.''

''நான் உங்களுக்குக் கொண்டு வந்து குடுக்கக் குடுக்கவே சாப்டுட்டே...''

திரும்பவும் பொய்யா என்பதைப் போலக் கோபமாகப் பார்த்த கணவனின் பார்வையை எதிர் கொண்டாள் இந்துரேகா.

அதே நேரம், ''என்னடி கலக்கிட்டயா?'' என்று கேட் டுக்கொண்டே சமையலறையில் காலடி எடுத்து வைத்

திருந்த மதுரவாணி அதற்குப் பிறகு தான் தனது சிறிய மகனும் அங்கு இருப்பதைக் கண்டார்.

"வாப்பா!" என்று உள்ளே வந்திருந்தவர், "என்ன டீ குடுக்க லேட் பண்ணிட்டாளாக்கும்?" என்று கேட்டார்.

பயத்துடன் கணவனைப் பார்த்த இந்துரேகா எதையும் கேட்க வேண்டாமே என்பதைப் போலக் கண்களால் இறைஞ்சினாள்.

ஆனால் அதையெல்லாம் கவனிக்கும் மனநிலையில் ரகுபாலன் இருந்திருந்தால் அல்லவா?

"என்னமா, எல்லாரும் டிஃபன் ஆச்சா?" என்று தனது தாயிடம் சாதாரணமாகக் கேட்டான்.

"பின்ன, நாந்தான ரெண்டு மணி நேரமா சுட்டு சுட்டுக் குடுத்துட்டே இருந்தேன். ஏன் கண்ணா, யாருக் காவது பத்தலையா?"

அப்படிக் கேட்ட தனது தாயை உணர்ச்சி துடைக்கப் பட்ட கண்களால் பார்த்தான் ரகுபாலன்.

"யாருக்காவது பத்தாமப் போய்ட்டாக் கூடக் கவலப் படுவீங்க, ஆனா இவளுக்குச் சுத்தமா இல்லாமலே போய்ட்டாக் கூடக் கண்டுக்க மாட்டீங்களாம்மா?" என்று தனது மனைவியைக் காட்டிக் கேட்டவன், அடுத்த சில வினாடிகளில் வெளியேயும் சென்று விட்டிருந்தான்.

ஏன் கணவன் இப்படிக் கேட்டான், அவன் பேசாமல் போயிருக்கக் கூடாதா என்று இந்துரேகாவிற்குத் தான் ஒரு மாதிரியாகி விட்டிருந்தது.

யதேச்சையாக நிமிர்ந்தவள் தனது அத்தையின் எரித்து விடுவதைப் போன்ற பார்வையைச் சந்தித்தாள்.



"என்ன, குடும்பம் அமைதியா இருக்கறது பிடிக் கலையா உனக்கு?"

"அத்தெ..."

"போதும். நடிக்காதடி. சுட்டுக் குடுக்கத் தான் என்னால முடியும். இனி யார் சாப்டாங்க, எத்தன சாப்டாங்கன்றதக் கூடவா நான் வந்து பாத்துட்டிருக்க முடியும்?

"அதுக்குள்ள உம் புருஷங்கிட்டப் போய் இல்லாத தையும் பொல்லாததையும் சொல்லியிருக்கியே, உனக்கு எவ்வளவு சின்னப் புத்..."

"நானெதுவும் சொல்லல அத்..."

"போதும் வாய மூடு. அபர்ணாவும் தான் இருக்கா. இத்தன நாள்ல அவளால ஏதாவது பிரச்சன வந்திருக் கும்னு நினைக்கறியா?"

"யதேச்சையாதான் அவர் வந்தார் அத்..."

"போதும். வாய மூடுன்னு சொல்றேனில்ல. ஏன் அப்படியே இருந்தாக் கூட ஆம்பளைங்க ஏதேதோ கேக்கத் தான் செய்வாங்க. பொம்பளைங்க நமக்குத் தான் சமாளிக்கத் தெரிஞ்சிருக்கணும்," என்ற அத்தை அவர் பாட்டுக்குப் பேசிக்கொண்டே... ம்கூம் திட்டிக்கொண்டே செல்ல, மறுத்து எதையும் பேசத் தோன்றாமல் அப் படியே நின்று விட்டிருந்தாள்.

"இது தான் கடைசி. இனிமேல் உம் புருஷங்கிட்ட எதாவது கம்ப்ளெயிண்டக் கொண்டு போன அப்புறம் நடக்கறதே வேற. என்ன வாயத் திறந்து பேசு...." என்ற அத்தையை நிமிர்ந்து பார்த்தவள், கடைசியில் வேறு

வழியில்லாமல் சரி என்பதைப் போலத் தலையை ஆட்டி னாள்.

என்ன யோசித்தும் தான் செய்த தவறு என்னவென்று தான் அவளுக்குப் புரிந்திருக்கவே இல்லை.

''இனியொரு தடவ உம் புருஷங் கேட்டா என்ன சொல்லுவ?''

''சாப்டாச்சுன்னு...''

''சை! என்ன ஜென்மமோ! சரிசரி. மரம் மாதிரி அப் பிடியே நின்னுட்டிருக்காம டீ போடு. போட்டுட்டு மட்டும் உக்காந்துக்காத. எல்லாத்துக்கும் கொண்டு போய்க் குடு.''

''சரி அத்தெ...''

மீண்டும் என்ன தோன்றியதோ...

''வேண்டாம். நீ போய்ப் பாத்திரத்தையெல்லாம் எடுத்துப் போட்டுக் கழுவு. நான் டீ போட்றேன்,'' என்று தனது அத்தை வர, அவர் சொன்னது போலச் சென்று பாத்திரங்களைக் கழுவத் தொடங்கி விட்டிருந்தாள் இந்துரேகா.

சாப்பிடத் தான் எப்படியோ பற்றாமல் போய் விட்டது, பரவாயில்லையென்று மனதைத் தேற்றிக் கொண்ட தோடு, அதை அத்தோடு மறந்து விடவும் முயற்சி செய்து கொண்டிருந்தவளுக்கு, வேண்டுமென்றே அவர் தனக்கு டீயும் தராததைத் தான் அவளால் ஏனோ தாங்கிக் கொள்ளவே முடிந்திருக்கவில்லை.

''டீயும் குறைவாகக் கலக்கி விட்டேன் போலிருக்கிறது. உனக்கு நீயே கலக்கிக் குடித்துக் கொள்!'' என்று தனது



அத்தை ஒரு வார்த்தை சொல்லியிருந்தாலும் கூட அவளுக்கு மனம் ஆறியிருக்குமோ என்னவோ. தான் ஒருத்தி அங்கு இருப்பதையே அவர் கண்டு கொள்ளா மல் சென்றதில் தான் அவளுக்கு மனம் மிகவும் பாரமாகி விட்டிருந்தது.

முயன்று வேலைகள் அனைத்தையும் செய்து முடித் தாள்.

தாயின் நினைவு தான் வந்தது.

உடனே கண்ணோரம் கரித்துக் கொண்டு வர, வேண்டாம் மனமே வேண்டாமென்று மீண்டும் வேலை யில் கவனத்தைத் திருப்பித் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

நேரம் கழித்து எண்ணெய்ப் பதார்த்தம் சாப்பிட்டதால் பாதிப்பேருக்கும் மேலாக இரவு டிஃபன் வேண்டா மென்று விட, சாப்பிட வந்தவர்களுக்கு மட்டும் தனது அத்தை வந்து சொல்லிவிட்டுச் சென்றது போல சூடாக மிளகு ரசம் வைத்து மதியம் வடித்த சாதமே நிறைய இருக்க, அதனோடு சேர்த்து டைனிங் டேபிளில் எடுத்து வைத்து விட்டிருந்தாள் இந்துரேகா.

ஒரு வழியாகத் தானும் உண்டதாகப் பெயர் செய்து விட்டு மேலும் அனைத்தையும் ஒதுக்கி வைத்து விட்டு அவள் தங்களுடைய அறைக்கு வந்து சேர்ந்த போது நேரம் இரவு பத்துக்கும் மேலேயே ஆகி விட்டிருந்ததைக் கண்டாள்.

கடுகடுவென்றிருந்த கணவனின் முகத்தைப் பார்க் கவே ஏனோ பயமாக இருக்க, இரவு உடையை எடுத்துக் கொண்டு குளிப்பதற்காகச் சென்று விட்டிருந்தாள்.

குளியலறைக்குள் வந்து கதவைத் தாழிட்டவளுக்கு அதற்குப் பிறகு தான் இயல்பாக மூச்சுக் கூட விட முடிந்தது.

இனி கணவனுக்கு என்ன ஆயிற்று? அவன் ஏன் இன்னும் கோபமாக இருக்கிறானென்று நினைத்த வளுக்கு ஏனோ ஒரு மூச்சு அழ வேண்டும் போலத் தோன்றியது.

ஆனாலும் தன்னை முயன்று கட்டுப்படுத்திக் கொண் டாள்.

நல்ல வேளையாகக் கணவன் நேரத்திலேயே ஹீட் டரைப் போட்டு விட்டிருப்பான் போல, கொதிக்கக் கொதிக்க சுடுநீர் விழ அசதி போக நன்கு குளித்தாள்.

மிகவும் பொறுமையாகவும் தான். தன்னைச் சமனப் படுத்திக் கொள்ள அவளுக்கு அந்த இடைவெளி தேவை யாக இருந்தது.

இந்துரேகாவின் மனநிலை அப்படியிருக்க, வெளியே இருந்த தனது கணவனின் மனநிலையைப் பற்றியோ அவள் சுத்தமாக அறிந்திருக்கவில்லை.

தான் ஊரில் இருந்த போது தான் மனைவியிடம் விருப்பப்படும் போது பேச முடியாமல் காதலிப்பவர்கள் திருட்டுத்தனமாகப் பேசுவது போல இரவு பத்தரை பதினொரு மணிக்குப் பிறகு அழைத்துப் பேசுவோம் என்றால் இங்கேயும் அதே நிலை தானா என்று எரிச்ச லாக வந்தது ரகுபாலனுக்கு.

அது மட்டுமா? திருமணமான இத்தனை நாட்களில் ஒரு முறை கூடத் தான் ஆசையாகப் பேச அழைக்கும்



போது மனைவி போனை எடுத்ததே இல்லையே என்றும்.

அவளாக வந்து பார்த்து விட்டு எப்பொழுது அழைக் கிறாளோ அப்பொழுது தானே பேச வேண்டியிருந்தது.

அதற்குக் காரணமும் தாய் மனைவிக்குக் கொடுக்கும் அதிகப்படியான வேலைகள் தான் என்பதும் ஒன்றும் அவன் அறியாததல்லவே.

பாவம், மனைவி என்று அவனுடைய உள்ளம் உரு கியது.

ஏன் தனது தாய் இப்படி இருக்கிறார் என்றும் அவனால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

ருசியாக இருக்கிறதென்று தான் உண்ட பஜ்ஜிகள் அனைத்தும் இப்பொழுது வயிற்றுக்குள் பிசைவதைப் போல உணர்ந்தான்.

மனைவி ஒன்று கூட உண்டிருக்காத போது....

அதே நேரம் பாத்ரூம் கதவு திறக்கப்பட, வெளியே வந்த மனைவியைப் பார்த்தான் ரகுபாலன்.

மேலும் சில வினாடிகளில் படுக்கைக்கு வந்திருந் தாள் இந்துரேகா.

''நானெல்லாம் ஆம்பளையே இல்லமா!''

அந்த அளவிற்கு விரக்தியான வார்த்தைகள் கணவ னிடமிருந்து வருமென்று அவள் துளியும் எதிர்பார்க்க வில்லை.

துடித்துப் போய் அந்த வினாடியே திரும்பிக் கண வனைப் பார்த்தாள்.

''அதுல என்ன சந்தேகம்னு கேக்கறியா?''

''ரகு.''

''ஏன் இவ்வளவு நேரம்?''

அப்படிக் கேட்ட தன்னை மனைவி புரியாமல் பார்க்க, ''அவ்வளவு வேலையா?'' என்று கேட்டான்.

''அப்பிடியெல்லாம் ஒன்றுமில்ல...''

''என்ன சாப்புட்ட?''

''சாப்பாடு...'

''பஜ்ஜி ஒரு பீஸ் கூட சாப்புட்ல இல்லையா?''

''............''

''ஏம்மா இப்பிடி யிருக்க?''

''............''

''சாதாரணமாப் பாக்கும் போது இது ரொம்பவும் சின்ன விஷயம் தான். ஆனா இதே மாதிரி இனி எத்தன தடவ நடந்திருக்கோ...''

''அப்பிடி யெல்...''

''அவசியமில்லாமப் பேசறது எவ்வளவு பெரிய தப்போ, அதவிடப் பெரிய தப்பு அவசியமான இடத்துல பேசாம இருக்கிறது. கட்டின பொண்டாட்டியக் கூட சந்தோஷமா வெச்சுக்க முடியாத நானெல்...''

''ப்ளீஸ் ரகு...''

தனக்காகக் கணவன் படும்பாடு இந்துரேகாவை நெஞ்சு நெகிழச் செய்திருந்தது.



அந்த வினாடியே கண்களும் கலங்கி விட்டிருக்க, உதட்டைக் கடித்துத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முயன்றாள்.

முயன்றாள். அவ்வளவே.

கணவனின் அந்தப் பார்வையில், அவ்வளவு நேரமும் அடக்கி வைத்ததற்கெல்லாம் சேர்த்து அழுது விட்டிருந் தாள்.

''இந்து...'' என்று அருகில் வந்த கணவனின் மார்பி லேயே விழுந்து கதறத் தொடங்கி விட்டிருந்தாள்.

மனைவியின் அந்த அழுகை அவனையும் என்னவோ செய்து விட்டிருக்க, எதையும் செய்வதறியாது மனை வியை மிருதுவாக அணைத்துக் கொண்டபடி அப்படியே நின்று விட்டிருந்தான்.

மனைவியின் அழுகை சுத்தமாக ஓயும்வரை அப் படியே நின்றிருந்தவன், பிறகு அவளை அழைத்துக் கொண்டு வந்து கட்டிலில் அமர்த்தித் தானும் அருகில் அமர்ந்து கொண்டான்.

ஏதேதோ எண்ணங்கள் தோன்ற, அப்படியே கண வனின் தோளில் சாய்ந்து கண்களை மூடிக்கொண்டாள்.

''இந்து, என்னமா?''

''என்னன்னு தெரியல ரகு. ஏனோ மனசுக்கு ரொம்பக் கஷ்டமா இருந்தது.''

''...............''

''ஆனா இப்ப சரியாயிடுச்சு!'' என்று புன்னகையுடன் நிமிர்ந்த மனைவியைப் பார்த்தான்.

''ம்கூம். சரியாகக் கூடாதே.''

''ஏனோ?''

''அப்புறம் இந்த நெருக்கம் போயிடுமே. நீ கேப் மெயிண்டெய்ன் பண்ண ஆரம்பிச்சுடுவியே.''

கணவனின் அந்தப் பார்வை ஏதேதோ செய்ய, அப் படியே அவனை இறுக அணைத்துக் கொடியாய்ப் பின் னிக் கொண்டாள் இந்துரேகா.

பூக்குவியலாய் மெத்தென்று தன் மீது வந்து விழுந்த மனைவி, ''ம்... இப்ப என்ன சொல்லப் போறீங்க, அப்பிடி யில்ல தான?'' என்று காதோரம் கிசுகிசுக்க, அவளை அப் படியே எல்லையற்ற காதலுடன் தன் மேலேயே தாங்கிக் கொண்டான் ரகுபாலன்.



# 5

''இந்து.''

''சொல்லுங்க ரகு.''

''இன்னைக்கு நீ வேலைக்குப் போயாகணுமா?''

''பின்ன வேலைக்குச் சேந்தே பதினஞ்சு நாள் தான் ஆச்சு. அதுக்குள்ள லீவ் போட்றதப் பத்தி யெல்லாம் நினைச்சுக் கூடப் பாக்க முடியாதுங்க.''



''பேசாம ரிஸைன் பண்ணிடேன்.''

அப்படிச் சொன்ன கணவனை நம்ப முடியாத ஆச் சரியத்துடன் பார்த்தாள் இந்துரேகா.

''என்னமா?''

''நீங்க ஜோக் எதுவும் அடிக்கலையே.''

''இல்லமா, ஸீரியஸாதான் கேக்கறேன்.''

''சரி. அப்பிடியே ரிஸைன் பண்றேன்னே வெச்சுக் கோங்க. அதுக்குப்புறம் வீட்ல உக்கார்ந்துட்டு என்ன பண்றதாம்?''

''வொர்க் லோட் குறையுமே. ஆஃபீஸ்ல. இங்கன்னு ரெண்டு பக்கமுமே உனக்கு இப்ப வேல அதிகம் தான?''

''ஆஃபீஸ்ல வேல அதிகம்னு சொல்லிட முடியாது. அந்த அளவுக்கு முன் அனுபவமே இல்லாத எனக்கே எத்தன சம்பளம் குடுத்து வெச்சிருக்காங்க. ஒன்னு வேணும்னாப் பண்ணலாம்.''

''என்ன?''

''வீட்ல மேல் வேலைக்கெல்லாம் ஒரு ஆள எடுத் துக்கலாம். நான் வேணும்னா என் சம்பளத்துல இருந்து எடுத்து வேலைக்காரிக்குச் சம்பளம் குடு.....''

''இந்து, கிளம்பு. அப்புறம் வேலைக்கு லேட்டா யிடும்.''

''ஆமாங்க. எதுவா இருந்தாலும் ஈவினிங் பேசிக்க லாம்,'' என்று தானும் கணவனுடன் அறையை விட்டு வெளியே வந்தாள் இந்துரேகா.

எப்பொழுதும் கிளம்பும் நேரத்திற்கு இன்னும் அரை மணி நேரத்திற்கும் மேலாகவே இருக்க, நேராகச் சமையலறைக்கு வந்தாள்.

''இது தான் வர்ற நேரமா?''

தனது அத்தை கேட்க, இதே கேள்வியைப் பெரிய மருமகளிடம் கூடக் கேட்கலாமே என்று இந்து ரேகா வால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

ஏன் அவள் இன்னும் படுக்கையை விட்டே கூட எழுந்தது போலத் தெரியவில்லையே.

''உன்னைத்தான். வாயில என்ன கொழுக்கட்டையா?''

''கொஞ்சம் லேட்டாயிடுச்சு. அத்...''

''கொஞ்சமா?'' என்று நன்றாகவே சிரித்த மதுர வாணி, ''சரிசரி. இனி வேலைக்கு நேரமாயிடுமே. கிளம்பு கிளம்பு,'' என்றார்.

அப்படிச் சொன்னவரை இப்படிச் சொன்னால் எப்படி என்பதைப் போலப் பார்த்தாள் இந்துரேகா.

சமையல் எந்த அளவிற்கு ஆகியிருக்கிறது என் பதைப் பார்வையிலேயே அளவிட்டாள்.

''என்ன பாக்கற?''

''இல்ல, என்ன ஆகியிருக்குன்னு பாத்தேன், அத்தெ...''

''இன்னும் எதுவும் ஆகல. இப்பதான் காபி வேலையே முடிஞ்சிருக்கு.''

சரி தான். தானாவது தனது அத்தையுடன் சேர்ந்து எதையாவது செய்யலாமென்று நினைத்தவள் பிறகு அதற்கும் நேரமில்லாததைக் கண்டாள்.



சரி தான் என்று நேராகச் சென்று தனக்கும் கண வனுக்குமாகக் காபியைக் கலக்கியவள், ஒன்றைக் கணவ னிடம் கொண்டு போய்க் கொடுத்து விட்டு வந்தவள், மற்றொன்றைத் தான் எடுத்துக் கொண்டாள்.

காபியைப் பொறுமையாகக் குடித்து முடித்தவள், ரொட்டியையும் ஜேமையும் மட்டும் மதிய உணவிற்காக டிபன் பாக்ஸில் எடுத்துக் கொண்டு கிளம்பியே விட் டிருந்தாள்.

கணவன் பைக்கை எடுத்து வந்து வெளியே நிறுத்தி யிருக்க, ஏறி அமரப் போன போது தான் வாட்ச் கட்டாத தனது இடது கையைப் பார்த்தாள்.

வலது கையிலும் ஒற்றை வளையலை மட்டுமே அணிந்து கொண்டிருந்தவள்,

''ஒரு நிமிஷம். நான் போய் வாட்ச்ச எடுத்துட்டு வந்துட்றேன்,'' என்று வேகமாக நகரப் போனாள்.

''அந்த பேக்கையும் எதுக்கு சுமக்கற, குடுத்துட்டுப் போ.''

கணவன் கேட்க, ''சரி, இந்தாங்க,'' என்று கைப் பையைக் கொடுத்து விட்டு வீட்டிற்குள் வேகமாக வந் தாள்.

மனைவி கொடுத்து விட்டுப்போன கைப்பையை வாங்கி வண்டியின் மேல் வைக்கப் போனவன், சிறிதும் கனமே இல்லாத அந்தப் பையை ஆச்சரியத்துடன் தூக்கிப் பார்த்தான்.

சில வினாடிகள் தான். ஒரு வேளை டிபன் பாக்ஸை எடுத்து வைக்க மறந்திருப்பாளோ என்று பையைத் திறந்து பார்த்தான்.

திறந்து பார்த்தவனுக்கு உள்ளே இருந்த மூன்று ப்ரட் ஸ்லைஸ்களையும், ஜேமையும் பார்த்து எரிச்சல் தான் வந்தது.

அப்போதைக்கு டிபன் பாக்ஸை மூடி வைத்து விட்டு மனைவிக்காகக் காத்திருக்கலானான்.

சில வினாடிகளில், ''என்னங்க, கிளம்பலாமா?'' என்று வந்த மனைவியிடம் கைப்பையைக் கொடுத்து விட்டு பைக்கையும் ஸ்டார்ட் செய்திருந்தான்.

ஏன் இப்படி என்று கேட்க நினைத்தவன் தாமதமாகி விட்டதே என்ற மனைவியின் பதட்டத்தில் பேசாமல் பைக்கை ஸ்டார்ட் செய்திருந்தான்.

உரிய நேரத்தில் மனைவியை அவள் வேலை செய்யும் கம்பெனியில் இறக்கி விட்டிருந்தவன் அடுத்த இருபத்தைந்து நிமிடங்களில் வீட்டிற்கும் வந்து சேர்ந் திருந்தான்.

அப்பொழுது தான் சோம்பல் முறித்துக் கொண்டே படுக்கையை விட்டு எழுந்து வந்த அபர்ணாவைப் பார்த் தான் ரகுபாலன்.

இதென்ன, விட்டால் மதியம் வரை தூங்குவாள் போலிருக்கிறதே என்று நினைக்கத் தோன்றியது.

''வெளிய போய்ட்டு வர்றீங்க போலிருக்கு ரகு?''

''ஆமாம்.''

''நீங்க எப்பிருந்து வேலைல ஜாய்ன் பண்ணணும்?''

''மண்டேல இருந்து போக வேண்டியதிருக்கும்.''



''இங்கிருந்து கோயமுத்தூர் போய்ட்டு வரணும்னா ரூ அவர்ஸ் ட்ரேவல் பண்ண வேண்டியதிருக்குமே, தினமும். என்ன பண்ணப் போறீங்க?''

''அது சரி தான். பாக்கலாம்.''

அதே நேரம் ஹாலுக்கு வந்த மதுரவாணி, ''சாப்பிட லாம், வாங்க,'' என்று அனைவரையும் பொதுவாக அழைத் தார்.

''இதோ, பத்து நிமிஷத்துல நான் வந்து எடுத்து வைக்கறேன் அத்தெ,'' என்று அபர்ணா நகர, ''என்னமா டிபன் இப்பதான் தயாராச்சா?'' என்று கேட்டான் ரகு பாலன்.

''இல்லப்பா, அது தயாராகி ரொம்ப நேரமாச்சு. ஆனா யாரு கூப்புட்ட உடனே சாப்புட வர்றாங்க?'' என்றார்.

''ஓ, அப்புறம் ஏன் இந்து லஞ்ச் எடுக்காமப் போனா?''

''லஞ்ச் மட்டுமா எடுக்காமப் போனா, காலைலயும் எதுவும் சாப்பிடாம தான் போறா. எதுவா இருந்தாலும் கொஞ்சம் நேரத்துல அடுப்படிக்கு வந்தாதான்பா முடியும். இல்லன்னாக்...''

''அப்புறம் சுசி, சுபா ரெண்டு பேரும் டிபன் பாக்சுக்கு என்ன எடுத்துட்டுப் போனாங்க?''

''அவங்க இந்துவுக்கு அப்புறம் கொஞ்ச நேரம் கழிச்சு தான போறாங்க...''

''அது சரிதான்மா,'' என்று அத்தோடு அந்தப் பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டிருந்தான் ரகுபாலன்.

என்ன, தனது தங்கைகள் இருவரும் மனைவிக்குப் பிறகு பத்து நிமிடங்கள் கழித்துச் செல்கிறார்கள்,

அவ்வளவே, மிஞ்சிப் போனால் பதினைந்து நிமி டங்கள்.

முன்னுக்கு முரணாகப் பேசிய தாயின் வார்த்தை களில், ஏன் இப்படி மாறிப் போய் விட்டார் என்று மட்டும் நினைத்துக் கொண்டான்.

நேரத்திற்குச் சாப்பிட வருபவர்களுக்கு அனைத்து டிபன்களுமே தயாராகிறதென்றால் பதினைந்து நிமிடங் கள் முன்னால் வருபவர்களுக்கு அதில் ஒன்றேனும் தயாராகியிருக்க வேண்டுமல்லவா?

ஒருவேளை தயாராகி இருந்தும் மனைவி தான் கவ னிக்காமல் விட்டு விட்டாளோ?

''வேலைக்குக் கிளம்பறதுக்கு ஒரு ரெண்டு மணி நேரம் முன்னாடியே இந்து அடுப்படிக்கு வந்து உத வணும் ரகு. அப்பதான் என்னாலயும் சமையல முடிச்சு எல்லாத்தையும் தயாரா டேபிள் மேல எடுத்து வைக்க முடியும்.''

மகனின் உணர்ச்சி துடைக்கப்பட்ட முகத்தைப் பார்த்த மதுரவாணி அதற்கு மேல் எதையும் பேசாமல் விட்டு விட்டிருந்தார்.

சிறிது நேரத்தில் அனைவரும் சாப்பிட்டு முடிய, மனைவிக்கு மதிய உணவை டிபன் பாக்ஸில் எடுத்துக் கொண்டு கிளம்பி விட்டிருந்தான் ரகுபாலன்.

''ரகு.''

''சொல்லுங்கமா.''

''என்னப்பா, உம் பொண்டாட்டிக்கு சாப்பாட்ட எடுத் துக்கிட்டு இன்னொரு தடவ அவ்வளவு தூரம் போகப் போறியா?''



''இந்துவோட கம்பெனிக்கு மூணு கிலோ மீட்டர் முன்னாடி வரைக்கும் போயாக வேண்டிய வேல ஒன்னு இருக்கு. அப்பிடியே இதயும் கொண்டு போய்க் குடுத் துட்றேன்.''

''ஆனாலும் அலச்சல் தானேப்பா.''

அப்படிச் சொன்ன தாயைச் சில வினாடிகள் பார்த் தவன், பிறகு, ''நான் வர்றேம்மா,'' என்று கிளம்பி விட் டிருந்தான்.

சரியாக மதிய உணவு இடைவேளைக்குப் பத்து நிமிடங்கள் முன்னதாகத் தனக்குக் கணவனிடமிருந்து அழைப்பு வர, எடுத்துப் பேசினாள் இந்துரேகா.

சில வினாடிகள் பேசியவள், ''சரிங்க, வர்றேன்,'' என்று போனை வைத்திருந்தாள்.

சொன்னது போல, ''என்னங்க இந்த நேரத்துக்கு?'' என்று வந்த மனைவிக்காக முன் பக்கக் கார் கதவைத் திறந்து விட்டவன், ''உள்ள வந்து உக்காரு,'' என்றான்.

மனைவி ஏறிக்கொண்டு கதவை மூட, காரை ஸ்டார்ட் செய்திருந்தவன் நேராகச் சென்று சற்று தொலைவில் இருந்த ஆள் நடமாட்டம் அவ்வளவாக இல்லாத அந்தப் பெரிய மரத்தடியில் நிறுத்தினான்.

''என்னங்க?'' என்பதைப் போலப் புரியாமல் பார்த்த மனைவியிடம், ''இந்தா, சாப்புடு,'' என்று வீட்டிலிருந்து கொண்டு வந்திருந்த டிபன் பாக்ஸை எடுத்து நீட்டினான் ரகுபாலன்.

''என்ன ரகு இது?'' என்று கவரிலிருந்து லஞ்ச் பாக்ஸை வெளியே எடுத்துக் கொண்டே கேட்டாள் இந்துரேகா.

''எது?''

''இந்த லஞ்ச்சத்தான் கேக்கறேன்,'' என்று டிஃபன் பாக்ஸைத் திறந்து கொண்டே கேட்டவளுக்கு அந்தப் பதார்த்தங்களின் கமகமவென்ற வாசனையில் வயிற்றின் பசி முழுமையாக உறைத்தது.

''ஏன், நீ கொண்டு வந்த மூணு பிரட்டே போதுமா - அதுவும் காலைலயும் எதுவுமே சாப்பிடாம வந்துட்டு?''

''..........''

''என்ன பாக்கற? சீக்கிரமா சாப்புடு. அப்புறம் லேட் டாயிடப் போகுது.''

''உங்களுக்கு?''

''நான் இனி நேரா வீட்டுக்குத் தான்.''

என்ன தான் குனிந்தபடி சாப்பிடுவதில் முனைந் திருந்தாலும் கணவனின் அன்பில் இந்துரேகாவின் கண்கள் அவளையறியாமலேயே கலங்கி விட்டிருந்தன.

ஆனாலும் குனிந்து சாப்பிடுவதில் மும்முரமாக இருப் பதைப் போலக் காட்டிக் கொண்டாள்.

அதே சமயம் ரகுபாலனுடைய கவனமும் முழுக்க மனைவியின் மீது தான் இருந்தது.

உணவு உள்ளே சென்ற வேகமே மனைவிக்கிருந்த பசியைத் துல்லியமாக எடுத்துக் காட்டியது.

பத்து நிமிடங்களில் சாப்பிட்டே முடித்திருந்த இந்து ரேகா டிபன் பாக்ஸைப் பழையபடி மூடிக் கவருக்குள் வைத்து விட்டுக் கார் கதவைத் திறந்து கைகளைக் கழுவிக் கொண்டாள்.



இனி எத்தனை முறை இதே போல சாப்பிடாமல் கூட வந்தாளோ? தான் நினைத்ததை அப்படியே மனைவி யிடம் கேட்டான் ரகுபாலன்.

''அச்சச்சோ! என்னங்க நீங்க. இன்னைக்கு இப்பிடி ஆனது தான் ஃபர்ஸ்ட் டைம்...''

மேலும் சில நிமிடங்களும் கூட மனைவியிடம் பேசிக் கொண்டிருந்த ரகுபாலன் அதற்குப் பிறகே மனைவியைக் கொண்டு போய்ப் பழையபடி அவளுடைய கம்பெனி யில் விட்டுவிட்டுக் கிளம்பினான்.

# 6

தொடர்ந்து வந்த ஒரு வாரத்தில் ரகுபாலன் தானும் வேலைக்குச் செல்லத் தொடங்கியிருந்தான்.

கணவனும் மனைவியும் காலையில் ஒன்றாகக் கிளம்பிச் சென்றார்களென்றால் மாலையில் முதலில் இந்துரேகாவும் அவளைத் தொடர்ந்து ஒரு மணி நேரத் தில் ரகுபாலனும் வந்து சேர்வது வழக்கமாகி விட் டிருந்தது.

ஒரு சில நாட்களில் இருவரும் ஒன்றாகவும் வந்தார் கள்.

மணமான அந்த ஒன்றரை மாதங்களில் உறவினர்கள் வீடு என்று எங்குமே சென்றிருக்காததால், இப்பொழுது

சில நாட்களாகத் தினமும் மாலையில் ரகுபாலன் மனைவியுடன் வெளியே சென்று விடுவது வழக்கமாகி விட்டிருந்தது.

கணவன் வீடு திரும்புவதற்குள் இந்துரேகா தயாராக இருந்தாள் என்றால், அவன் வந்ததும் அடுத்த பத்து, பதினைந்து நிமிடங்களில் இருவரும் வீட்டை விட்டுக் கிளம்பி விடுவார்கள்.

அப்படிச் சென்றார்களென்றால் அவர்கள் மீண்டும் வீடு திரும்பும் போது இரவு பத்துக்கு மேலேயே ஆகி விடும்.

இப்பொழுதெல்லாம் இந்துரேகா வீட்டு வேலைகள் எதையுமே செய்வதில்லை.

அதாவது செய்ய அவள் வீட்டில் இருப்பதில்லை.

தான் ஒன்றும் செய்யாததைத் தனது அத்தை சுட்டிக் காட்டிப் பேசிக் கொண்டே இருப்பது நாளுக்கு நாள் அதிகம் தான் ஆனது, அதாவது அவளுடைய கணவன் ரகுபாலன் அறியாத வண்ணம்.

அதிலும் இப்படியெல்லாம் தண்டச் சோறு தின்னால் எப்படி செரிமானம் ஆகும் என்று தனது காதுபடவே அதை இன்னும் மோசமான வார்த்தைகளில் தனது அத்தை கேட்டதில் தான் துடித்துப் போய் விட்டாள்.

நல்ல வேளையாக யாருமில்லையென்று மனதைத் தேற்றிக் கொண்டவள், ''எப்பாடு பட்டேனும் இனிமேல் பழையபடி அனைத்து வேல்லைகளையும் செய்யத் தொடங்கி விடுகிறேன் அத்தை!'' என்று உறுதி கொடுத்தாள்.



அன்று வழக்கத்தை விடவும் சற்று நேரத்திலேயே வந்திருந்த ரகுபாலனும் அவர்கள் பேசியதனைத்தையும் கவனிக்கும்படி நேர்ந்தது, எதிர்பாராத விதமாகத்தான்.

இதற்கிடையில் தனது முதல் மாதச் சம்பளத்தை வாங்கிக் கொண்டு வந்தாள் இந்துரேகா.

தனது நாத்தனார்கள் இருவரும் தினமும் கேட்டுக் கொண்டே இருந்ததைப் போல ட்ரீட் கொடுக்க முடிவு செய்தாள்.

ஆனால் இந்துரேகா அதை வெளிப்படுத்திய போது வெறும் ட்ரீட் மட்டும் தானா என்று கேட்டார்கள்.

வேறென்ன வேண்டுமென்று இந்துரேகா கேட்க, நீங்கள் வாங்கிக் கொடுத்தீர்களென்று அனைவரிடமும் பெருமையாகக் காட்டிக் கொள்ளும்படி இருந்தால் பரவாயில்லை என்றார்கள்.

நன்கு யோசித்துப் பார்த்தபோது துணி தான் சரியான தேர்வாகப்பட்டது இந்துரேகாவிற்கு.

அதை அவள் வெளிப்படுத்திய போது யோசனையுடன் என்றாலும் அனைவருமே சரியென்றார்கள்.

மறுநாள் ஞாயிறு விடுமுறை நாளாகவும் இருந்ததால் மதுரவாணியைத் தவிர மற்றப் பெண்கள் நால்வரும் ஒன்று சேர்ந்து பர்ச்சேஸ் செய்வதற்காகக் கிளம்பி விட்டிருந்தார்கள்.

மதுரவாணி தானும் தனது கணவனுடன் தோட்டத்திற்குக் கிளம்பிச் சென்று விட்டிருக்க, ஒரு வழியாக ஒருவர் விடாமல் அனைவருக்கும் துணிகளை எடுத்துக்

கொண்டு வீடு திரும்பிய போது மாலையாகி விட்டிருந்தது.

சற்று நேரத்தில் வந்து விடுவதாகத் தாய் அழைத்துச் சொன்னாரென்று பொதுவாக சுசித்ரா சொன்னதைக் கேட்டாள் இந்துரேகா.

ஏதோ வேலையாகக் காலையில் கிளம்பிச் சென்ற கணவனை இன்னும் காணவில்லையே என்று இந்து ரேகா நினைத்துக் கொண்டிருக்கும் போதே உள்ளே வந்தான் அவளுடைய கணவன் ரகுபாலன்.

''வாங்க.''

''என்னமா பர்ச்சேஸ்லாம் முடிஞ்சதா?''

''ஆமாம் ரகு. எல்லாத்தையும் முடிச்சுட்டு இப்பக் கொஞ்சம் முன்னாடி தான் வீடு வந்து சேந்தோம்.''

யார் யார்க்கு என்னென்ன என்பதைப் பற்றியெல்லாம் கணவன் கேட்க, சொன்னாள் இந்துரேகா.

''செலவு எவ்வளவு ஆச்சு?''

''அது எதுக்கு...''

''எவ்வளவு சொல்லு?''

''நாப்பதாயிரத்து எண்ணூறு ரூபாய் ஆச்சு.''

அப்படிச் சொன்ன மனைவியை எதுவும் பேசாமல் பார்த்தான் ரகுபாலன்.

''............''

''உனக்கென்ன வள்ளல் பரம்பரைல இருந்து வந்ததா நினைப்பா?''



''ஏங்க...''

''ஒரு அளவில்ல?''

''இதவிடக் குறைவா எப்பிடி எல்லாருக்கும் எடுக்க முடியும்? அதுவும் லேடிஸ் எல்லாருக்குமே பட்டுச்சேலை எடுத்திருக்கும் போது...''

நேராகச் சென்று பீரோவைத் திறந்திருந்த ரகுபாலனே, ஒரு நோட்டுக் கற்றையை எடுத்து வந்து மனைவியின் கைகளில் திணித்திருந்தான்.

''............''

''என்ன பாக்கற, பஸ்ல வர்றதுக்கு ரொம்ப சிரமமா இருக்கு, முதல் மாச சம்பளத்துல ஒரு ஸ்கூட்டி வாங்கிக் கறேன்னு சொல்லிட்டிருந்த?''

''அது அடுத்த மாசம்...''

''பரவாயில்லமா, இந்தப் பணத்துல நீ ஸ்கூட்டி வாங்கிக்கோ...''

''இல்ல, அடுத்த...''

''சொன்னாக் கேளு இந்து. பணத்த எடுத்து உள்ளவை. நாளைக்கே வண்டிய எடுத்துடலாம்.''

கணவனின் அந்த வார்த்தைகளுக்கு மேல் இந்து ரேகாவாலும் மறுத்து எதையும் சொல்ல முடிந்திருக்கவில்லை.

பேசாமல் பணத்தை எடுத்துத் தனது கைப்பைக்குள் வைத்துக் கொண்டாள்.

''இந்து.''

''என்ன ரகு?''

''எங்காவது வெளிய போய்ட்டு வரலாமா?''

''எங்க?''

''சினிமாவுக்கு.''

''வாவ் சுசி, சுபா எல்லாரையுமே கூடக் கூட்டிட்டுப் போலாம்...''

''அப்ப எங்கயும் வேண்டாம். வீட்லயே இருந்துக் கலாம்,'' என்று ஒரு மாதிரியாகச் சொன்ன கணவனைப் பார்த்தாள் இந்துரேகா.

''சரி ரகு. நாம போய்ட்டு வரலாம்...''

அதற்கு மேல் மனைவியைப் பேச அவன் விட்டிருக்க வில்லை.

மனைவியை இழுத்து அணைத்திருந்தவன், சிறிது நேரம் தனது அணைப்பில் வைத்திருந்து விட்டு அதற்குப் பிறகே விடுவித்தான்.

திடீரென்று அணைப்பிலிருந்து விடுவித்ததும் நிற்க முடியாமல் தள்ளாடிய மனைவியைத் தன் மேலேயே தாங்கிக் கொண்டவன்,

''என்னடா, கிளம்பலாமா?'' என்று கேட்டான்.

''ம்.''

''அப்ப சீக்கிரம் கிளம்பு.'

அடுத்த அரை மணி நேரத்தில் கணவனுடன் கிளம்பி வெளியே வந்திருந்தாள் இந்துரேகா.



சரியாக அதே நேரம் தனது அத்தையும் வர, என்ன சொல்லி விடுவாரோ என்று அவளுடைய நெஞ்சு பட படவென்று அடித்துக் கொண்டது.

ஆனால் வழக்கம் போலக் கணவனுக்கு முன்னிலையில் தனது அத்தை எதையும் பேசாததில் சற்று நிம்மதியாகவும் உணர்ந்தாள்.

ஆனால் அதெல்லாம் வீட்டை விட்டுக் கிளம்பிச் சிறிது தூரம் செல்லும் வரை மட்டும் தான். அதற்குப் பிறகு வழக்கம் போலக் கணவனின் அருகாமையில் மற்ற அனைத்தையுமே மறந்து போய் விட்டிருந்தாள்.

சினிமா முடிந்து அவர்கள் மீண்டும் வீடு வந்து சேர்ந்த போது நேரம் இரவு பத்து மணி ஆகியிருந்தது.

அன்று ஏனோ இருவருக்குமே வெளியே சாப்பிடப் பிடித்திருக்காததில், இரவு உணவுக்கு வீட்டிற்கே வந்திருந்தார்கள்.

ஆனால் வீடு வந்து சேர்ந்தவர்களுக்கு அதற்குப் பிறகு தான் வீட்டிலும் ஒன்றுமில்லை என்பது தெரிந்தது.

கழுவிக் கவிழ்த்து வைக்கப்பட்டிருந்த பாத்திரங்களைப் பார்த்துவிட்டு, சாப்பிட எதுவுமில்லை, இனி தான் எதையாவது செய்ய வேண்டும், சற்றுப் பொறுத்திருக்க முடியுமா என்று கணவனிடம் கேட்பதற்காக வெளியே வர எத்தனித்தாள் இந்துரேகா.

ஆனால் அதே நேரம் சமையலறை வாசலில் வந்து நின்றிருந்த தனது அத்தை மதுரவாணியைப் பார்த்தாள்.

''என்ன பாக்கற? என்னவோ பெரிய இவ மாதிரி இனிமேல் எல்லாத்தையும் நானே பண்ணிக்குவேன்னு சொன்ன?''

''..........''

''அதுலயும் சம்பாதிக்க ஆரம்பிச்சுட்டோங்கற திமிர் உனக்கு ரொம்பவும் அதிகமாயிடுச்சு, இல்லையா? நீ எனக்கு வாங்கிட்டு வந்த சேலையக் கொண்டு போய்க் குப்பைல போடு. இனிமேல் இந்த மாதிரி அதிகப் பிரசங்கித் தனமெல்லாம் பண்ணிட்டிருந்த, அப்புறம் நடக்கறதே வேற.''

கடவுளே! ஏன் இப்படிச் சொல்கிறார்.

''நாப்பதாயிரத்துக்குத் துணி எடுத்திருக்க! நீயெல்லாம் ஒரு குடும்பப் பொம்பளதானா?''

எடுப்பதும் ஆயிற்று என்று அனைவரும் விருப்பப்பட்டபடி எடுத்தேன். இனி தேர்வு செய்து வைத்து விட்டவர்களிடம் போய் அது விலை மிகவும் அதிகமாக இருக்கிறது, வேண்டாமென்று சொல்ல முடியுமா?

ஏன் அப்படியிருந்தும் கூடக் கையில் இவ்வளவு தான் இருக்கிறது, அதற்குள் முடித்துக் கொண்டால் பரவாயில்லையென்று நாமும் சில முறை சொல்லத்தானே செய்தோம்.

''சரி சரி. கல்லு மாதிரி நின்னுட்டிருக்காம, தோசைக்குக் கல்ல வெச்சுட்டு சட்னிக்குப் போடு. ரகு பசியோட உக்காந்திருக்கான்.''

''இந்தா, எடுத்துக்கோ,'' என்று தனக்கு முன்னால் வந்து விழுந்த கவரைக் குனிந்து எடுத்தாள் இந்துரேகா.



பிரித்துப் பார்த்ததில் தான் அவருக்குத் தான் எடுத்திருந்த பட்டுச் சேலை அது என்பது தெரிந்தது. அவருடைய செய்கையில் மனதளவில் துடித்துப் போனாள்.

''இனிமேல் இந்த மாதிரி வேலையெல்லாம் எங்கிட்ட வெச்சுக்காத. எனக்கு எடுத்துக் குடுக்கறதுக்கு நீ யாரு? இனியும் அந்த மாதிரி ஒரு கேவலமான நிலையெல்லாம் எனக்கு வரல!'' என்று விட்டுத் தனது அத்தை செல்ல, அவர் சென்ற திசையையே பார்த்தபடி நின்று விட்டிருந்தாள் இந்துரேகா.

ஆசையுடன் எடுத்துக் கொடுத்ததற்குப் பாராட்ட வேண்டாம், புகழ வேண்டாம், கடைசிக்குத் திட்டாமலாவது இருக்கக் கூடாதா என்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

சிறிது நேரத்தில் கணவன் வந்து உண்டு விட்டுச் செல்ல, தானும் உண்டதாகப் பெயர் செய்து விட்டு, அனைத்தையும் ஒதுக்கி வைத்து விட்டுத் தூங்குவதற்காக வந்தாள்.

கணவன் கம்ப்யூட்டரில் ஏதோ வேலையில் மும்முரமாக இருப்பது தெரிய, பேசாமல் சென்று படுத்து விட்டிருந்தாள்.

காலையிலிருந்து இருந்த மிகுந்த அலைச்சலினாலோ என்னவோ, படுக்கையில் விழுந்தவள் தான், அடுத்த சில நிமிடங்களில் தூங்கியும் போய் விட்டிருந்தாள்.

கணவன் நன்கு தூங்கிக் கொண்டிருப்பது தெரிய, காலையிலும் நேரத்திலேயே எழுந்து சமையலறைக்கு வந்து விட்டிருந்தாள்.

வந்தவள் இந்தா இதக் கொண்டு போய் எல்லாருக்கும் குடுத்துட்டு வா என்று தனது அத்தை கொடுத்த காபி ட்ரேயை வாங்கிக் கொண்டு போனாள்.

நல்லவேளையாக அனைவருக்கும் கொடுத்த பிறகும் ஒரு கப் மீதியிருக்க, அதைத் தான் எடுத்துக் கொண்டாள்.

ஏனென்றால் அந்த வீட்டில் நிறைய நாட்கள் அவளுக்குக் காலைக் காபி கிடைக்காமலே போயிருந்ததே அதற்குக் காரணம்.

ஆனால் இந்துரேகாவிற்கோ காலைக் காபி என்பது மூச்சு விடுவதைப் போல முக்கியமானது.

காலையில் எழுந்ததும் சூடாக ஒரு கப் காபி உள்ளே சென்றால் தான் அன்றைய நாளே சுறுசுறுப்பாகத் தொடங்குவதைப் போல உணர்வாள்.

ஒரு வழியாக மேலும் இரண்டு மணி நேரங்கள் சமையலறையில் தனது அத்தைக்கு உதவியாக வேலை செய்து கொடுத்தவள், இனி இப்பொழுதே சென்று கிளம்பினால் தான் வேலைக்குச் சரியான நேரத்திற்குப் போய்ச் சேர முடியுமென்று தங்களுடைய அறைக்கு வேகமாகச் சென்றாள்.

"என்னமா, லேட்டாகலையா?" என்று தானும் வேலைக்குக் கிளம்பிக் கொண்டே கணவன் கேட்க, "ஆச்சு ரகு, நான் போய்ச் சீக்கிரம் குளிக்கறேன்," என்று நகரப் போனாள்.

"ஏன் ஒரு மாதிரி யிருக்க?"

"இல்லை..."



அந்த வார்த்தையைக் கூட சொல்லி முடித்திருக்கவில்லை. அதற்குள் குமட்டிக் கொண்டு வாந்தி வந்திருக்க குளியலறைக்கு ஓடினாள்.

சென்று குடலே வெளியே வந்து விழுந்து விடும் போல வாந்தி யெடுத்தாள்.

அதற்குள் பின்புறம் வந்து நின்றிருந்த கணவன் அவனுடைய கரங்களால் தனது தலையோடு நெற்றியையும் சேர்த்துத் தாங்கலாகப் பிடித்துக் கொள்ள, மெல்லிய குரலில், "வேண்டாம் ரகு," என்றாள் இந்துரேகா.

சில வினாடிகளில் வாய் கொப்புளித்து முடித்தவள். தலை எங்கோ பறப்பது போலத் தோன்ற, சுவரைப் பிடித்தபடி முடிந்த அளவு தன்னை இயல்பாகக் காட்டிக் கொண்டு வெளியே வந்தாள்.

ஏனோ உடலில் இருந்த சக்தியெல்லாம் வடிந்து விட்டாற் போல வெடுவெடுவென்று வர, "ஏம்மா, என்ன பண்ணுது?" என்ற கணவனின் வார்த்தைகளுக்குக் கூட அவளால் பதில் சொல்ல முடிந்திருக்கவில்லை.

பேசாமல் சென்று படுத்து விட்டிருந்தாள்.

சில நிமிடங்கள் தான்.

மீண்டும் அனைத்துமே சரியாகி விட்டதைப் போலிருக்க, அப்படியே எழுந்து அமர்ந்தாள்.

உண்மையிலேயே இப்பொழுது அனைத்துமே சரியாகி விட்டிருந்தது தெரிந்தது.

அதற்குப் பிறகு தான் தன்னருகில் அமர்ந்து கொண்டிருந்த கணவனையும் அவனும் தன்னையே பார்த்துக் கொண்டிருந்ததையும் கண்டாள்.

''நான் கிளம்பறேன் ரகு. லேட்டாச்...''

''ஒரு நிமிஷம்,'' என்ற கணவனைத் தானும் என்ன என்பதைப் போலப் பார்த்தாள்.

''என்ன ரகு, சொல்லுங்க?''

''இன்னைக்கு நீ ஆஃபீஸ் போக வேண்டாம்.''

''ஏன்?''

''ம், இவ்வளவு நேரமும் ஒண்ணுமே முடியாம அப்பிடியே சுருண்டு போய்க் கிடந்தியே, மறந்துட்டியா?''

''அது நேத்து லேட் நைட் சாப்டுட்டு, உடனே வந்து படுத்துட்டே...''

''நான் காரணமெல்லாம் கேக்கல. அங்க ஆஃபீஸ்ல போய் இதே மாதிரி முடியாமப் போய்ட்டா என்ன பண்ணுவேன்னு கேக்கறேன்?''

அப்படிக் கேட்ட கணவனை உடனே நிமிர்ந்து பார்த்தாள் இந்துரேகா.

''ம். அதனால தான் சொல்றேன் - இன்னைக்கு ஒரு நாளைக்கு வீட்ல இருந்து ரெஸ்ட் எடு.''

''அதெல்லாம் பிரச்சனையில்ல ரகு, நான் சமாளிச்சுக்குவேன்.''

''நீ சமாளிச்சுத் தான் நானும் பாத்தேனே. நான் மட்டும் பிடிச்சிருக்கலேன்னா நீ கீழயே விழுந்திருப்ப, தெரிஞ்சுக்கோ.''

''நான் சமாளிச்சுக்...''

''சொன்னாக் கேளு இந்து.''



''ப்ளீஷ் ரகு, இன்னைக்குக் கம்பெனில ஒரு முக்கியமான வேலையிருக்கு. அத மட்டுமாவது முடிச்சுக் குடுத்துட்டு வேணும்னா வந்துக்கறேன். அதோட வீட்ட கம்பேர் பண்ணும் போது ஆஃபீஸ்ல வேல குறைவு தான். ஏன், வேலையே இல்லேன்னு கூட சொல்லலாம்,'' என்று தயக்கத்துடன் கணவனின் முகத்தைப் பார்த்துக் கொண்டே சொன்னாள் இந்துரேகா.

''..........''

''முடியலேன்னா வேணும்னா உடனே சொல்லிட்டுக் கால் டேக்ஸி பிடிச்சு வீட்டுக்கு வந்துட்றேன், ரகு. ப்ளீஸ்...''

ஒரு வழியாகக் கணவன் சம்மதித்து விட்டிருக்க, சந்தோஷமாகக் கிளம்பினாள் இந்துரேகா.

நேரம் குறைவாக இருக்க இரண்டு மடங்கு சுறுசுறுப்புடன் கிளம்பிக் கணவனுடன் வெளியே வந்திருந்தாள். அடுத்த பத்து நிமிடங்களில் மனைவியுடன் வீட்டை விட்டுக் கிளம்பியிருந்த ரகுபாலன் அவளைக் கொண்டு போய் அவளுடைய கம்பெனியில் விட்டுவிட்டுப் பிறகு தனது வேலையைப் பார்க்கப் போனான்.

# 7

அன்று மாலையே மனைவி எவ்வளவு சொல்லியும் கேட்காமல் அவளை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றான் ரகுபாலன்.

சிறிது நேரக் காத்திருப்புக்குப் பின் மருத்துவரைப் பார்க்கச் சென்றனர்.

மருத்துவரைப் பார்த்து விட்டு மீண்டும் வெளியே காத்திருந்தவர்கள், ஒரு சில பரிசோதனைகளுக்குப் பிறகு மீண்டும் உள்ளே அழைக்கப்பட்டனர்.

மருத்துவர் சொன்னதைக் கேட்ட கணவன் மனைவி இருவருமே சந்தோஷத்தின் எல்லைக்கே சென்று விட்டிருந்தனர்.

ஆம், இந்துரேகா தாய்மையடைந்திருந்தது டாக்டரால் உறுதி செய்யப்பட்டது.

ஆரம்ப கட்டத்தில் கட்டாயம் சாப்பிட வேண்டிய மாத்திரைகள் என்று இரண்டு மாத்திரைகளை எழுதிக் கொடுத்தவர் மீண்டும் இரண்டு நாட்கள் கழித்து வந்து தன்னைப் பார்க்குமாறு சொல்லியனுப்பினார்.

விஷயமறிந்ததில் இந்துரேகாவின் பெற்றோரும் வந்து மகளைப் பார்த்து விட்டுச் சென்றனர்.

மேலும் ஒரு வாரம் சென்றிருந்தது.

ரகுபாலன் கம்பெனி வேலைக்காக ஒரு வாரப் பயணமாக வெளியூர் கிளம்பிச் சென்றிருந்தான்.

முன்னைப் போல எதற்கெடுத்தாலும் பேசிக் கொண்டே இருக்காமல் ஏதாவது காரணம் கிடைத்தால் மட்டுமே பேசும் தனது அத்தையின் செய்கையில் மனதிற்குள் எவ்வளவோ நிம்மதியாக உணர்ந்தாள் இந்துரேகா.

அந்த அளவிற்குத் தாய்மையின் ஆரம்ப கட்டத்தில் இருந்த இந்துரேகா உடலளவில் மிகவும் தொய்ந்து போய் விட்டிருந்தாள்.



வாந்தி, தலைசுற்றல் எல்லாம் அனைவருக்குமே அந்த நேரத்தில் வருவது தானென்றாலும், அவள் அவற்றால் பல மடங்கு அதிகமாகவே பாதிக்கப்பட்டாள்.

அனைத்திற்கும் மேலாக இப்பொழுதெல்லாம் காலை வேளைகளில் படுக்கையை விட்டே எழ முடியாத அளவிற்கு மிகவும் சிரமப்பட்டாள். அதற்கு மேல் மிகவும் முயன்று எழுந்து நின்றாலும் தலை எங்கோ பறப்பதைப் போல உணர்ந்தாள்.

எப்படியோ அனைத்து உடல் உபாதைகளுக்கு மத்தியிலும் வேலைக்கு மட்டும் தவறாமல் சென்று வந்து கொண்டிருந்தாள்.

இடையிடையே வீட்டில் தனது அத்தைக்கும் தன்னால் ஆன உதவிகளைச் செய்து கொடுத்தாள்.

ஆனால் அதெல்லாம் முன்பு அவள் செய்திருந்த வீட்டு வேலைகளில் பத்தில் ஒன்றோ இரண்டோ பங்கு மட்டுமே.

அதற்கே அவள் உடலளவில் எவ்வளவு சிரமப்பட நேர்ந்தது என்பது அவள் மட்டுமே அறிந்த ஒன்று.

மதுரவாணிக்கும் அவருடைய சிறிய மருமகள் இந்துரேகா படும்பாடு புரிந்தது.

ஆனாலும் அருகில் சென்று ஆறுதல் சொல்லவோ ஏதாவது தேவைப்பட்டால் கேட்டுச் செய்து கொடுக்கவோ விடாமல் அவரை எதுவோ தடுத்தது.

கணவனும் ஒரு வார வேலையாக வெளியூர் சென்று விட்டிருந்ததில் ஏனோ தனக்குத் துணையாக யாருமே

இல்லாததைப் போல மனதளவில் மிகவும் தொய்ந்து போய் விட்டிருந்தாள், இந்துரேகா.

அப்பொழுது தான் வேலை முடிந்து வந்திருந்தவள், பேசாமல் சென்று குறுகிப் படுத்துக் கொண்டு விட்டிருந்தாள்.

வெளியே மழை தூறிக் கொண்டிருக்க, அந்தக் குளிருக்கு இதமாகச் சூடாக ஒரு கப் காபி குடித்தால் எவ்வளவு நன்றாக இருக்குமென்று தோன்றியது.

ஆனால் படுக்கையை விட்டு எழவே மனம் வராத போது அப்படியே குறுகிக் கண்களை மூடிப்படுத்துக் கொண்டு விட்டிருந்தாள்.

சில நிமிடங்கள் தான் சென்றிருக்கும். யாரோ உள்ளே வரும் அரவம் கேட்க, திரும்பிப் பார்த்தாள்.

தனது அத்தை உள்ளே வருவது தெரிய, அவசரமாகப் படுக்கையை விட்டு எழப் போனாள்.

''வேண்டாம், வேண்டாம். படுத்துக்கோ,'' என்று அவர் சொல்லி முடிப்பதற்குள் எழுந்தே நின்றிருந்தாள்.

''இந்தா. இதுல டிபனும் காபியும் இருக்கு. எடுத்துக்கோ.''

''நீங்க எதுக்கு அத்தெ இதெல்...''

''ஏன் எப்பவுமே கொடுமக்கார அத்தையாவே இருக்கச் சொல்றியா?''

அப்படிக் கேட்டவருக்கு என்ன பதில் சொல்வதென்று தோன்றாமல் அப்படியே நின்று விட்டிருந்தாள்.



''சரி சரி. காபியும், டிபனும் ஆறிப் போறதுக்கு முன்னாடி எடுத்துக்கோ,'' என்றவர், அந்த வினாடியே வெளியேயும் சென்றிருந்தார்.

சூடாக அவர் கொண்டு வந்து வைத்துவிட்டுப் போன காபியை முதலில் எடுத்துக் கொண்டாள் இந்துரேகா.

காபியைக் குடித்து முடித்தவளுக்கு உடலுக்கு ஏதோ புதுத்தெம்பு வந்து விட்டாற் போலிருக்க, எழுந்து சென்று துணியை மாற்றிக் கொண்டு சுடுநீரில் கைகால் முகம் கழுவிக் கொண்டு வந்தாள்.

வந்து அனைத்து வேலைகளையும் செய்யத் தொடங்கியிருந்தவள், தனது அத்தைக்கும் சென்று சமையலில் உதவினாள். சில நாட்களில் அப்படியே கொஞ்சம் கொஞ்சமாகப் பழையபடி அனைத்து வேலைகளையும் செய்யத் தொடங்கி விட்டிருந்தாள் இந்துரேகா.

''அத்தெ, ஒரு கப் காபி கிடைக்குமா?'' என்று வந்த அபர்ணா, அதற்குப் பிறகு தனது அத்தை மதுரவாணி அங்கு இல்லாததைக் கண்டாள்.

ஆனால் உடனே, ''இதோ நான் போட்டுத் தர்றேன்கா,'' என்றாள் இந்துரேகா.

''வேண்டாம், வேண்டாம். தள்ளு. நானே போட்டுக்கறேன்.''

மேலும் இரண்டு முறை சொன்ன பிறகும் கூட அபர்ணா மறுத்து விட்டிருக்க, அதற்கு மேல் எதுவும் சொல்லாமல் நகர்ந்து கொண்டாள் இந்துரேகா.

அதே சமயம், '''ஹாய் அபர்ணாக்கா!'' என்று பின்னாலிருந்து வந்த குரலில் பெண்கள் இருவருமே திரும்பிப் பார்த்தனர்.

''வாவ் ஷர்மிளி! வா, வா!''

''எப்பிடி யிருக்கீங்கக்கா?''

''நாங்க எல்லாரும் நலம் ஷர்மிளி. நீ உங்க வீட்ல எல்லாரும் எப்படி யிருக்கீங்க?''

''நாங்களும் எல்லாரும் ஃபைன்!'' என்றவள், ''இவங்க?'' என்று இந்துரேகாவைக் கைகாட்டிக் கேட்டாள்.

''ஓ! நீ கல்யாணத்துக்கு வரல இல்ல. இவங்க ரகுவோட மனைவி. பேர் இந்துரேகா.''

''வாட், ரகுவுக்கு எப்பக் கல்யாணமாச்சு?''

''ரெண்டு மாசமாச்சு. ஏன் ரகுவுக்கு மேரேஜ் ஆனது உனக்குத் தெரியாதா?''

''என்ன கிண்டலா? யார் எனக்கு இன்விடேஷன் அனுப்பி வெச்சீங்க?''

''எங்கள மிரட்டினா? உன் ஃப்ரண்ட் ரகுவப் போய்க் கேளு.''

''பின்ன கேக்காம, எங்க அவரு?''

''ம், ஒரு அஃபிஷியல் வேலையா சென்னைக்குப் போயிருக்கார். திரும்ப இன்னும் நாலு நாள் ஆகும்.''

''சென்னைக்கா?''

''ஆமா, ஏன்?''

''நான் இப்பதான் சென்னைல ஜாப் ரிஸைன் பண்ணிட்டுக் கொஞ்ச நாள் வீட்ல இருக்கலாம்னு வந்தேன்.''

''ஓ. அப்ப ரிஸைனே பண்ணிட்டயா?''



''ஆமாம்கா,'' என்றவள், அப்படியே திரும்பி இந்துரேகாவைப் பார்த்தாள்.

''ஹாய் எம் பேர் ஷர்மிளி, நான் ரகுவோட டியர் மோஸ்ட் ஃப்ரண்ட். கிட்டத்தட்ட ஸ்கூல் டேஸ்ல இருந்து காலேஜ் வரைக்கும் ரெண்டு பேரும் ஒன்னாப் படிச்சோம்.

''இப்ப ரீஸன்ட்டா சில மாசங்கள் தான் கொஞ்சம் பேச முடியாமப் போயிடுச்சு. அது கூட என்னக் கம்பெனியிலிருந்து வெளியூருக்கு அஃபிஷியல் டூர் அனுப்பிட்டாங்க. அதனால தான்.''

''ஓ உக்காருங்க ஷர்மிளி. ஏன் நின்னுட்டே இருக்கீங்க?'' என்ற இந்துரேகா,

''அப்புறம் ஏன் அவரு கல்யாணத்துக்குக் கூட உங்களுக்கு இன்விடேஷன் அனுப்பாம விட்டார்?'' என்று வெகுளித்தனமாகக் கேட்டாள்.

''ம், ரகு வரட்டும். அத அவங்கிட்டயே கேக்கறேன்,'' என்றவள், ''அச்சச்சோ! நீங்க தப்பா எடுத்துக்காதீங்க. நான் எப்பவும் ரகுவக் கூப்புட்றதே அப்பிடி தான். என்ன மத்தவங்களுக்காக அவங்க என்ன சொல்லிடுவாங்களோன்னு தான் அதுவும் ரொம்பவும் சிரமப்பட்டு வாங்க போங்கன்னு கூப்புடுவேன்,'' என்றாள்.

''அப்புறம் என்ன சாப்புட்றீங்க?''

இந்துரேகா கேட்க, ''சாப்புட்றதுக்கெல்லாம் ஒன்னும் வேண்டாம். காபி மட்டும் வேணும்னா....''

அவள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, ''இந்தா...'' என்ற காபி கப்பைக் கொண்டு வந்து கொடுத்தாள் அபர்ணா.

''உங்க காபியா? குடிச்சா எதுவும் ஆயிடாதே?'' என்று ஷர்மிளி கேட்க,

''பாரு, நானும் தான் குடிக்கறேன், என்ன எனக்கு ஆகறது தான உனக்கும். தைரியமாக் குடி,'' என்றாள் அபர்ணா.

''அது சரி தான்,'' என்று காபியைக் குடிக்கத் தொடங்கினாள் ஷர்மிளி.

''அப்புறம் ஏன் ஜாப்ப ரிஸைன் பண்ணிட்ட?''

''கொஞ்ச நாள் வீட்ல இருந்துட்டு அப்புறம் பக்கத்துலயே எங்காவது பாத்துக்கலாமேன்னு.''

''அப்பக் கல்யாணம் பண்ணிக்கற ஐடியாவே இல்லையா?''

'இல்லாம என்ன. இந்த ரகு தான் என்ன ஏமாத்திட்டானே!' என்று மனதிற்குள் கோபத்துடன் நினைத்துக் கொண்டவளால் அதை அப்படியே வெளியே காட்ட முடிந்திருக்கவில்லை.

''என்ன ஷர்மிளி, பேச மாட்டேங்கற?''

''பாக்கலாம்கா.''

''அது சரிதான். நீதான் உங்க வீட்டுக்குக் கடைசிப் பொண்ணாச்சே. அதனால ஃப்ரியா விட்டிருப்பாங்க.''

''இப்பப் பிரச்சனையே நான் கடைசில இருக்கற பொண்ணுங்கறது தான். அவங்க கடம தீரணுமேன்னு எல்லாரும் என்னப் புடிச்சுட்டு ஒரு வழி பண்றாங்க.''

''அது சரி, பெத்தவங்களோட கஷ்டம் அவங்களுக்குத் தான தெரியும்,'' என்று அபர்ணா சொல்லிக் கொண்



டிருக்கும் போதே, ''அடடா, ஷர்மிளி! வா வா,'' என்று சமையலறைக்கு வந்தார் மதுரவாணி.

''எப்பிடி யிருக்கீங்க ஆன்ட்டி?'

''எனக்கென்னமா, சுகமா இருக்கேன். அப்புறம் நீ எப்ப சென்னைல இருந்து வந்த?''

''நான் வந்து ரெண்டு நாளாச்சு ஆன்ட்டி.''

''அதான, மூணு நாளைக்கு முன்னாடி கூட உங்கம்மாவப் பாத்தேன். எதுவும் சொல்லலியேன்னு கேட்டேன்.''

''அப்புறம் என்ன ஆன்ட்டி, உங்க சின்ன மகனோட கல்யாணத்துக்கு எனக்குப் பத்திரிகையே வரல...?''

''வீட்ல குடுத்துக் குடுக்கச் சொன்னமே. ஏன் உங்க வீட்ல சொல்லாம விட்டுட்டாங்களா?''

''ம்கூம். என் காதுக்கு நியூஸே வரல. ஆனா ரகு எப்பிடி எனக்கு போன் பண்ணி விஷயத்த... ஏன் நேர்லயே கூட அவர் நினைச்சிருந்தா வந்து எனக்கு இன்விடேஷன் குடுத்துட்டு வந்திருக்கலாமாக்கும்...''

''சரி தான், அவங்கிட்ட நீயே கேளு.''

''கேக்கறதா, சண்டையே போடப் போறேன்,'' என்றவள், ''அதுவும் இப்பவே!'' என்று தனது மொபைலை எடுத்து ரகுபாலனுக்கு டயல் செய்தாள் ஷர்மிளி.

உடனே தொடர்பு கிடைக்க, பத்து நிமிடங்களுக்கும் மேலேயே பேசினாள். இல்லையில்லை... சண்டையிட்டாள்.

சில வினாடிகளில் பெண்கள் மூவரும் அவரவர்களுடைய வேலைகளைப் பார்க்கத் தொடங்கி

விட்டிருக்க, வெகு நேரத்திற்குப் பிறகே போனை வைத்திருந்தாள் ஷர்மிளி.

அதாவது மீண்டும் அழைக்கிறேனென்று எதிர்ப்புறத் தில் ரகுபாலன் போனை வைத்திருந்தான்.

அதை வெளியே காட்டிக் கொள்ளாமல், திரும்பவும் அழைக்கிறேனென்று தான் சொல்லிவிட்டு வைத்து விட்டதைப் போலக் காட்டிக் கொண்டாள்.

''என்ன ஷர்மிளி, பேசிட்டயா? ம்கூம்... சண்ட போட் டுட்டியா?''

அபர்ணா கேட்க, ''பின்ன, பாவம்! வேல பிஸில இருக்கார். அதான் திரும்பவும் பேசிக்கலாம்னு விட்டுட் டேன்,'' என்றாள்.

''அது சரி தான், ரகு இந்த நேரத்துல அதுவும் இவ் வளவு நேரம் பேசியிருக்கார். எங்க கூடவெல்லாம் டியூட்டி டைம்ல சில வார்த்தைகள் பேசறது கூடக் கஷ்டம். ஏன், பேச மாட்டார்னே கூட சொல்லிடலாம்.''

''அதெல்லாம் மத்தவங்களுக்கு. அவரோட புதுப் பொண்டாட்டி கூடவுமா அப்பிடி?'' என்றவள், ''ஏன் அத இவங்ககிட்டேயே கேட்டுட்லாமே. என்ன இந்துரேகா, அப்பிடியா?'' என்று கேட்டாள்.

''நான் மேக்ஸிமம் அவரு ஃப்ரீயா இருக்கற டைம்ல தான் கூப்புட்டுப் பேசுவேன். அதனால தெரியல.''

''சரிதான். அவருக்கேத்த பொண்டாட்டி!'' என்றவள், ''சரி. நான் கிளம்பறேன்,'' என்று எழுந்து விட்டிருந் தாள்.



''ஏன் ஷர்மிளி, இன்னும் கொஞ்ச நேரம் இருந்துட்டு டிஃபன் சாப்டுட்டே போலாமே. ரொம்ப நாள் கழிச்சு வேற வந்திருக்க...''

''இல்ல அபர்ணாக்கா. அம்மா மாமா ஊருக்குப் போலாம்னு கிளம்பிட்டிருந்தாங்க. நாந்தான் உங்களை யெல்லாம் பாக்கறதுக்காக சொல்லாமக் கூடக் கிளம்பி வந்துட்...''

''உன் ஃப்ரண்ட்டப் பாக்கறதுக்குன்னு சொல்லு.''

''அது சரிதான். என் ஃப்ரண்ட் வந்ததுக்கப்புறம் திரும்பவும் வர்றேன்.'' என்று உடனே கிளம்பி விட்டிருந் தாள் ஷர்மிளி.

''ம், பாவம் ஷர்மிளி!'' என்ற அபர்ணாவைப் பார்த் தாள் இந்துரேகா.

''எனக்கு ஒன்னுமே தெரியாதுன்னு நினைச்சுட் டிருக்கா போலிருக்கு, எப்ப இருந்தாலும் ரகு அவளுக் குத்தான்னு நினைச்சுட்டிருந்தா. அது தெரிஞ்சது னால தான் ரகுவும் பர்பஸ்ஃபுல்லா அவளுக்கு இன்விடேஷன் குடுக்காம அவாய்ட் பண்ணியிருக் கார்...''

அபர்ணா பாட்டுக்கு இன்னும் ஏதேதோ சொல்லிக் கொண்டே போக, அவள் முதலில் சொன்னது மட்டும் தான் இந்துரேகாவின் காதுகளில் மீண்டும் மீண்டும் ஒலித்துக் கொண்டே இருந்தது.

ஆனால் தொடர்ந்து அதைப் பற்றியே யோசித்துக் கொண்டிருக்க அவளுக்கு ஏனோ தைரியம் இருக்க வில்லை.

தொடர்ந்து தனது அத்தையும் வேலைகளைக் கொடுத்துக் கொண்டே இருந்ததில், அதைப் பற்றி அப்போதைக்கு மறந்து கூடப் போனாள்.

ஆனால் தனிமையில் மீண்டும் நினைவிற்கு வந்த போது நெஞ்சு மிகவும் பாரமாகி விட்டிருந்தது.

சரியாக அதேநேரம் தனது கணவனிடமிருந்து மொபைலுக்கு அழைப்பு வர அட்டெண்ட் செய்து பேசினாள்.

அன்று அதிசயமாகக் கணவன் வெகு நேரம் பேசிக் கொண்டிருந்ததில் ஷர்மிளி பற்றி அபர்ணா சொன்னதை, ஏன்... அனைத்தையுமே கூட மறந்து போய் விட்டாள் எனலாம்.

கணவனின் வார்த்தைகள் தந்த சுகத்தில் ஏதேதோ எண்ணியபடி அப்படியே தூங்கியும் போய்விட்டிருந்தாள்.



# 8

வெளியூர் சென்றிருந்த இளைய மகன் பயணம் முடிந்து அப்பொழுது தான் வீட்டிற்குள் வந்ததும், வரவேற்றார் மதுரவாணி.

அன்று அதிசயமாகத் தந்தையும் வீட்டிலிருக்க, ''அம்மா. காபி ஒரு கப் கிடைக்குமா?'' என்று கேட்டுவிட்டு, அவருடன் அமர்ந்து பேசத் தொடங்கிவிட்டிருந்தான்.



சில நிமிடங்களில் தாய் டிபன் ப்ளேட்டைக் கொண்டு வந்து வைக்க, எழுந்து சென்று கைகளைக் கழுவிக் கொண்டு வந்து சாப்பிடத் தொடங்கினான்.

''உங்களுக்குப்பா?''

''நான் ஆச்சுப்பா. நீ எடுத்துக்கோ. மதியமும் ஒன்னும் சாப்பிடாம வந்திருக்க.''

''அது சரிதான். பசில ஒன்னுமே தெரியல,'' என்றவன், தாய் கொண்டு வந்து கொடுத்த காபியை வாங்கிக் கொண்டான்.

''எங்கமா யாரையும் காணல?''

''சுசி, சுபா ரெண்டு பேரும் இன்னும் காலேஜ்ல இருந்து வரல. அதே மாதிரிதான் உன் பொண்டாட்டியும். எல்லாரும் வர்ற நேரம் தான். அப்புறம் அபர்ணாவும் வினுவும் கொஞ்சம் முன்னாடி தான் வெளிய கிளம்பினாங்க.''

தனது மனைவியை மட்டும் ஏன் தாய்க்குப் பிடிக்கவே மாட்டேன் என்கிறது என்று ரகுபாலனால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

காபி, டிபனை முடித்துக் கொண்டு எழுந்து உள்ளே வந்தவன், ஹீட்டரை ஆன் செய்து விட்டுப் போய் நன்கு குளித்து விட்டு வந்தான்.

அதே சமயம் உள்ளே வந்த மனைவியை வரவேற்றவன், ''உடம்புக்கு எப்பிடியிருக்கு?'' என்று அக்கறையுடன் விசாரித்தான்.

''இந்து.''

"என்ன ரகு?"

"நாளைக்கு உனக்கு லீவ் தான?"

"ம். சன்டேவாச்சே."

"ஊருக்கு ஐ மீன் தோட்டத்துக்குப் போய்ட்டு வர லாமா?"

"இப்பவா?"

"ம்."

"ஏன், இன்..."

"ஏன், உனக்குப் பிடிக்கலையா?"

"அச்சச்சோ! உங்ககூட வெளிய போறதுக்கு அதுவும் எனக்குப் பிடிக்காமப் போகுமா?" என்றவள், "வாங்க, கிளம்பலாம்," என்றாள்.

"ஹீட்டர் போட்டு விட்டிருக்கேன், போய் நல்லாக் குளிச்சுட்டு வா. இன்னும் அர மணி நேரத்துல கிளம்ப லாம்."

"வாவ்" என்று துள்ளிக் குதித்த மனைவியை, "ஏய் மெதுவா மெதுவா..." என்றான் ரகுபாலன்.

கணவன் அப்படிச் சொன்ன பிறகு தான் தன்னிலை உணர்ந்து கொண்டவளாய் உதட்டைக் கடித்துக் கொண் டாள்.

"இந்து..." என்று தன்னை நெருங்கி வந்த கணவனிட மிருந்து தப்பித்துக் கொண்டு, "குளிச்சுட்டு வந்துட் றேன்," என்று குளியலறைக்குள் சென்றிருந்தாள்.

பேசிக் கொண்டது போல அடுத்த அரை மணி நேரத் தில் கணவனும், மனைவியும் காரில் ஊருக்குக் கிளம்பி விட்டிருந்தனர்.



கணவன் காரை ஓட்டத் தன் பாட்டுக்குப் பேசிக் கொண்டே வந்தாள் இந்துரேகா.

சாலையில் கவனமாகக் காரை ஓட்டினாலும் இடை யிடையே மனைவியின் கேள்விக்கும் பதில் சொல்லிக் கொண்டே வந்தான் ரகுபாலன்.

சிறு பிள்ளை போல வெகுளித்தனமாகப் பேசிக் கொண்டே வந்த மனைவியைக் காதலுடன் பார்த்தான் ரகுபாலன்.

மேலும் ஒரு மணி நேரத்தில் இருவரும் தோட்டத் தைச் சென்றடைந்திருக்க, இந்துரேகாவிற்கு அங்கு அனைத்துமே புதுமையாக இருந்தன.

நெஞ்சு வரை ஊடுருவிய குளிரில் கணவனின் கையை இறுகப் பிடித்துக் கொண்டாள்.

நேரம் இரவு எட்டு மணிக்கு மேல் ஆகியிருந்ததால் அவர்கள் அங்கு சென்று சேரும் போதே நன்கு இருட்டி விட்டிருந்தது.

முழுவதும் நெடிதுயர்ந்த தென்னை மரங்களாக இருக்க, காற்றுக்கு ஆடிய அந்த மரங்களின் ஓசையில் மனதிற்குள் மிகவும் பயமாக உணர்ந்தாள்.

"என்னமா?"

"பயமா இருக்கு ரகு."

"நானும் உன்னை நைட்ல கூட்டிட்டு வந்துட்டேன். எதையும் பாக்கக் கூட முடியல இல்லையா?"

"அதனால என்ன, காலைல பாத்துட்டாப் போச்சு!" என்றவள், "மண் வாசன நல்லா வருது ரகு. மழை வரும் போலிருக்கு," என்றாள்.

''அது சரிதான். போய் நல்லாப் படுத்துத் தூங்கணும்.''

''ஆமா, நீங்க வேற போன ஒரு வாரமும் நல்லா ரெஸ்ட் எடுத்தீங்களோ என்னவோ.''

''நீயில்லாம ரெஸ்ட் எடுக்கவே இல்ல,'' என்ற கணவனின் பார்வையைக் கண்டும் காணாததைப் போல இருந்து கொண்டாள் இந்துரேகா.

சிறிது நேரத்தில் இருவருமே வீட்டிற்குள் வந்திருக்க, கிராமத்து வாடை வீசிய அந்த வீட்டைப் பார்த்ததுமே பிடித்துப் போயிற்று அவளுக்கு.

''என்னமா?''

''எனக்கு இந்த வீட்ட ரொம்பவும் பிடிச்சுப் போச்சு ரகு. கல்யாணமான இவ்வளவு நாள்ல ரொம்பவும் மிஸ் பண்ணியிருக்கேன்.''

''அது சரிதான். ஆனா இனிமேல் அடிக்கடி வந்துடலாம்.''

''ஆமா, மாமா இங்க இருக்கும்போது அவருக்குச் சாப்பாடு?''

''நம்ம தூரத்துச் சொந்தத்துல ஒரு அம்மாவும் அவங்க மகனும் இங்க இருக்காங்க. அதாவது இந்தத் தோப்போட எண்டுல. அவங்க த்தான் நம்ம தோட்டத்தப் பாத்துக்கறாங்க. அப்பாவுக்கு அவங்களே வந்து செஞ்சு வெச்சுட்டுப் போய்டுவாங்க.''

''ஓ...''

''அப்புறம் அப்பாவோட அம்மா அப்பாவும் அதாவது தாத்தா பாட்டியும் இங்க தான் இதே ஊர்ல இருக்காங்க.



அவங்களுக்கு முடியறப்பவெல்லாம் அவங்களும் வந்து அவங்களால முடிஞ்சத செஞ்சு வெச்சுட்டுப் போவாங்க.''

''ஆமாம், போன தடவ மாமா இங்க வந்துட்டு வந்தப்ப அத்தைகிட்ட அப்பிடி தான் சொல்லிட்டிருந்தார்.''

''பசிக்குது இந்து,'' என்றவன், ''வா, கிச்சன்ல போய் என்ன செய்யலாம்னு பாக்கலாம். அதென்ன கைல என்னவோ வெச்சிருக்க?''

''ஊர்ல இருந்து மட்டன் குழம்பு நிறைய இருந்துன்னு எடுத்துட்டு வந்தேன்,'' என்ற மனைவியைப் புன்னகையுடன் பார்த்தான் ரகுபாலன்.

''என்னங்க?''

''உனக்கு வேல அதிகமாயிடும்னு முன்னெச்சரிக்கையா எடுத்துட்டு வந்துட்டியாக்கும்?''

''அப்பிடி யெல்லாம் இல்ல ரகு. அத்தை தான் வேணும்னா எடுத்துட்டுப் போன்னாங்க. மாவு இருந்தா தோசை ஊத்திக்கலாம். இல்லன்னா சாப்பாடும் ரசமும் வெச்சுக்கலாம்னு நானும் சரின்னுட்டேன்.''

அதற்குள் ஃப்ரிட்ஜைத் திறந்து பார்த்து விட்டு, ''மாவே இருக்கு,'' என்று கணவன் அதை வெளியே எடுக்க, தான் வந்து வாங்கிக் கொண்டு போய் அடுப்படியில் வைத்தாள் இந்துரேகா.

''ஒரு டிஃபன் ரெடி, இன்னொன்...''

''அதெல்லாம் ஒன்னே போதும்,'' என்றவன், ''தோசக் கல்ல எடு,'' என்று வேஷ்டியை மடித்துக் கட்டிக் கொண்டு வந்தான். ''என்ன ஆச்சரியமாப் பாக்கற?''

''நீங்க உக்காருங்க. நான்...''

''சொன்னத செய்,'' என்றவனின் வார்த்தைகளில் தோசைக்கல்லை எடுத்துக் கழுவி அடுப்பில் வைத்திருந் தாள்.

அப்பிடியே குழம்பையும் ஒரு கிண்ணத்தில் ஊற்றி மற்றொரு அடுப்பில் எடுத்து வைத்துச் சூடு செய்தாள்.

''சரி. இனி நீ உக்காரு. முதல்ல நான் உனக்குச் சுட்டுக் குடுக்கறேன்,'' என்ற கணவனின் வார்த்தைகளில் அவன் சொன்னபடியே அங்கிருந்த ஒரு ஸ்டூலை எடுத்துப் போட்டு அமர்ந்தாள்.

ஏதேதோ சுவாரஸ்யமாகப் பேசியபடி ஹோட்டல் பேப்பர் ரோஸ்ட்டைப் போலக் கணவன் சூடாகச் சுட்டுக் கொடுக்கக் கொடுக்க வழக்கத்தை விடவும் அதிக மாகவே உண்டிருந்தாள் இந்துரேகா.

கணவன் இன்னொரு தோசையையும் வைக்க வர, மறுத்துவிட்டு எழுந்து சென்று கைகளைக் கழுவிக் கொண்டு வந்தாள்.

''சரி, இனி நீங்க உக்காருங்க. நான் சுட்டுக் குடுக் கறேன்...''

வழக்கத்தை விடவும் அதிகமாகச் சாப்பிட்டதாலோ என்னவோ, அவள் இருந்த நிலையில் எப்படியெப்படியோ வர ஒன்றும் முடியாமல் பேசாமல் அப்படியே நின்று விட்டிருந்தாள்.

மிகவும் குமட்டிக் கொண்டு வர, கண்களை மூடிப் பேசாமல் அமர்ந்து விட்டிருந்தாள்.



''இந்து...'' என்று கணவன் அருகில் வந்து நின் றிருந்தது தெரிந்தது.

அதெல்லாம் சில நிமிடங்கள் தான். பிறகு சமாளித்துக் கொண்டு நிமிர்ந்தாள்.

''என்னடா, முடியலேன்னாப் போய் உக்காரு போ.''

''வேண்டாம் வேண்டாம். நானே... எனக்குச் சரியா யிடுச்சு ரகு. இப்பக் கொஞ்ச நாளாவே சாப்பிட்டதும் ஒரு மாதிரி தான் இருக்கு. ஆனா அது இன்னுமொரு சில மாசங்களுக்குள்ள சரியாயிடுமாம்,'' என்றவள் வந்து கணவனுக்குத் தான் தோசை வார்த்துக் கொடுத்தாள்.

தொடர்ந்து வந்த சிறிது நேரத்தில் உண்டு முடித்து அனைத்தையும் எடுத்து வைத்து விட்டு முன்னறைக்கு வந்து அமர்ந்திருந்தார்கள்.

''வெளிய கொஞ்ச தூரம் நடந்து போய்ட்டு வரலா மாம்மா?''

''இருட்டா இருக்கே ரகு.''

''தூரமா எங்கயும் இல்ல. நம்ம காம்பவுண்டுக்குள்ள தான்,'' என்ற கணவனுடன் தானும் எழுந்து சென்றாள் இந்துரேகா.

வெளியே உலாவ இருவருக்குமே பிடித்திருந்தாலும் குளிர் அதற்கு விடாமல் தடுத்ததால் அடுத்து பத்து நிமிடங்களுக்குள்ளேயே மீண்டும் வீட்டிற்குள் வந்திருந் தார்கள்.

அதே நேரம் தனது மொபைலுக்கு அழைப்பு வர, எடுத்துப் பார்த்தான் ரகுபாலன்.

தாய் அழைத்திருக்க, சிறிது நேரம் பேசிவிட்டு போனை வைத்தான்.

என்ன என்பதைப் போலப் பார்த்த மனைவியிடம், ''நாளைக்கு எல்லார் வீட்டுக்கும் போய்ட்டு அதுக் கப்புறமா வாங்க. முடிஞ்சா உனக்கு ஒரு நாள் லீவ எக்ஸ்டெண்ட் பண்ணிக்கிட்டுக் கூட சொந்தக்காரங்க வீட்டுக்கெல்லாம் போய்ட்டு வாங்கன்னு சொல்றாங்க,'' என்றான்.

''அப்ப உங்களுக்கு மன்டே லீவா?''

''ஆமாம். லாஸ்ட் டென் டேஸா நான் லீவே எடுக் கலையே. அதனால எனக்கு மன்டே லீவ் தான்.''

''ஓ!''

''என்ன, நீயும் மன்டே லீவ் எடுத்துக்கலாமா?''

''தெரியல ரகு, வேணும்னா எடுத்துக்கறேன்.''

மனைவியின் கையைப் பிடித்துத் தன்னருகில் அமர்த்திக் கொண்டான் ரகுபாலன்.

அது போதாமல் மேலும் ஒட்டி அமர்ந்து கொண் டவன், ''இந்து...'' என்று மனைவியை மிருதுவாக அழைத் தான்.

கணவனின் அருகாமையில் முகம் சிவந்துவிட, அப்படியே குனிந்து கொண்டாள் இந்துரேகா.

''கல்யாணமானதுக்கப்புறம் இதுதான் நமக்குக் கிடைக்கற முதல் தனிமையான நாள் தெரியுமா?''

அப்படிக் கேட்ட கணவனை நிமிர்ந்து பார்த்தவள், ''ஆமாம்'' என்பதைப் போலத் தலையை ஆட்டினாள்.



''உனக்குப் பிடிச்சிருக்கா?''

''ம்.''

''இந்த நாளுக்காக நான் எத்தன நாளா ஏங்கிட்டிருக் கேன் தெரியுமா? என்னடா, பேசு...''

''இனிமேல் பாருங்க, நீங்க சும்மா இருந்தாக் கூட நான் விடமாட்டேன். வாங்க, தோட்டத்துக்குப் போக லாம்னு கூப்டுட்டு வந்துடுவேன்.''

''கரும்பு தின்னக் கூலியா? அப்புறம் இந்து...''

''என்ன ரகு?''

''உனக்கு வீட்ல பிரச்சனை ஒன்னும் இல்லையேம்மா?''

''.......''

''என்ன பாக்கற, உனக்கு வேல அதிகம் தான? அதத் தான் கேக்கறேன்.''

''அப்பிடியெல்லாம் இல்லையே ரகு. அத்தையும் எந்த நேரம் பார்த்தாலும் வேல செஞ்சுக்கிட்டே தான் இருக்காங்க. நான் அவங்களுக்கு ஹெல்ப் பண்றேன். அவ்வளவுதான்.''

''அதோட மத்தவங்களும் ஒன்னும்...''

''யார அபர்ணாக்கா, சுசி, சுபாவ சொல்றீங்களா?'' என்று கேட்டவள், அதற்கும் வரிந்து கட்டிக்கொண்டு கணவனுக்குப் பதில் சொன்னாள்.

''சுசியும் சுபாவும் அவ்வளவா எந்த வேலையும் செய்யறதில்ல தான். அப்படிப் பாத்தா கல்யாணத்துக்கு முன்னாடி நான் என் அம்மாவுக்கு என்ன வேல செஞ்சு

குடுத்தேனாம்? பெட் காபில இருந்து நைட் குடிக்கற பால் வரைக்கும் அம்மா நான் இருக்கற இடத்துக்குக் கொண்டு வந்து குடுத்துடுவாங்க.''

அதுவும் ஒரே செல்லப் பெண்ணாகத் தாய் வீட்டில் அப்படியெல்லாம் செல்லமாக இருந்துவிட்டு வந்து இங்கு வேலைக்கும் சென்று வந்து கொண்டு வீட்டிலும் எத்தனை வேலைகளைச் செய்கிறாள் என்று மனைவியைப் பற்றி நினைத்த ரகுபாலனுக்கு மிகவும் பெருமையாக இருந்தது.

அப்படி வேலை செய்வது மட்டுமா, முகம் கோணாமல், யாரிடமும் யாரைப் பற்றியும் கோள் சொல்லாமல், அதிலும் தனது தாய் எப்படியெல்லாம் நடத்திக் கொண்டிருக்கிறார் என்பதும் அவன் அறியாதது அல்லவே.

இத்தனைக்கும் நடுவிலும் கூட எந்த அளவிற்குப் புன்னகையுடன் அனைத்து வேலைகளையும் செய்கிறாள்.

அனைத்திலும் உச்ச கட்டமாகத் தானே வலியப் போய்த் தனது தாயைப் பற்றி ஏதாவது கேட்டாலும் கூட எந்த அளவிற்கு விட்டுக் கொடுக்காமல் பதில் சொல்கிறாள்.

அதற்கு எவ்வளவு பெரிய மனம் இருக்க வேண்டும்.

''அபர்ணாக்காவும் அப்பிடித்தான் காலைல லேட்டா எழுவாங்க தான்னாலும், பகல் முழுக்க அவங்க தான எல்லாத்தையும் பாத்துக்கறாங்க!'' என்ற மனைவியைப் பார்த்தான் ரகுபாலன்.



எங்கே பார்க்கிறாள், அதற்கு மேலும் மாதத்தில் பெரும்பான்மை நாட்கள் தாய் வீட்டு வாசம் வேறு.

எப்படிப் பார்த்தாலும் அவளால் வீட்டில் யாருக்கும் பலனில்லை. அவளுக்குத் தான் அனைவரும் செய்து கொடுக்க வேண்டும், அதுதானே நடந்து கொண்டும் இருக்கிறது என்று நினைத்தவனால் அதை வெளியே சொல்ல முடிந்திருக்கவில்லை.

''இத்தனை நாளும் சரிதான் இந்து. ஆனா இப்ப உன்னால பழையபடி வேலை செய்ய முடியுதா?''

''கொஞ்சம் கஷ்டமா தான் இருக்கு. ஆனாலும் வேல செய்ய செய்யக் கஷ்டம் தெரியல. பழகிப்போச்சு.''

''நாம ஒன்னு செஞ்சா என்ன?'' என்ற கணவனிடம் ''என்னங்க?'' என்று கேட்டாள் இந்துரேகா.

''நாம தனியா ஐ மீன் தனிக் குடித்தனம் போய்ட்டா என்ன?''

''அது நல்லா இருக்குமா?''

''சவுகர்யத்தப் பாத்துட்டுப் போக வேண்டியது தான. எனக்கு ஒரு நாளைக்கு ரெண்டே முக்கால் மணி நேரத்துக்குப் பக்கம் ட்ரேவலிங்லயே வேஸ்ட்டாப் போயிடுது, உனக்கு ஒன் அவர் மேல...''

''சரிதானுங்க, அப்பிடிப் பாத்தா நாம தனியாப் போறது சரிதான்.''

''இன்னும் முடிவு பண்ணலமா. மனசுக்குள்ள ஒரு யோசனை இருக்கு, பாக்கலாம்.''

''.....''

''ஆனா இப்பவும் கம்பெனி ஸ்டாஃப் பஸ்ல முக்கால் பங்கு தூரம் வந்துட்றதால அந்த டைம படிக்கறது, மெய்ல் செக் பண்றதுன்னு யூஸ்ஃபுல்லா தான் செலவு பண்ணிட்டிருக்கேன்.''

''ரகு...''

''என்னடா?''

''நெக்ஸ்ட் வீக் எங்க அம்மா வீட்டுக்குப் போய்ட்டு வரலாமா?''

''ஓ, தாராளமாப் போலாமே. அப்ப வர்ற மன்டே நாம ரெண்டு பேருமே லீவ் போட வேண்டாம். அதுக்கடுத்த மன்டே லீவ் போட்டுக்கலாம்.''

''தேங்க்யூ, ரகு!'' என்று எம்பிக் கணவனின் கன்னத்தில் இதழ் பதித்தாள், இந்துரேகா.

''ம்கூம் இங்க,'' என்று அவனுடைய இதழ்களில் கை வைத்துக் காட்டிய கணவனிடமிருந்து தப்பித்துக் கொண்டு எழுந்து ஓடிவிட்டிருந்தாள்.

''எங்க போற? இங்க ஒன்பதரைக்குக் கரண்ட் கட் டாகும்.''

''சும்மா சொல்லாதீங்க. நான் நம்ப மாட்டேன்.''

''சரிதான். இன்னும் ரெண்டு நிமிஷம் தான இருக்கு. நீயே பாக்கத் தான போற,'' என்று அவன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே மின் இணைப்பு துண்டிக்கப் பட்டிருக்க, சுவரில் பொருத்தப்பட்டிருந்த அந்த சிறிய சார்ஜர் லைட் தானாகவே எரியத் தொடங்கியது.

''பாத்தியா?'' என்று கணவன் கேட்க, ''இப்பவும் எனக் கொன்னும் பயமில்லையே!'' என்றாள் இந்துரேகா.



''எனக்கென்ன, இது ஓட்டு வீடு. இங்க பல்லி, பூரான், தேள் ஏன்... சின்னச் சின்னப் பாம்புக கூட தன்னப்போல சுத்திட்டிருக்கும்...''

''நான் நம்ப மாட்டேன்.''

''நம்பாத, கண்லயே பாரு,'' என்று ரகுபாலன் சொல் லிக் கூட முடித்திருக்கவில்லை. கணவனின் அருகில் வந்திருந்தாள் இந்துரேகா.

''என்ன, உனக்குத் தான் ஒன்னுமில்லையே. அப்புற மென்ன?''

''பயமா இருக்கு.''

மெல்லிய குரலில் சொன்ன மனைவியைப் பார்த் தவன், ''அதுக்கு என்ன என்ன பண்ணச் சொல்ற?'' என்று அங்கிருந்து நகரப் போனான்.

ஆனால் அதற்குள் கணவனின் கையைப் பிடித்திருந் தாள் இந்துரேகா.

மனைவியின் தொடுகையில் திரும்பியவன், ''என்ன?'' என்று கேட்டான்.

அதற்கு மேல் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாது போகக் கணவனை இறுக அணைத்து அவ னுடைய மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள்.

''இந்து'' என்று தானும் மனைவியை மிருதுவாக அணைத்துக் கொண்ட ரகுபாலனின் நிலை பற்றியோ அதற்கு மேல் சொல்ல வேண்டியதே இருக்கவில்லை.

கோழிக் குஞ்சு போலத் தனக்குள் ஒன்டிக் கொள்ளத் தேடிய மனைவியின் முகம் நோக்கி எல்லையற்ற காதலுடன் குனிந்தான்.



# 9

தாய் சொன்னது போல மறுநாள் முழுக்க அனைத்துச் சொந்தங்களின் வீடுகளுக்கு மனைவியை அழைத்துக் கொண்டு சென்று வந்தான் ரகுபாலன்.

அனைவருமே வெள்ளை மனதாக வரவேற்று உபசரித்தது இருவருக்குமே மிகவும் பிடித்திருந்தது.

அதிலும் கிராமத்து உபசரிப்பும், அந்தச் சூழலும் இந்துரேகாவிற்கு மிகவும் பிடித்துப் போயின.

அன்று இரவு தம்பதிகள் இருவரும் ரகுபாலனின் பெரிய பாட்டியின் வீட்டிற்கு விருந்துக்குச் சென்று விட்டு வீடு வந்து சேர்ந்த போதே நேரம் ஒன்பதுக்கு மேல் ஆகியிருந்தது.

''இனி ஊருக்கு வேண்டாம்மா. காலைல நேரத்துல எழுந்து போய்க்கலாம்.''

அப்படிச் சொன்ன கணவனை எதுவும் பேசாமல் பார்த்தாள் இந்துரேகா.

''என்னமா?''

''சரிதாங்க, ட்ரைவ் பண்ணப் போறது நீங்க. உங்களுக்கு எப்பிடி செஞ்சா சவுகர்யமோ, அப்பிடி செய்ங்க.''

''இப்படி செஞ்சா என்ன, நாளைக்குக் காலைல இங்கிருந்தே ரெண்டு பேரும் கம்பெனிக்குப் போய்க்கலாம்.



முதல்ல உன்னைக் கொண்டு வந்து விட்டுட்டு அப்புறம் நான் போய்க்கறேன்.''

''சரிதாங்க, இது நல்ல ஐடியா.''

''எப்பிடி ஐயாவோட மூளை?''

''என்னைவிடக் கொஞ்சம் குறைவு தான்.''

''எப்பிடி சொல்ற?''

''நீங்க இப்பிடித்தான் சொல்லுவீங்கன்னு நினைச்சு நான் அதுக்கும் தயாரா வந்திருக்கேனே.''

''சரிதான், ஒத்துக்கறேன். நான் மட்டுமா, அதுதான் காலைல இருந்து எல்லாருமே சொல்லிட்டாங்களே.''

''என்ன சொன்னாங்க?''

''ரகு அப்பாவியா இருந்தாலும் ரகுவோட பொண்டாட்டி நல்ல விவரம். ம்கூம் பெரிய ரா...''

''ஹலோ, நிஜமா அப்பிடியெல்லாம் சொன்னாங்க? சரி, அதெல்லாம் கூட இருக்கட்டும். நீங்க அப்பாவியா? இப்பிடியெல்லாம் அநியாயமா யாருமே சொன்ன மாதிரி எனக்குத் தெரியல. நீங்களே வேணும்னே தான் சொல்றீங்க.''

''ஏன், நான் அப்பாவி இல்லையா?''

''நீங்களே அப்பாவின்னா அப்புறம் இந்த உலகத்துல இருக்கறவங்க எல்லாரையும் என்ன சொல்றது...''

''என்னமா, அப்ப நீ என்னப் பத்தி இந்த மாதிரியா நினைச்சுட்டிருக்க?''

கணவனின் விரக்தியான அந்த வார்த்தைகளில் சிரிப்பு வந்து விட்டிருக்க, ''அதவிடக் கொஞ்சம் வேணும்னாக் குறைவா எடுத்துக்கலாம்,'' என்றாள்.

மனைவிக்குப் பதில் சொல்வதற்காக வாயைத் திறக்கப் போனவன், அதே நேரம் தனது மொபைலுக்கு வந்த அழைப்பை அட்டெண்ட் செய்து பேசினான்.

பேசுவது அந்த ஷர்மிளி தான் என்பது நன்றாகவே புரிந்தது.

"ஒரு நிமிஷம்..." என்று விட்டு மொபைலுடன் பேசிக் கொண்டே வெளியே சென்றிருந்த கணவன் அரை மணி நேரத்திற்கு மேலாகியும் இன்னும் தொடர்ந்து பேசிக்கொண்டே இருந்ததில் எரிச்சல் தான் வந்தது.

இரண்டு நாட்களுக்கு முன்னர் அந்த ஷர்மிளி வீட்டிற்கு வந்திருந்த போது அபர்ணா சொன்னது தான் நினைவிற்கு வந்தது.

அபர்ணா சொல்வதை வைத்துப் பார்த்தால் தனது கணவனுக்கும் அந்த ஷர்மிளிக்கும் இடையில் ஏதோ தவறான உறவு முன்பு இருந்தது என்று சொன்னதைப் போலத்தானே இருந்தது.

இப்பொழுது கணவனும் அவளிடம் இவ்வளவு நேரம், அதுவும் வெளியே சென்று பேசிக் கொண்டிருக்கிறானென்றால்...

அப்படியானால் அபர்ணா இல்லாத எதையும் சொல்லி விடவில்லையோ?

கொஞ்சமாவது இருக்கப் போய்த்தானே அவர்களும் சொல்லியிருக்கிறார்கள் போலிருக்கிறது.

அதேநேரம் கணவன் உள்ளே வர, எதுவும் பேசாமல் பார்த்தாள் இந்துரேகா.



''என் ஃப்ரண்ட் ஷர்மிளி, ரெண்டு நாளைக்கு முன்னாடி வீட்டுக்கு வந்திருந்தாளாமே.''

''ஆமாம், உங்களுக்குத் தெரியாதா?''

''நீ சொன்னியா, தெரியறதுக்கு?''

''நான் அத்தையோ, அபர்ணாவோ சொல்லியிருப்பாங்கன்னு நினைச்சேன்.''

''வீட்ல இருந்திருந்தா சொல்லியிருப்பாங்கதான். நாமதான் இங்க கிளம்பி வந்துட்டோமே.''

''அப்புறம் நீங்க அவங்களுக்கு மேரேஜ் இன்விடேஷன் அனுப்பலையா? உங்க ஃப்ரண்டா இருந்துட்டு உங்களுக்குக் கல்யாணம் நடந்ததே தெரியாதுன்னு சொல்றாங்க.''

''இல்லைமா. அம்மா அப்பா தான் கல்யாண அழைப்பு முழுவதையும் பாத்துக்கிட்டாங்க. நானும் ஷர்மிளிக்கு ஒரு இன்விடேஷனைக் குடுக்கத் தான் சொன்னேன். ஷர்மிளி வீட்ல அத அவளுக்குக் குடுக்க மறந்துட்டாங்க போலிருக்கு.''

''ஓ, அதோட...''

'என்னமா?''

''இல்லை. உங்க கல்யாணத்தப்ப ஷர்மிளியும் ஜாப்காக சென்னைல தான் இருந்திருக்காங்க. அப்ப நீங்க ரெண்டு பேரும் பாத்துப் பேசிக்கவே இல்லையா?''

''அதெல்லாம் எப்பவாவது சான்ஸ் கிடைச்சா பாத்துப் பேசறது வழக்கம்தான். ஆனா என் கல்யாணத்தப்ப ஒரு மாசம் வேல பிஸில பாக்க முடியல.''

பார்க்க முடியவில்லை. சரிதான். போனில் கூடவா தனக்குத் திருமணம் நிச்சயம் ஆகிவிட்டதென்ற விஷயத்தை அவளிடம் சொல்ல முடியவில்லை.

ஏன் அந்த ஷர்மிளியுமே கூட அதைத்தானே கேட்டாள்.

வழக்கத்திற்கு மாறாகக் கணவனின் அந்த முக பாவனையில் இந்துரேகாவாலும் அதற்கு மேல் எதையும் கேட்க முடியவில்லை.

இப்பொழுது தான் இவ்வளவு கேட்டதற்கே எங்கே தூண்டித் துருவிக் கேட்டதாக நினைத்துக் கொள்வானோ என்றிருந்தது.

தான் நினைத்தது சரியே என்பதைப் போல, அவ்வளவு நேரமும் நன்றாகப் பேசிக் கொண்டிருந்த கணவன் அவன் பாட்டுக்கு எழுந்து செல்வதைக் கண்டாள்.

சில நிமிடங்களில் திரும்பி வந்த கணவனிடம், ''பால் கொண்டு வரட்டுமா?'' என்று கேட்டாள் இந்துரேகா.

''இல்லமா. வேண்டாம்.''

''ஏன், எப்பவுமே குடிப்...''

''சரி. அர டம்ளர் மட்டும் குடு.''

''இதோ எடுத்துட்டு வர்றேங்க,'' என்று நகர்ந்த மனைவி அடுத்த சில நிமிடங்களில் இரண்டு டம்ளர்களில் பாலுடன் வர, ஒன்றைத் தான் வாங்கிக் கொண்டான் ரகுபாலன்.

''ரகு...''

''என்னமா?''



''எம் மேல கோபமா?''

''எதுக்கு?''

''நான் உங்ககிட்ட கேள்வி கேட்டதுக்கு...''

''அசடு!'' என்று புன்னகையுடன் மனைவியின் அருகில் வந்து அமர்ந்திருந்தான் ரகுபாலன்.

''அப்பக் கோபமில்ல தான?''

''ஏன் சின்னக் குழந்த மாதிரி திங்க் பண்ற? ஃப்ரீயா இரு.''

சில நிமிடங்களில் இருவரும் பாலைக் குடித்து முடித்திருக்க, டம்ளர்களை எடுத்துக் கொண்டு போய்க் கழுவி வைத்துவிட்டு வந்தாள்.

அதற்குப் பிறகும் கணவன், மனைவி இருவரும் வெகு நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டே தூங்கச் சென்றனர்.

ஏற்கெனவே முடிவு செய்தது போல மறுநாள் காலையிலேயே இருவரும் எழுந்து குளித்துக் கிளம்பித் தயாராயினர்.

''இந்து, கிளம்பலாமா?''

''ம்... கிளம்பலாங்க'' என்று கணவனுக்குப் பதில் சொல்லிக் கொண்டே முன்னறைக்கு வந்தாள் இந்துரேகா.

சரியாக அதே நேரம் ரகுபாலனின் தாத்தா அதாவது அவனுடைய தந்தையின் தந்தை வீட்டிற்குள் வர, கணவன், மனைவி இருவரும் வரவேற்றனர்.

''என்னமா, கிளம்பிட்டீங்களா?''

''ஆமாம் தாத்தா, இப்பக் கிளம்பினாதான் இந்துவக் கொண்டு போய் விட்டுட்டு அப்புறம் நான் போய்ச் சேர நேரம் இருக்கும்,'' என்றான் ரகுபாலன்.

''அது சரிதான். அப்புறம் இதுல உங்க பாட்டி தக்காளி சாதம் தயிர் சாதம் ரெண்டு பேருக்கும் இப்பத்துக்கும், மதியத்துக்கும் தனித்தனியாகக் கட்டிக் குடுத்திருக்கா,'' என்று தாத்தா கொடுத்ததை வாங்கிக் கொண்டாள் இந்துரேகா.

''பாட்டிக்குத் தான் சிரமம் தாத்தா.''

அப்படிச் சொன்னவளைப் புன்னகையுடன் பார்த்த வேதாசலம், ''நல்லவேளை, இது அந்தப் பாட்டி கேக்கல, அப்புறம் உங்கிட்ட சண்டைக்கு வந்திருப்பா,'' என்று மெல்லிய குரலில் சொன்னார்.

''எப்பிடியோ இனி நல்ல ஹோட்டலப் போய்த் தேடிட்டிருக்கணுமேன்னு நினைச்சுட்டிருந்தோம். பாட்டிக்கு தேங்க்ஸ் சொல்லிடுங்க தாத்தா,'' என்றான் ரகு பாலன்.

''தேங்க்ஸ் அவளுக்கு மட்டும் தானா? சரியான நேரத்துக்குக் கொண்டு வந்து சேத்த எனக்கு இல்லையாடா தேங்க்ஸ்?''

''இப்பதான் யாரோ எம் பொண்டாட்டி கிட்ட ஏதேதோ சொல்லிட்டிருந்தாங்க...''

''எம் மருமகப் புள்ளகிட்ட நான் விளையாட்டுக்குப் பேசறேன், உனக்கென்னடா?''

''சரிதான் தாத்தா, பேசுங்க.''



''பாத்துக் கார மெதுவா ஓட்டிட்டுப் போடா. இந்த மாதிரி சமயத்துல ரெஸ்ட்ல தான் இருக்கணும்னு சொல்லுவாங்க. ஆனா நீ இந்துவ என்ன பாடு படுத்திட்டிருக்க?''

''அப்ப நாங்க வந்ததுல சந்தோஷமில்லையா உங்களுக்கு?''

''என்ன வார்த்த கேட்டுட்ட. வந்ததும் போறீங்களேன்னு தான் கவலப்பட்டேன். அடுத்த முறையாவது சேந்தாப்போல நாலு நாள் இருக்கற மாதிரி வாங்க.''

''நீங்களும், பாட்டியும் முதல்ல ஊருக்கு வந்து ஒரு மாசம் இருங்க. மத்ததை யெல்லாம் அப்புறம் பாக்கலாம்.''

''வர்றோம் ரகு,'' என்று வேதாசலம் சொல்ல, ''ஆமாம் தாத்தா, அவசியம் நீங்க ரெண்டு பேரும் ஊர்ல வந்து கொஞ்ச நாள் இருக்கணும்,'' என்று தானும் அழைத்தாள் இந்துரேகா.

''வர்றோம்மா. நீ உடம்ப பத்தரமாப் பாத்துக்கோ. தலப் புள்ளையா சிங்கக் குட்டியப் பெத்துத் தரணும். சொல்லிட்டேன்.''

''சரிதான் தாத்தா,'' என்று சிறு வெட்கத்துடன் இந்து ரேகா சொல்ல, ''ம்கூம். பெண் குழந்தை தான்!'' என்றான் ரகுபாலன்.

''ஏதோ ஒன்னுமா. குடும்பத்துக்கு வர்ற முதல் பேரக் குழந்தைய ஆரோக்கியமாப் பெத்து எடுத்தா சரி,'' என்றார்.

''சரி தாத்தா. அப்ப நாங்க கிளம்பறோம். பாட்டிகிட்ட சொல்லிடுங்க,'' என்ற ரகுபாலன் உடனே மனைவியுடன் கிளம்பி விட்டிருந்தான்.

# 10

மாலையில் தான் வேலை முடிந்து வீட்டிற்கு வந்த போது ஷர்மிளி வீட்டிற்கு வந்திருப்பதைக் கண்டாள் இந்துரேகா.

அபர்ணாவும், அவளும் வெகு மும்முரமாகப் பேசிக் கொண்டிருந்ததையும். "வாங்க!" என்று ஷர்மிளியைத் தானும் வரவேற்றவள், நலம் விசாரித்துச் சில வார்த்தைகள் பேசினாள்.

"அப்புறம் குட் நியூஸ் கேள்விப்பட்டேன். அப்பிடியா?" என்றவளைப் பார்த்தாள் இந்துரேகா.

உடனே, "இதுதான்," என்று அந்த ஷர்மிளி வயிற்றைத் தொட்டுக் காட்ட, சிறு வெட்கம் கலந்த புன்னகையுடன் "ஆமாம்," என்றாள்.

"டாக்டர்கிட்டப் போனீங்களா?"

ஷர்மிளி கேட்கக் கேட்க, அவை அனைத்திற்கும் சிரித்த முகத்துடன் பதில் சொன்னாள் இந்துரேகா.

மீண்டும் ஷர்மிளி திரும்பி, அபர்ணாவிடம் பேசத் தொடங்கியிருக்க, "இதோ வர்றேன்," என்று தன்னுடைய அறைக்குச் செல்லத் திரும்பினாள் இந்துரேகா.

"அதே நேரம் ஊர்ல எல்லாரும் எப்பிடியிருக்காங்க?" என்று அபர்ணா கேட்க, "நல்லார்க்காங்கக்கா!" என்றாள்.



"அப்புறம் நேத்தே திரும்பிடுவோம்னு சொல்லிட்டுப் போனீங்க."

"அப்பிடிதான் நினைச்சோம். ஆனா அங்கயே ரொம்ப லேட்டாயிடுச்சுக்கா."

"என்ன அபர்ணாக்க நீங்க, நியூலி மேரிட் கப்புள்ஸ், யாருமில்லாத தனிமை. அவ்வளவு சீக்கிரம் திரும்ப மனசு வருமாக்கும்?" என்று கிண்டலாகக் கேட்டுச் சிரித்தாள் ஷர்மிளி.

"அது சரிதான்," என்று அபர்ணா சொல்லிக் கொண்டிருக்கும் போதே, அங்கு வந்தார் மதுரவாணி.

தனது அத்தையைக் கண்டதும் ஒரு எட்டு எடுத்து வைத்திருந்த இந்துரேகா மீண்டும் நின்று அவரைப் பார்த்தாள்.

"அன்னைக்கு திடீர்னு வந்து கிளம்புறோம்னு நிக்க நீங்க. ஆம்பளைங்களுக்குப் புரியாது. நீதான் வேண்டாம்னு சொல்லணும். ஆனா நீ உம் புருஷனுக்கு முன்னாடி கிளம்பி நிக்கற. இந்த மாதிரி சமயத்துல இப்பிடியெல்லாம் கார்லயே ஆனாலும் போகலாமா? டாக்டர் கிட்டக் கேட்டீங்களா?"

"ஏன் அத்தெ, அப்பிடிப் பாத்தா தினமும் வேலைக்குப் போறதுக்கு காலை, மாலை ரெண்டு வேளையும் ஒன் அவர்க்கும் மேல ட்ரேவல் பண்ணிட்டுதான இருக்கா?"

தனது பெரிய மருமகள் கேட்க, "ஆனாலும் இப்ப ஏழெட்டு மணி நேரமில்ல பயணம் செஞ்சுட்டு வந்திருக்கா," என்றார் மதுரவாணி.

தான் சொன்னதைக் கண்டு கொள்ளாததோடு, அவருடைய சிறிய மருமகளுக்காகப் பரிந்து பேசிய

அத்தையைக் கோபத்தைத் தனக்குள் மறைத்துக் கொண்டு பார்த்தாள் அபர்ணா.

அந்தக் கோபம் அப்படியே வார்த்தைகளாகவும் மாறியது.

''அந்த அக்கறை அவளுக்குத் தான அத்தை மத்தவங்களை விடவும் அதிகமா இருக்கணும். அவளுக்கு இல்லாதது மத்தவங்களுக்கு என்ன?''

''அதுசரி, நீயும் அனுபவம் இல்லாதவங்கறது சரியா தான் இருக்கு. இந்தக் குடும்பத்துக்கு வரப்போற முதல் பேரப் புள்ள நல்லபடியாப் பெத்தெடுக்க வேண்டாம்?''

மதுரவாணி பேசப்பேச இந்துரேகாவிற்குத் தான் மிகவும் பயமாக இருந்தது. அப்படியானால் வருகிற வாரம் ஏற்கெனவே முடிவு செய்ததைப் போல ஊருக்குச் செல்ல முடியாமல் போய்விடுமோ என்பது தான் அவளுடைய அந்தப் பயத்திற்கான காரணமும்.

''சரிசரி. வயித்துப் பிள்ளைக்காரி வெறும் வயித்தோட நின்னுட்டிருக்காம கைகால் முகம் கழுவிட்டு வந்து எதையாவது சாப்புடு, போ.''

அப்படிச் சொன்ன தனது அத்தைக்குச் சரி என்பதைப் போலத் தலையை ஆட்டிவிட்டு உள்ளே வந்திருந்தாள் இந்துரேகா.

ஆனால் அவளுடைய மனம் தான் பாரமாகி விட்டிருந்தது.

நிச்சயம் நாம் வரும் வாரம் ஊருக்குச் செல்லப் போவதில்லை என்பது உறுதியாகி விட்டிருக்க, கலங்கிய கண்களுடன் அப்படியே படுக்கையில் விழுந்திருந்தாள்.



இரண்டு நாட்களாக அலைந்தது தூக்கம் குறைந்தது என அனைத்தும் சேர்ந்து கொண்டதில் அப்படியே தூங்கியும் போய் விட்டிருந்தாள்.

எவ்வளவு நேரம் அப்படித் தூங்கினாளோ, ஏதோ அரவம் கேட்டதில் திரும்பிப் பார்த்தாள்.

கணவன் வந்து வேஷ்டி பனியனுக்கு மாறிக் கொண்டிருப்பது தெரிந்தது.

அதே நேரம் தானும் திரும்பி மனைவியைப் பார்த்த ரகுபாலன், ''என்னடா, ஏன் படுத்துட்ட? என்ன பண்ணுது?'' என்று மனைவியின் அருகில் வந்தான்.

கணவனின் அருகாமையிலோ அல்லது அக்கறையான விசாரிப்பிலோ மீண்டும் கண்கள் கலங்கி விட்டிருந்தன இந்துரேகாவிற்கு.

அந்த நிலையில் மனைவியைப் பார்த்த ரகுபாலனும் சில வினாடிகள் பதறித்தான் போனான்.

''என்னமா, உடம்புக்கு என்ன பண்ணுது?''

...............

கணவனுக்குப் பதில் சொல்ல மனம் நினைத்தாலும், வந்த அழுகை அதற்கு விடாமல் தடுத்தது.

''நான் ஒரு முட்டாள். உன்ன அவ்வளவு தூரம் இந்த மாதிரி சமயத்துல கூப்டுட்...''

''ஐயோ! எனக்கு உடம்புக்கெல்லாம் ஒன்னுமில்ல ரகு. நீங்க அவ்வளவு மெதுவாப் பாத்துப் பாத்துக் கார ஓட்டும்போது அப்பிடி என்ன வந்துடுமாம்...''

''பின்ன எதுக்கு அழுற?''

''வர்ற வாரம் என்ன ஊருக்குக் கூட்டிட்டுப் போவீங்க தான ரகு?''

''ஏன் திடீர்னு எதுக்கு...''

''ப்ளீஸ் சொல்லுங்க.''

''நான் இதுநாள் வரைக்கும் எதையாவது சொல்லிட்டு செய்யாம விட்டிருக்கேனா?''

.....

''சொல்லு இந்து.''

''ம்கூம்.''

''அப்படித்தான் எல்லாமே.''

''ஆனா ஊருக்குப் போறதுக்கு அத்தெ விடமாட் டாங்க.''

''ஏன், அவங்க என்ன சொன்னாங்க?''

''இந்த மாதிரி சமயத்துல ட்ரேவல் பண்ணக் கூடாதுன்னு மட்டும் சொன்னாங்க.''

''சரி, வேறென்ன சொன்னாங்க?''

''நேத்து நாம போய்ட்டு வந்ததுக்கே புலம்பினாங்க.''

வரும் வாரம் அவளுடைய ஊருக்குப் போக முடியாமல் போய் விடுமோ என்ற மனைவியின் பயம் ரகுபாலனுக்கும் புரியவே செய்தது.

''இந்து, இங்க பாரு...

''மத்தவங்களுக்கு இருக்கற அதே அக்கற எனக்கும் இருக்கு. எதுக்கும் டாக்டர்கிட்டயும் இன்னொரு தடவ



போய்க் கேட்டுக்கலாம். எதுவா இருந்தாலும் நாம ஊருக்குப் போறது உறுதி. போதுமா?''

கணவனின் வார்த்தையில் அதுவரை இருந்த பாரமெல்லாம் காணாமல் போய் விட்டிருக்க, சந்தோஷத்தில் எழுந்து கணவனின் கன்னத்தில் இதழ் பதித்திருந்தாள் இந்துரேகா.

அருகில் வந்திருந்த மனைவியைத் தானும் மிக அருகில் இழுத்திருந்த ரகுபாலன் அவளுடைய கண்களை ஊடுருவிப் பார்த்தான்.

''என்ன, இப்ப சந்தோஷமா?''

''ம்'' என்ற இந்துரேகா கணவனிடமிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முயல, அதற்கு விடாமல் மனைவியை இன்னும் அருகில் இழுத்து அணைத்துக் கொண்டு விட்டிருந்தான்.

முதலில் திமிறியவள் போகப் போகக் கணவனின் அணைப்பில் தன்னை மறக்கத் தொடங்கி விட்டிருந்தாள்.

எவ்வளவு நேரம் இருவரும் அப்படி இருந்தார்களோ...

யாரோ அழைக்கும் குரலில் முதலில் நடப்புக்கு வந்தது ரகுபாலன். கணவனின் அசைவை உணர்ந்து தானும் நடப்புக்கு வந்திருந்த இந்துரேகா அவனிடமிருந்து விலகும்போதே தனது அத்தை மதுரவாணி உள்ளே வந்து கொண்டிருப்பதைக் கண்டாள்.

''வாங்கமா.''

கணவன் தனது தாயிடம் சகஜமாகப் பேசத் தொடங்கியிருக்க, அவளுக்குத்தான் தான் இருந்த நிலையிலும்

அதைத் தனது அத்தை பார்த்து விட்டதிலும் மனதிற்குள் மிகவும் ஒரு மாதிரியாகி விட்டிருந்தது.

சில வினாடிகள் பேசிய மதுரவாணி, ''இந்தாங்க. இதுல டிஃபனும் ஃப்ளாஸ்க்ல டீயும் இருக்கு. எடுத்துக்கோங்க,'' என்று சொல்லிவிட்டு வெளியே சென்றிருந்தார்.

அவர் சென்றது தான் தாமதம், தொப்பென்று படுக்கையில் அமர்ந்து விட்டிருந்தாள் இந்துரேகா.

''என்னமா?''

''போங்க ரகு. எல்லாம் உங்களால தான்.''

''ஹேய் கூல்!'' என்று கணவன் அருகில் வந்து அமர, மேலும் சற்று தள்ளி அமர்ந்து கொண்டாள்.

''இப்ப என்ன ஆயிடுச்சுன்னு...''

''இனியும் என்ன ஆகணுங்கறீங்க?''

''இந்து, இங்க பாரு...'' என்று ரகுபாலன் ஏதோ சொல்வதற்காக வாயைத் திறப்பதற்குள்ளேயே, ''உள்ளே வரலாமா?'' என்ற ஒரு பெண்ணின் குரலில் கணவன் மனைவி இருவருமே ஒரு சேர வாயிலைப் பார்த்தனர்.

அதற்குப் பிறகும் சில வினாடிகள் கழித்தே ஷர்மிளி உள்ளே வர, ''வா,'' என்று வரவேற்றான் ரகுபாலன்.

''என்ன, மும்முரமாய் பேசிட்டிருக்கறவங்கள டிஸ்டர்ப் பண்ணிட்டேன் போலிருக்கே!'' என்று கேட்டுக் கொண்டே உள்ளே வந்திருந்த ஷர்மிளி, அங்கிருந்த ஒரு சோஃபாவில் அமர, ''அதெல்லாம் ஒன்னுமில்லே,'' என்று புன்னகையுடன் கணவனை முந்திக் கொண்டு பதில் சொன்னாள் இந்துரேகா.



''உங்களுக்கு அப்பிடியில்ல. ஆனா ரகுவுக்கு...''

''யாருக்கும் ஒன்னுமில்ல. அப்புறம் எப்ப வந்த?''

''எங்கிருந்து கேக்கறீங்க? சென்னையிலிருந்தா, இல்ல...''

''ம், இப்ப நம்ம வீட்டுக்கு எப்ப வந்தேன்னு கேக்கறேன் மேடம். விட்டா பத்து வருஷத்துக்கு முன்னாடி நடந்ததுக்கெல்லாம் சேத்து நான் கேக்கறதா நினைச்சுக்குவ போலிருக்கு.''

''அர மணி நேரமாச்சு ரகு,'' என்றவள், ''அப்புறம் ஊர்ல இருந்து காலைல அப்பிடியே கம்பெனிக்குப் போய்ட்டிங்களா?'' என்றாள்.

''ஆமாம், டிஃபன் எடுத்துக்கோ.''

''நான் சாப்டாச்சு. நீங்க எடுத்துக்கோங்க.''

இந்துரேகாவும் ஒரு முறை சொல்ல, ''ஆன்ட்டி குடுத்தாங்க முறுக்கு. நல்லா இருந்ததால நான் ஃபுல்லா சாப்டுட்டேன்,'' என்றாள்.

தொடர்ந்து வந்த சில நிமிடங்களில், ''இதோ வர்றேன்,'' என்று பொதுவாகச் சொல்லி விட்டு இந்துரேகா கீழே இறங்கிச் சென்றிருக்க, ரகுபாலனும், ஷர்மிளியும் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

''சொல்லு, என்ன விஷயம்?'' என்ற ரகுபாலனை எதுவும் பேசாமல் பார்த்தாள் ஷர்மிளி.

''புரியல.''

''இப்ப இங்க எதுக்கு வந்த?''

"என்ன ரகு, இப்பிடிக் கேக்கற, சும்மா உன்னப் பாத்துட்டுப் போகத்தான்."

"பாத்தாச்சு இல்லையா, கிளம்பு."

"ஏன் என்னைப் பாத்தாலே இப்படி பயந்துக்கற?"

"புத்தியில்லாம முட்டாள்தனமா நடந்துக்கற உன்ன மாதிரி ஆளுங்ககிட்டப் பின்ன எப்பிடி நடந்துக்கறது?"

"ஏன் ரகு என்ன இப்பிடியெல்லாம் சொல்ற?"

..........

"சரிதான். நான் ஒரு தலையா ஏதேதோ நினைச்சு ஏமாந்து போனேன். அதெல்லாம் என் தப்புதான். அதுக்காக என்ன சாதாரணமாகக் கூட வரக் கூடாது, பேசக் கூடாதுங்கறீங்களா?"

"அதனால பிரச்சன வருங்கற பட்சத்துல குறைச்சுக் கிட்டாத் தப்பில்லேன்னு சொல்றேன்."

..........

"எனக்கு இந்து முக்கியம். அவளோட சந்தோஷமும் நிம்மதியும் கூட."

"ஓ, அப்ப என்னப் பத்திக் கவலை இல்லேங்கற, இல்லையா?"

"நீ ஒரு நல்ல ஃப்ரண்டா இருக்கற பட்சத்துல நீயும் எனக்கு முக்கியம் தான். ஆனா அப்பிடியில்லாம நீயே எல்லாத்தையும் கெடுத்துக்கும் போது நான் என்ன பண்ண முடியும், சொல்லு?"

"அப்ப இனிமேல் நான் வராம இருந்துட்டா சந்தோஷப்படுவேன்னு சொல்ற, இல்லையா?"




"சரிதான். அவசியமில்லாம வராம இருந்தா ரொம்ப சந்தோஷப்படுவேன். இல்லன்னா உம் மனசுக்குள்ள இருக்கற தப்பான எண்ணத்த நீ முழுசா மாத்திக் கிட்டாலும்."

குனிந்து தனது கண்களைத் துடைத்துக் கொண்ட ஷர்மிளியைப் பார்த்தவனுக்கும் என்னவோ போலத்தான் இருந்தது.

ஏன் இப்படியெல்லாம் நடந்து கொண்டு, அவள் சிரமப்படுவதோடு அல்லாமல், நம்மையும் சேர்த்து ஒரு வழி செய்கிறாள் என்று எரிச்சலாகவும்.

"உண்மயச் சொல்லணும்னா, என்னால உன்ன மறக்க முடியல. அவ்வளவுதான்."

..........

"நீ என்ன வேண்டான்னு சொல்றதுக்கு, ஏன் வீட்டுக்கு வர வேண்டாம்னு சொல்றதுக்கு, எல்லாத்துக்குமே உனக்கு உரிமையிருக்கு, ஆனா எம் மனசுக்குள்ள இருக்கற உன்ன மட்டும் அந்தக் கடவுளால கூட ஒன்னும் பண்ண முடியாது."

"திரும்பவும் முட்டாள்தன..."

"ஆமாம் ரகு. நான் முட்டாள் தான். அத நானே ஒத்துக்கறேன். என் இடத்துல நீ இருந்தா தான் உனக்கு என் நிலம புரியும்."

மீண்டும் பழையபடி உளறத் தொடங்கி விட்டாளே என்று தோன்றிய எரிச்சலை முயன்று தனக்குள் மறைத்துக் கொண்டான் ரகுபாலன்.

''சரி. இப்பக் கிளம்பறியா?''

ஒரு சில வினாடிகளில், ''வர்றேன் ரகு,'' என்று கிளம்பியே விட்டிருந்தாள் ஷர்மிளி.

அவள் எழுந்து சென்று வெகு நேரம் ஆகி விட்ட பின்னரும் கூட ஏதோ ரகுபாலனால் இயல்பான மன நிலைக்குத் திரும்ப முடிந்திருக்கவில்லை.

அந்த அளவிற்கு ஒருசேரத் தோன்றிய எரிச்சலையும், கோபத்தையும் முயன்று தனக்குள் கட்டுப்படுத்திக் கொண்டான்.

# 11

''ரகு.''

மனைவி அழைக்க, ''என்னமா?'' என்று நிமிர்ந்தான் ரகுபாலன்.

''பிஸியா இருக்கீங்களா?''

''இல்ல. சொல்லு.''

''ஒன்னுமில்ல. சும்மாதான்...''

ஸீரியஸாக எதையோ கேட்க வந்து விட்டுப் பிறகு மறுக்கும் மனைவியைப் பார்த்தவன், ''எதுவா இருந்தாலும் கேளுமா. ஏன் தயங்கற?'' என்றான்.

''நீங்க தப்பா எடுத்துக்குவீங்களோன்னு தான்...''



''என்ன, சொல்லு?''

''இல்ல, ஷர்மிளி...''

''ம்.''

''அவங்க எதுக்கு வந்தாங்க? ஸாரி. அவங்க உங்க ஃப்ரண்ட். அந்த உரிமைல தான் வந்தாங்கன்னு எனக்கும் தெரியும்...''

''ஏன் யாராவது ஏதாவது சொன்னாங்களா?''

''ம்கூம். இல்ல. நானா தான் கேக்கறேன்.''

''சும்மா மழுப்பாத.''

''இல்ல. அன்னைக்கு நீங்க வெளியூர் போயிருந்த போது ஷர்மிளி வந்திருந்தப்ப...''

..........

அன்று முதல் முறை ஷர்மிளி வீட்டிற்கு வந்து சென்ற போது அபர்ணா சொன்னதைக் கணவனிடம் தட்டுத் தடுமாறிக் கடைசியில் ஒரு வழியாகச் சொல்லியே விட்டிருந்தாள் இந்துரேகா.

எதுவும் பேசாமல் சில வினாடிகள் மனைவியைப் பார்த்தான் ரகுபாலன்.

''அபர்ணான்னு இல்ல, இந்தத் தவறான கண்ணோட்டம் நம்ம சமுதாயத்தோட இயல்பு. ஒரு ஆணையும் பெண்ணையும் சேத்துப் பாத்துட்டாலே உடனே தப்பான சாயம் பூச ஆரம்பிச்சிடுவாங்க.

''அபர்ணா சொன்னத நீ உண்மைன்னு நம்பறியா?''

''அச்சச்சோ! என்ன ரகு நீங்க, சும்மா ஒரு வார்த்த கேட்டேன். அவ்வளவுதான்...''

"புரியுதுமா," என்றவன், மனைவியைப் பார்த்து, "உனக்கு எம்மேல நம்பிக்கை இருக்கு தான?" என்று கேட்டான்.

"நூறு சத விகிதம் இருக்கு ரகு!" என்று உணர்ந்து சொன்ன மனைவியின் கையைப் பிடித்து அருகில் அமர்த்திக் கொண்டவன், "மனசுக்குள்ள வெச்சுக்காம நீ கேட்டதே எனக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா?" என்றான்.

"ரகு..."

"என்னமா?"

"இப்ப நான் உங்ககிட்டக் கேட்டதே கூட அபர்ணாக்கா ஏன் இப்படியெல்லாம் ஒன்னுமில்லாததப் பெரிசு பண்றாங்கன்ற ஆதங்கத்துல தான். உங்க மேல சந்தேகப்பட்டு இல்..."

"அத நீ சொல்ல வேற செய்யணுமா இந்து?" என்ற ரகுபாலனுக்கு மனைவியை நினைத்துப் பெருமையாக இருந்தது.

சொந்தங்கள் யாரையும் விட்டுக் கொடுக்காமல் யாருடைய மனதையும் புண்படுத்தாமல் எந்த அளவிற்குப் பெருந்தன்மையாக நடந்து கொள்கிறாள் என்று சந்தோஷத்துடன் நினைத்தான்.

ஷர்மிளியைப் பற்றிக் கூட மனைவியிடம் சொல்லி விட்டால் என்னவென்று நினைத்தான் ரகுபாலன்.

தானே இருப்பதை அதாவது உள்ளதை உள்ளபடி சொல்லிவிட்டால் மற்றவர்கள் யாரும் இடையில் புகுந்து இல்லாததையும் பொல்லாததையும சொல்லித் தர முடியாதல்லவா?



ஏன், அந்த ஷர்மிளியே எதையாவது சொன்னாலும் கூட அதை இவள் நம்ப வேண்டிய அவசியம் வராதல்லவா?

இப்படி எதையெதையோ எண்ணிக் கொண்ட ரகுபாலன் உடனே தனது எண்ணத்தின் போக்கை மாற்றிக் கொண்டான்.

வேண்டாம், நிம்மதியாக இருப்பவளை நாமே அவசியமின்றி மனம் கலங்கச் செய்ய வேண்டாம்.

"என்னங்க, ஏதோ யோசனைல இருக்கீங்க போலிருக்கு?"

"அதெல்லாம் இல்லமா. வர்ற வாரம் ஊருக்குப் போறதுக்கு இன்னுமொரு நாளும் கூட அதிகமா லீவ் போட்டுக்கலாமான்னு யோசிக்கறேன்.

"என்ன பாக்கற? கல்யாணமானதுக்கு அப்புறம் இப்ப தான ஃபர்ஸ்ட் டைம் போறோம். அதான் சொல்றேன்."

கணவனிடம் சந்தோஷமாகத் தனது சம்மதத்தைத் தெரிவித்தாள் இந்துரேகா.

"எனக்கு லீவ் பிரச்சனையில்லைங்க. நான் தாராளமா ரெண்டு நாள் எடுத்துக்கலாம்."

"எனக்கும் லீவ் நிறையச் சேந்துடுச்சுமா," என்றவன், "அப்ப விடு. த்ரீ டேஸ் ட்ரிப் முடிவாயிடுச்சு," என்றான்.

கம்பெனியில் வேலையில் பிஸியாக இருந்த ரகுபாலன் தனது மொபைலுக்கு அழைப்பு வர எடுத்துப் பார்த்தான்.

ஷர்மிளி அழைத்திருக்க, எரிச்சலுடன் மொபைலைக் கீழே வைத்தான்.

இடைவெளி விட்டு விட்டு நான்கைந்து முறை அழைப்பு வந்திருக்க, உணவு இடைவேளையின் போது அவனாகவே அழைத்துப் பேசினான்.

சில நிமிடங்கள் பேசிவிட்டு மொபைலைக் கீழே வைத்திருந்தவனுக்கு எப்படியோ திருந்தினால் சரியென்றிருந்தது.

எதிர்முனையில் ஷர்மிளி சொன்னது இதுதான்.

வீட்டிற்குப் போய் வெகு நேரம் யோசித்த போது தான் இத்தனை நாட்களாக நான் செய்து கொண்டிருந்த தவறு எனக்கே புரிந்தது.

எனக்கு என்ன குறை, நான் எதற்காக அவசியமின்றி எனது வயதையும், பொன்னான நாட்களையும் இனியும் வீணடித்துக் கொண்டிருக்க வேண்டும்.

எனது பெற்றவர்களிடம் திருமணத்திற்குச் சம்மதத்தைத் தெரிவித்து விட்டேன்.

கூடிய விரைவில் இனி எனது திருமணத்தை எதிர் பார்க்கலாம். இனி நான் உங்களையும் எந்த விதத்திலும் தொல்லை செய்ய மாட்டேன். நீங்களே விரும்புவது போல நல்ல தோழியாக மட்டுமே இருப்பேனென்று முடித்திருந்தாள்.

புலி பதுங்குவது பாய்வதற்காகத் தானோ? எதற்கும் நாம் ஜாக்கிரதையாகத் தான் இருக்க வேண்டுமோ?

என்ன இது, அவளே செய்த தவறை யெல்லாம் உணர்ந்து திருந்தப் பார்க்கிறாள். அதற்கு விடாமல் நாமே இப்படிச் சந்தேகப் பட்டால் என்ன அர்த்தம்.



அப்பொழுது ஷர்மிளியை அழைத்துப் பேசியது தான். அதற்குப் பிறகு ரகுபாலன் அவளைப் பற்றி மறந்தும் கூடப் போனான்.

ஒரு வாரம் சென்றிருந்தது.

ஏற்கெனவே முடிவு செய்தது போல, மனைவியை அவளுடைய ஊருக்கு அழைத்துப் போய் வந்திருந்தான்.

முதல் முறையாக ஊருக்குச் சென்று வந்த பொழுது கேட்டது போல, வந்ததும் வராததுமாக இந்துரேகாவிடம் மிகுந்த அக்கறையுடன் நலம் விசாரித்துப் பேசிய தனது அத்தையின் செய்கையில் அபர்ணாவின் நெஞ்சு கொதித்தது.

அது மட்டுமா?

இப்பொழுதெல்லாம் முன்னைப் போல அவளிடம் வேலைகளைக் கூட வாங்குவதில்லையே, இந்த அத்தை. தானே அனைத்தையும் இழுத்துப் போட்டுக் கொண்டல்லவா செய்து கொண்டிருக்கிறார்.

அனைத்திலும் உச்ச கட்டமாக இப்பொழுது நீ சுத்தமாக வேலையே செய்வதில்லையென்று தன்னை வேறு குறை சொல்லத் தொடங்கி விட்டிருக்கிறாரே.

இப்படியே போனால் அந்த இந்துரேகாவிற்கு முன்பாகவே கூடத் தன்னை ஏதேனும் கேட்டு விடுவாரோ.

ம்கூம், எக்காரணத்தைக் கொண்டும் அந்த மாதிரி ஒரு நிலை வந்து விடவே கூடாது. அதற்குத் தான் விடக் கூடாது.

“இந்து.”

தனது அத்தை மதுரவாணி அழைக்க, சென்று என்ன வென்று கேட்டாள் இந்துரேகா.

''நான் ஒரு கல்யாணத்துக்குப் போக வேண்டி யிருக்கு, போய்ட்டு ஒரு மணி நேரத்துல திரும் பிடுவேன். முடிஞ்சா நைட் சமையல் வேலைய முடிச்சு வை.''

''சரி அத்தெ.''

''அபர்ணாவையும் கூப்பிட்டுக்கோ. நானும் சொல் லிட்டுப் போறேன்.''

அவளை எப்படித் தான் வேலை வாங்குவது...

''இல்ல அத்தெ. நானே செஞ்சுடுவேன்.''

''அப்புறம் உன்னிஷ்டம். எல்லாத்தையும் தயாரா எடுத்து வெச்சிருக்கேன். நைட்டுக்கு சப்பாத்தி குருமாவ செஞ்சு உப்புமாவையும் செஞ்சு வெச்சுடுங்க.''

''சரி அத்தெ.''

அடுத்த சில நிமிடங்களில் அவருடைய பெரிய மகனுடன் தனது அத்தை கிளம்பி விட்டிருக்க, சமையல் வேலைகளைக் கவனிக்கத் தொடங்கி விட்டிருந்தாள் இந்துரேகா.

திடீரென்று தனக்குப் பின்னால் ஏதோ நிழலாடுவது போல இருக்கத் திரும்பிப் பார்த்தாள்.

சமையலறை வாயிலில் அபர்ணா நின்று கொண் டிருக்க, ''வாங்கக்கா,'' என்றாள்.

''ஓ, உன்னோட வேல தானா?''

அப்படிச் சொன்னவளைப் புரியாமல் பார்த்தாள் இந்து ரேகா.



''உனக்குச் சமையல் வேலைல ஹெல்ப் பண்ணச் சொல்லி அத்தை சொல்லிட்டுப் போனாங்க, அப்பிடி சொல்லச் சொன்னது நீதானா?''

''அச்சச்சோ! நானில்லக்கா. நைட் டிபன நம்ம ரெண்டு பேரையும் சேந்து செஞ்சு வைக்கச் சொல்லி மட்டும் அத்தெ சொல்லிட்டுப் போனாங்க.''

''அதத்தான் கேக்கறேன். ஏன் மேடம், நீங்க மட்டும் தனியா செய்ய மாட்டிங்களோ? உங்களுக்கு ஹெல்ப் புக்கு ஒரு ஆள் வேணுமாக்கும்.''

''அதெல்லாம் நான் தனியாவே செஞ்சுடுவேன்கா. அப்பிடிதான் செஞ்சுட்டும் இருக்கேன். ஒருவேள நான் செஞ்சா எப்படியிருக்குமோன்னு உங்களையும் சேந்து செய்யச் சொல்லியிருப்பாங்களா இருக்கலாம்.''

''நல்லாப் பேசற!'' என்ற அபர்ணா, சரியாக அதே நேரம் பார்த்து வீட்டிற்குள் வந்த ஷர்மிளியை சந்தோஷமாக வரவேற்றாள்.

இவள் எங்கே மீண்டும் வந்திருக்கிறாள் என்ற எண்ணத்தை முயன்று தனக்குள் மறைத்துக் கொண்டு அவளைத் தானும் வரவேற்றாள் இந்துரேகா.

''அப்புறம் நான் வந்ததே பிடிக்கல போலிருக்கே?''

ஷர்மிளி கேட்க, ''அச்சச்சோ! அப்பிடியெல்லாம் ஒன்னுமில்லையே!'' என்று அவசரமாக மறுத்தாள்.

''சரி சரி. எங்க ரெண்டு பேர்க்கும் ஸ்ட்ராங்கா காபி கலக்கு, உடனே வந்தாகணும்,'' என்றுவிட்டு ஷர்மிளி யுடன் ஹாலுக்கு வந்திருந்தாள் அபர்ணா.

''அப்புறம் ஷர்மிளி...''

''சொல்லுங்கக்கா.''

''ஏன் லாஸ்ட் ஒன் வீக்கா நீ வரவே இல்ல?''

''சும்மாதான்கா.''

''மழுப்பாத. ஏன் ரகு ஏதாவது சொன்னாரா?''

என்ன முயன்றும் ஷர்மிளியால் தன்னைக் கட்டுப் படுத்திக் கொள்ள முடியாது போகத் திரும்பி நின்று கண் களைத் துடைத்துக் கொண்டாள்.

''ஏய், என்னாச்சு...''

''ஒன்னுமி...''

''ஒன்னுமில்லாததுக்குதான் அழறயாக்கும்? சொல்லு. எதுவா இருந்தாலும் நான் என்னால் முடிஞ்ச ஹெல்ப் பண்றேன்.''

''அப்பிடி யெல்லாம் ஒன்...''

''ஷர்மிளி.''

''நிஜமாதான்கா.''

''நான் நம்ப மாட்டேன். உண்மையான காரணத்த நீ சொல்ற வரைக்கும் நான் விடவும் மாட்டேன்.''

''சரி. சொல்றேன். ஆனா அத நீங்க மனசுக்குள்ளயே வெச்சுக்குவீங்கன்னு எனக்குச் சத்தியம் பண்ணிக் குடுங்க.''

ஷர்மிளி கேட்க, ''சரி, சொல்லு,'' என்றாள் அபர்ணா.

திக்கித் திணறி என்றாலும், ஒரு வழியாக அனைத் தையும் சொல்லியே விட்டிருந்தாள் ஷர்மிளி.

தானும், ரகுபாலனும் கல்லூரி வரை ஒன்றாகப் படித்தது.



படிக்கும் காலத்தில் எல்லாம் ரகுபாலனும் தன்னுடன் நன்றாகப் பேசிப் பழகியது,

ஒரு கட்டத்தில் தன்னைக் காதலிப்பதாக ரகுபாலன் அவனே தன்னிடம் வந்து சொன்னது,

அதற்குப் பிறகு இருவருமே ஒருவரை ஒருவர் மன தார விரும்பியது,

இருவரும் கேட்க ஆளில்லாத அளவுக்கு எங்கெங்கோ சேர்ந்து சுற்றியது,

எப்படியும் நாம் திருமணம் செய்து கொள்ளப் போகிற வர்கள் தானே என்று எப்படி யெப்படி யெல்லாமோ வரம்பு மீறி ரகுபாலன் தன்னிடம் நடந்து கொண்டது,

வேறு வழி தெரியாமல் அவன் மேலிருந்த காதல் மயக்கத்தில் தானும் அவன் சொன்னதற்கெல்லாம் சம்மதித்தது,

படிப்பு முடிந்து ஒரு வருடம் வரை கூட அவர் களுடைய காதல் அப்படியே தொடர்ந்தது,

அதற்குப் பிறகு ரகுபாலன் கொஞ்சம் கொஞ்சமாக மாறிப் போனது,

வேலைப் பளுவைக் காரணமாகச் சொல்லித் தன் னைத் தவிர்க்கத் தொடங்கியது,

அப்படியே போகப் போகத் தன்னைச் சுத்தமாகவே கை கழுவி விட்டது.

இனி என் வழியில் வர மாட்டேனென்று எனக்குச் சத் தியம் செய்து கொடு என்று அவன் கட்டாயப்படுத்தித் தன்னிடம் வாக்குப் பெற்றது.

அதன் பலனாக இப்பொழுது எதைக் கேட்கவும் வழியில்லாமல் தான் செய்வதறியாது தவித்துக் கொண்டிருப்பது.

என மேலும் கதை கதையாக ஷர்மிளி சொல்லிக் கொண்டே போக, அதையெல்லாம் இந்துரேகாவும் கேட்டுக் கொண்டு தான் இருந்தாள்.

எப்படி இவளால் இல்லாததையும், பொல்லாததையும் இந்த அளவிற்கு நம்பும் விதமாகச் சொல்ல முடிகிற தென்று அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

ஆனால் அதற்குப் பிறகு ஷர்மிளி செய்தது இந்து ரேகாவை மட்டுமல்ல, அபர்ணாவையும் அவள் அது வரை சொன்னதையெல்லாம் அப்படியே நம்ப வைத் திருந்தது.

''பாருங்கக்கா. இன்னைக்கு மதியம் கூட எனக்கு ரகு பாலனே அழைச்சுப் பேசினார். பேசி ரொம்ப நாளாச் சுன்னு அவராவே கூப்புட்டு அர மணி நேரத்துக்கும் மேல பேசிட்டிருந்தார்,'' என்று தனது மொபைலையே அபர்ணாவிடம் எடுத்துக் காட்டினாள் ஷர்மிளி.

''ஆமாம், மதியம் ஒன்னே காலுக்குக் கூப்புட்டிருக்கார்.''

''ஏற்கெனவே நான் மறக்கவும் முடியாம, நினைக்கவும் முடியாம எவ்வளவோ கஷ்டப்பட்டுட்டிருக்கேன்கா. அப்பிடியிருக்கும் போது இந்த மாதிரியெல்லாம் எனக்கு போன் வந்துட்டே இருந்தா நான் என்னக்கா பண்ண முடியும்?'' என்று குலுங்கி அழுதவளைச் சமாதானப் படுத்தினாள் அபர்ணா.

ஓரக்கண்ணில் இந்துரேகாவையும் அவள் கவனிக்கத் தான் செய்தாள். பேயறைந்தது போலிருந்த அவ



ளுடைய முக பாவனையில் மனம் சந்தோஷத்தில் துள்ளியது.

என்னதான் கணவனின் மேல் இந்துரேகாவிற்கு மிகுந்த நம்பிக்கை இருந்தாலுமே கூட, ஷர்மிளியின் அந்தப் பிரமாதமான நடிப்பில் அந்த நம்பிக்கையின் ஆணிவேரே ஆட்டம் காணத் துவங்கி விட்டிருந்தது.

ஆனாலும் அதை அப்போதைக்கு வெளியே தெரி யாதவாறு மறைத்துக் கொண்டாள்.

ஏன், ஷர்மிளியின் பிரமாதமான நடிப்பில் அபர்ணா வுமே கூட அவள் சொன்னதை யெல்லாம் உண்மை யென நம்பித்தான் விட்டிருந்தாள்.

ஆனால் இருவரும் கல்லூரியில் ஒன்றாகப் படித்தது, ரகுபாலன் தன்னிடம் நன்றாகப் பேசியது என்பது வரை மட்டுமே ஷர்மிளி சொன்னதில் உண்மை இருந்தது.

மீதி அனைத்துமே அவள் தானாகவே ஜோடித்தது.

போகப்போக இவள் சொன்னதில் உண்மை எந்த அள வுக்கு இருக்கும் என்ற எண்ணம் அபர்ணாவுக்குமே வந்து விட்டிருந்ததென்றால் அது சற்றும் மிகையல்ல.

ஏனென்றால் அப்பொழுது ஷர்மிளி சொன்ன அளவிற் கெல்லாம் ரகுபாலன் நடந்து கொள்கிறவன் அல்ல என்பது அவளுக்கும் தெரியுமே.

ஆனால் ஒன்று மட்டும் தெளிவாகப் புரிந்தது. ரகு பாலன் எதற்கோ இவளை எச்சரித்திருக்கிறான். அதற்கு இவள் தேவையில்லாததை யெல்லாம் இட்டுக் கட்டு கிறாள் என்பது தான் அது.

ஆனாலும் அங்கிருந்த இந்துரேகாவிற்காக வேண்டு மென்றே பிரச்சனையை மேலும் சற்றுப் பெரிதாக்கத் தன்னால் ஆனதைச் செய்தாள்.

''உன்னிடத்தில் வேறு யார் இருந்திருந்தாலும், அனைத்தையும் இழந்து விட்ட பிறகும் கூட உன்னைப் போல இப்படிப் பொறுமையாக இருக்க மாட்டார்கள்.

''ஏன், அப்படியென்ன, உனக்குப் படிப்பில்லையா, அழகில்லையா, இல்லை... பணம் தான் இல்லையா?

''ஏன் இப்படிப் படிக்காத பெண்களை விடவும் கூடக் கோழையாக இருக்கிறாய்?'' யென்று மேலும் கொஞ்சம் உசுப்பி விட்டாள்.

இனியும் நீ இப்படியே இருந்தால் உன் மேல் ரகு பாலனுக்கு இருக்கும் ஏளனம் இன்னும் அதிகம் தான் ஆகும்.

நிச்சயம் நீ கொஞ்சம் மாறித்தான் ஆக வேண்டும்.

என்னைத் தவறாகப் பயன்படுத்திக் கசக்கித் தூக்கி எறிந்து விட்டு, நீங்கள் மட்டும் குடியும் குடித்தனமுமாக இருக்கிறீர்களே, இது எந்த விதத்தில் நியாயமென்று கேள்.


எனக்கு நீங்கள் ஒரு வழி சொல்லித் தான் ஆக வேண்டும். அதற்காக நான் எந்த எல்லை வரையும் செல்லத் தயாரென்று சொல்.

நீ சொல்வது அனைத்துமே நியாயமாகவும், பரி தாபப்படக் கூடியதாகவும் இருப்பதால் என்ன ஆனாலும் சரியென்று நானும் வேண்டுமானால் உனக்குத் துணை நிற்கிறேன்.



மேலும் சிறிது நேரமும் கூட இருந்து விட்டு அழுகை யுடன், ''சரிக்கா, நான் வர்றேன்,'' என்று ஷர்மிளி எழுந் திருக்க, ''சரிதான். கவலைப்படாமல் போய்ட்டு வா. உனக்கு நான் இருக்கேன்,'' என்று அனுப்பி வைத்தாள் அபர்ணா.

# 12



ஷர்மிளி கிளம்பியிருக்க, அதற்குப் பிறகு தான் இந்துரேகா அங்கு இருப்பதையே உணர்ந்தவள் போலக் காட்டிக் கொண்டாள் அபர்ணா.

''என்ன, காபி கொண்டு வருவேன்னு நானும் ரொம்ப நேரமாப் பாத்துட்டிருக்கேன். ஆனா நீ இப்பிடிப் பேயறைஞ்ச மாதிரி நின்னுட்டிருக்க!

''ஓ, அந்த ஷர்மிளி வந்துட்டுப் போறாளேன்னு பாக்கறியா? ரகுவுக்கு அவமேல இல்லாத அக்கற உனக்கு எங்கிருந்து வந்தது? கண்டதுக்கெல்லாம் மனசப் போட் டுக் குழப்பிக்கறதுனால எந்தப் பலனும் இல்ல. யார் எப்பிடிப் போனா நமக்கென்னன்னு நாம தான் கண்டுக் காம இருந்துக்கப் பழகிக்கணும்.''

அப்படிச் சொன்னவளையே பார்த்துக் கொண்டிருந்த இந்துரேகாவிற்குக் கண்களின் ஓரம் கரித்துக் கொண்டு வந்தது. ஆனாலும் அப்போதைக்கு அதை அவள் வெளிக் காட்டிக் கொள்ளவில்லை.

"ஒரு நிமிஷம்."

உள்ளே செல்வதற்காக இரண்டு அடி எடுத்து வைத் திருந்த இந்துரேகா, அபர்ணாவின் அழைப்பில் நின்று திரும்பி அவளைப் பார்த்தாள்.

"கண்டுக்காம இருந்துக்கப் பழகிக்கணும்னு நான் சொன்னது ஊர் உலகத்தோட பார்வைக்கு. ஆனா நீ உன் வீட்டுக்காரர்கிட்ட எதுவும் கேக்காம விட்டா அப்புறம் கேக்க ஆள் இல்லைன்னு அவரு இன்னும் கூட மேல தப்புப் பண்ணிக்கிட்டே போக வாய்ப்பிருக்கு.

"அதுக்கு விடாம இப்பவே சுதாரிச்சுக்கிட்டா பெரிய பிரச்சனை எதுவும் வர்றதுக்கு முன்னாடி தப்பிச்சுக்குவ."

அபர்ணா சொல்லச் சொல்ல, அது சரிதானோ என்று தோன்றத் தொடங்கி விட்டிருந்தது இந்துரேகாவிற்கு.

அப்படியானால் கணவனை நாம் சந்தேகப்படுகிறோமா?

அப்படியெல்லாம் எதுவுமில்லையே என்று பெரிய ஞானி போலச் சொல்லிவிட்டு, இப்பொழுது மீண்டும் எந்த முகத்தை வைத்துக் கொண்டு போய் அவனிடம் இதைப் பற்றிக் கேட்பது.

அதற்காக ஒன்றுமே கேட்காமல் விட்டு, இந்த அபர்ணா சொல்வதைப் போல ஒரு வேளை நிலைமை கைமீறிப் போய் விட்டால்...

யோசிக்கிறவரை யோசித்து விட்டு, எதற்கும் இப் போதைக்குக் கணவனிடம் எதையும் கேட்க வேண்டா மென்ற முடிவுக்கே மனதிற்குள் வந்தாள் இந்துரேகா.



அவன் மீதும் தவறு இருக்கிறது என்பது உறுதியே ஆகி விட்டதென்றாலும் கூட, இப்போதைக்கு அவசரப் பட்டு எதையும் கேட்க வேண்டாமென்று முயன்று கவனத்தை வேலையில் செலுத்தினாள்.

என்ன முயன்றும் வேலைதான் ஓடவே மாட்டேன் என்றது.

ஆனாலும் முயன்று சமையலை முடித்துப் பரிமாறத் தயாராக டேபிளின் மீது எடுத்து வைத்தவள், சூடாக நுரை பொங்க ஆற்றிய காபியைக் கொண்டு போய் அபர்ணாவுக்குக் கொடுத்து விட்டு வந்தாள்.

அன்று சுசித்ராவும் சுபர்ணாவும் கல்லூரியில் ஏதோ விசேஷமென்று வீடு திரும்ப மாலை ஏழு மணிக்கும் மேல் ஆகியிருக்க, மற்றவர்களும் அதற்குப் பிறகே வீடு வந்து சேர்ந்தார்கள்.

அன்று பார்த்துக் கடைசி ஆளாக வீடு வந்து சேர்ந்த கணவனின் பக்கமாகத் திரும்பக் கூட இந்துரேகாவால் முடிந்திருக்கவில்லை.

தன்னை என்னவென்று நினைத்திருந்தால் இப்படி யெல்லாம் நடந்து கொண்டிருப்பான்.

தொடர்ந்து வந்த ஒரு மணி நேரத்தில் அனைவரும் உண்டு முடித்திருக்க, கடைசியாகத் தானும் உண்டு விட்டுச் சமையலறையில் அனைத்தையும் ஒதுக்கி வைத் தாள்.

தனது அறை வரை வந்திருந்தவளுக்குத் தரையி லேயே கால்கள் வேரூன்றி விட்டாற் போல அதற்கு மேல் ஒரு அடி கூட அவளால் எடுத்து வைத்திருக்க முடிய வில்லை.

நல்ல வேளையாகக் கணவன் ஆஃபீஸ் வேலையில் மும்முரமாக இருப்பது தெரிந்தது.

நெஞ்சு படீர் படீரென்று அடித்துக் கொள்ள, குளிப்ப தற்காக இரவு உடையை எடுத்துக் கொண்டு குளிய லறைக்குள் சென்று தாழிட்டுக் கொண்ட பிறகு தான் இயல்பாக மூச்சுக் கூட விட முடிந்தது.

எவ்வளவு மெதுவாக என்றாலும் ஒரு கட்டத்தில் குளித்தே முடித்திருந்தவள், இன்னதென்று விவரிக்க முடியாத ஒரு வித எரிச்சலுடன் குளியலறையை விட்டு வெளியே வந்தாள்.

அவள் எதிர்பார்த்துப் பயந்தது போலவே கணவன் தனக்காகக் காத்திருப்பது தெரிந்தது.

''வாம்மா.''

ஏற்கெனவே எரிச்சலுடன் இருந்த இந்துரேகா இந்தக் கரிசனத்திற்கெல்லாம் குறைச்சல் ஒன்றுமில்லை, என் அருகில் மட்டும் வரட்டும் பார்த்துக் கொள்கிறேனென்று மனதிற்குள் கறுவிக் கொண்டாள்.

அவள் நினைத்தது தான் தாமதம்.

''என்ன இவ்வளவு நேரக் குளியல்! நாளைக்கும் சேத்து இன்னைக்கே குளிச்சுட்டியா?'' என்று புன்னகையுடன் கேட்ட கணவனைப் பார்த்தாள் இந்துரேகா.

''..............''

''ம், என்ன பேச மாட்டேங்கற?''

''அதெல்லாம் இல்ல. இன்னைக்கு எனக்கு ஒரே தலவலி. அதான்...'' என்று சொல்லிக் கொண்டே சென்று படுக்கையை எடுத்து உதறினாள்.



''என்னமா, ஏன் தலைவலி வந்தது?''

''தெரியல. பேசாம படுத்துக்கிட்டா கொஞ்சம் நல்லா இருக்கும்னு நினைக்கறேன்.''

மனைவிக்காக வெகு ஆவலுடன் காத்திருந்தான் தான் என்றாலும் அவள் அப்படிச் சொல்லிவிட்ட பிறகு,

''சரி தான். படுத்து ரெஸ்ட் எடு இந்து.'' என்று சொல்லி விட்டிருந்தான்.

''அதுக்கு முன்னாடி தைலம் வேணும்னா எடுத்துட்டு வரட்டுமா? தேய்ச்சுட்டுப்...!''

''வேண்டாம், எங்கிட்டக் கைலயே இருக்கு.''

அன்று மட்டுமல்ல, தொடர்ந்து வந்த ஒரு வாரமும் கூட ஏதேதோ காரணங்களைச் சொல்லித் தன்னைத் தவிர்த்த மனைவியை அப்பொழுது உணர்ச்சி துடைக் கப்பட்ட முகத்துடன் பார்த்தான் ரகுபாலன்.

ஆனாலும் எதுவும் பேசாமல் விட்டு விட்டிருந்தான்.

அடுத்த நாள் இரவும் வந்திருக்க, சற்றுப் பதட்டத்துடன் தான் படுக்கையறைக்குள் காலடி எடுத்து வைத்தாள் இந்துரேகா.

ஆனால் அதெல்லாம் சில வினாடிகள் தான்.

தவறு செய்தவனே கம்பீரமாக இருக்கும் பொழுது, நாம் ஏன் இப்படி பயந்து சாக வேண்டுமென்று நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு உள்ளே வந்தவள் உடனே இரவு உடையுடன் குளிக்கச் சென்று விட்டிருந்தாள்.

என்ன தான் உள்ளுக்குள் அவளுடைய நெஞ்சம் கொதித்துக் கொண்டிருந்தாலும், அன்று கணவனிடம்

அதெல்லாம் எடுபடாதோ என்று இந்துரேகாவால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

கூடவே அன்று காலையில் ஷர்மிளி தன்னை அழைத்துத் திமிராகப் பேசியதையும்.

பார்க்கிற வரை பார்த்து விட்டு ஒரு எல்லைக்கும் மேல் சகித்துக் கொள்ள முடியாமல் இந்துரேகா தான் போனை வைக்க வேண்டியதாயிற்று.

நல்ல வேளையாக அவளிடமிருந்து மீண்டும் அழைப்பு வந்திருக்காததில் சற்று நிம்மதியாகக் கூட உணர்ந்தாள்.

குளித்து விட்டு வெளியே வந்தவளுக்குக் கணவன் அவனுடைய அலுவலக வேலையில் மும்முரமாக இருப்பது தெரிய, நல்லதாகிப் போயிற்று என்று படுக்கைக்கு வந்து விட்டிருந்தாள்.

இன்னும் சில நிமிடங்கள் போயிருந்ததால் படுக்கையை உதறிவிட்டுத் தூங்கவும் தொடங்கியிருந்தாள். ஆனால் அதே நேரம் தன்னை அழைத்த கணவனின் குரலில் திரும்பி அவனைப் பார்த்தாள் இந்துரேகா.

''உங்கிட்டக் கொஞ்சம் பேசணும்,'' என்ற கணவனை எதுவும் பேசாமல் பார்த்தாள்.

அதற்குள் எழுந்து மனைவியின் அருகிலேயே வந்திருந்த ரகுபாலன், ''நீ உம் மனசுல என்ன தான் நினைச்சுட்டிருக்க?'' என்று முயன்று வரழைத்திருந்த சாதாரணக் குரலில் கேட்டான்.

இப்படிக் கேட்டால் என்ன பதில் சொல்வது என்பதைப் போலத் தானும் பார்த்தாள் இந்துரேகா.

''உன்னைத்தான்....''



''புரியல,'' என்ற மனைவியிடம், ''உனக்கு என்ன பிரச்னை?'' என்று கேட்டான்.

நீதான் என்று நினைத்துக் கொண்டவளாய், அதை அப்படியே வெளியே சொல்ல முடிந்திருக்கவில்லை.

''நான் தூங்கணும். எனக்கு என்னவோ போல இருக்கு...''

''இனியும் உன் நடிப்பை அப்பிடியே நம்பறதுக்கு நான் ஒண்ணும் முட்டாள் இல்ல.''

''நான் உண்மையத்தான் சொல்றேன். மத்தப்படி நம்பறதோ நம்பாததோ அது உங்க இஷ்டம்.''

''ஏன் இப்பிடி விதண்டாவாதமாவே பேசிட்டிருக்க?'' என்று அருகில் வந்த கணவனிடமிருந்து இரண்டு அடி பின்னால் நகர்ந்திருந்தாள் இந்துரேகா.

''ஓடிப்பிடிச்சு விளையாட எனக்கு விருப்பம் தான், ஆனா நீ உன் கண்டிஷன யோசிச்சுப் பாத்துக்கோ.''

அப்படிச் சொன்ன கணவனை ஏளனத்துடன் பார்த்துக் கேட்டாள் இந்துரேகா.

''அந்த அளவுக்கு அக்கறையிருந்தா பாவமேன்னு விட்டுட வேண்டியது தான?''

''எத்தனை நாளைக்கு?''

அப்படி ஏற்கெனவே நிறைய விட்டாயிற்று என்று சொல்லாமல் சொல்கிறானோ?

''என்ன, பேசு.''

இன்னும் அருகில் நெருங்கி வந்திருந்த கணவனைச் செய்வதறியாது பார்த்தாள்.

''ம்...'' என்று அவனது கைகளில் தனது முகத்தை ஆவல் கலந்த ஆசையுடன் ஏந்திய கணவனிடம், ''ஏன் இப்படியெல்லாம் மனச்சாட்சியே இல்லாம நடந்துக் கறீங்க?'' என்று கேட்டாள்.

''யாரு, நானா?''

அப்படிக் கேட்ட கணவனின் குரலில் தெரிந்த விரக்தி தன்னை இந்த அளவுக்குப் பாதிக்குமென்று அவள் கன விலும் நினைத்துப் பார்த்திருக்கவில்லை.

ஆனாலும் முயன்று அதைத் தனக்குள் மறைத்துக் கொண்டு இலக்கின்றி எங்கோ பார்த்தாள்.

என்னவோ இவன் தன்னை நடிப்பென்று சொன் னானே, கொஞ்சம் விட்டால் இவன் நடிப்பில் தன் னையும் அல்லவா மிஞ்சி விடுவான் போலிருக்கிறது.

''இந்து...''

கணவனின் கைகள் எல்லை மீற ஆரம்பித்திருக்க, இந்துரேகா அவளும் கொஞ்சம் கொஞ்சமாகத் தன்னை மறக்கத் தொடங்கி விட்டிருந்தாள்.

ஆனால் அதெல்லாம் சிறிது நேரம் தான்.

தன்னை யறியாமலேயே கணவனின் கைகளில் தொய்ந்து போய் விட்டிருந்தவள் திடீரென்று தன்னிலை உணர்ந்தவளாய்க் கணவனிடமிருந்து தன்னை விடு வித்துக் கொள்ளப் போராடினாள்.

''முதல்ல விடுங்க என்ன...''

''இந்து, என்னாச்சு, உனக்கு? ஏன் இப்பிடியெல்லாம் நடந்துக்கற?''



''ம். இனிமேலாவது கொஞ்சம் சுயபுத்தியோட நடந் துக்கலாமேன்னு பாக்கறேன்...''

''என்ன உளர்ற?''

''அது சரி தான். இப்பத்தான் ரொம்ப சரியாப் பேச ஆரம்பிச்சிருக்கேன். அதனால உங்களுக்கு அப்பிடித் தான் தோணும்.''

''சரியாப் பேச ஆரம்பிச்சிருக்கியா?'' என்று சிரித்த கணவனைக் கோபத்துடன் பார்த்தவள் -

''சரி தான். அத எப்பிடி நீங்க உங்க வாயாலேயே ஒத்துக்குவீங்க...'' என்றாள்.

''வேண்டாம். எனக்குக் கோபம் வரவைக்கறது உனக்கு நல்லதில்ல.''

''என்ன பண்ணுவீங்க? கழுத்த நெரிச்சிடுவீங் களோ?''

''இந்து...''

''சும்மா சத்தம் போடாதீங்க. அதுக்கெல்லாம் பயப் படறவங்க இங்க யாருமில்ல!'' என்று சற்றே தளர்ந்திருந்த கணவனின் பிடியிலிருந்து தன்னை முழுமையாக விடு வித்துக் கொண்டு விட்டிருந்தாள் இந்துரேகா.

கணவனின் கண்களில் தெரிந்த கோபத்தைக் கண் டவள், சரிதானென்று தலையைச் சிலுப்பிக் கொண்டு எங்கோ பார்த்தாள்.

''சொல்லு. என்ன பிரச்சன உனக்கு?''

''..........''

''உன்னைத்தான்...''

''பிரச்சனையே நீங்க தான்,'' என்று பட்டென்று சொன்னவள், கணவனின் புரியாத பாவனையில், ''என்ன நடிப்பு!'' என்று ஏளனமாகச் சிரித்தாள்.

''வார்த்தைய அடக்கிப் பேசு.''

''அத நீங்க சொல்ல வேண்டிய அவசியமில்ல. அந்த ஷர்மிளிகிட்ட வேணும்னாப் போய் சொல்லுங்க. நீங்க என்ன சொன்னாலும் ஒரு வேள அவ கேட்டுக்குவாளா இருக்கும்.''

அப்படிச் சொன்ன மனைவியை விரக்தி கலந்த சிரிப்புடன், ''ஓ அது தான் விஷயமா?'' என்பதைப் போலப் பார்த்தான் ரகுபாலன்.

''இன்னும் எத்தன நாளைக்கு நான் முட்டாளாவே இருப்பேன்னு நினைச்சீங்க? இனிமேல் உங்க வேஷத்துக்கெல்லாம் நான் ஏமாற மாட்டேன். தெரிஞ்சுக் கோங்க.''

''எப்பிடியோ இப்போதாவது உண்மையப் புரிஞ்சுக்கிட்டயே. ரொம்ப சந்தோஷம்.''

அது தான் ரகுபாலன் தனது மனைவியிடம் கடைசியாகப் பேசிய வார்த்தைகள்.

சரி தான். தவறைப் பூசி மறைப்பதற்காக மேலும் மேலும் பொய் சொல்லித் தன்னை இன்னும் கீழிறக்கிக் கொள்ளாமல் இருக்கிறானே என்று மனதிற்குள் சற்று இதமாகக் கூட உணர்ந்தாள் இந்துரேகா.

ஆனாலும் மனதின் ஒரு மூலையில் முணுமுணுவென்றிருந்த அந்த வலி மட்டும் நான் இருக்கிறேனென்று சொல்லிக் காட்டிக் கொண்டே இருந்தது.



தன்னுடைய கணவன் - தன் ரகு - எப்படிப் பொய்த்துப் போகலாம் என்ற ஆதங்கமும் அதனால் விளைந்த கோபமும் கூட அவளைப் பின் வந்த நாட்களனைத்தும் ஊமையாய் அழ வைத்துக் கொண்டே தான் இருந்தன.

# 13

ஒரு மாதம் சென்றிருந்தது.

வழக்கமான வேலைகள் அனைத்தும் அதன் பாட்டிற்கு நடந்து கொண்டிருந்தாலும், கணவன் மனைவிக்குள் மட்டும் பேச்சு வார்த்தை சுத்தமாக நின்று போய் விட்டிருந்தது.

கணவன் அவன் செய்த தவறுக்காக மன்னிப்புக் கேட்பான், கடைசிக்கு வருந்தவாவது செய்வான் என்றெல்லாம் எதிர்பார்த்த இந்துரேகாவிற்குக் கடைசியில் ஏமாற்றமே மிஞ்சியது.

அதிலும் மனைவியென்று தான் ஒருத்தி அந்த வீட்டில் இருப்பதையே மறந்தவன் போல நடந்து கொள்ளும் அவனுடைய செய்கையைத் தான் அவளால் சுத்தமாகத் தாங்கிக் கொள்ளவே முடிந்திருக்கவில்லை.

பார்க்கிறவரை பார்த்து விட்டு ஒரு நாள் கணவனுக்கு முன்பாகப் போய் நின்றாள் இந்துரேகா.

ஏதோ ஒரு வேகத்தில் வந்து நின்று விட்டிருந்தவள், அதற்குப் பிறகே என்ன பேசுவதென்று புரியாமல் விழித்தாள்.

சில வினாடிகள் தான்.

முன்பாகப் போய் நின்ற இந்துரேகா கணவனின் முன்பாகப் போய் நின்ற இந்துரேகா வெறுமையுடன் தன்னைப் பார்த்தவனைத் தானும் எரிச்சலை மறைக்கக் கூட முயலாது பார்த்தாள்.

''உங்க மனசுல என்ன தான் நினைச்சுட்டிருக்கீங்க?''

''..............''

''உங்களத் தான்....''

''..............''

''ஹலோ உங்...''

அதற்கு மேல் மனைவியைப் பேச ரகுபாலன் விட்டிருக்கவில்லை. அவளை அருகில் இழுத்து அவளுடைய முகத்தைப் பார்த்தான்.

முக்கியமாகக் கண்களை அதே உணர்ச்சி துடைக்கப் பட்ட பார்வையுடன் தான்.

செய்வதறியாது தானும் சிறிது நேரம் அப்படியே நின்றிருந்த இந்துரேகா, பிறகு தன்னிலை உணர்ந்தவளாய்க் கணவனின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முயன்றாள்.

''விடுங்க முதல்ல...''

''ம். சொல்லு, என்ன நினைக்கணுங்கற?''

''முதல்ல விடு...''

அந்த வினாடியில் மேலும் மனைவியைத் தன்னருகில் இழுத்திருந்தான் ரகுபாலன்.

''இந்த அளவுக்கு மனச்சாட்சியே இல்லாம நடந்துக்கறீங்களே, உங்களுக்கெல்லாம் கொஞ்சங் கூட வெக்கமாவே இல்லையா?''



''யாரு நானா? முதல்ல இதப் பத்திக் கேக்க உனக்கென்ன தகுதியிருக்கு?''

''ஓ. எனக்குத் தகுதி இல்லையாக்கும்? அது சரி...''

''ஏன் என்னத் தொடாம, நான் இல்லாம இருக்க முடியல இல்...''

அதற்கு மேல் மனைவியைப் பேச ரகுபாலன் விட்டிருக்கவில்லை. அவளை இழுத்துத் தன் மார்போடு அணைத்துக் கொண்டு விட்டிருந்தான்.

கணவனின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள இந்துரேகா என்ன போராடியும் ஒன்றும் முடிந்திருக்கவில்லை, சில வினாடிகள் போராடியவள் பிறகு கொஞ்சம் கொஞ்சமாகத் தன்னிலை மறந்து அப்படியே கணவனின் மார்பில் தொய்ந்து தன்னையறியாமலேயே கணவனை இறுக அணைத்துக் கொண்டு விட்டிருந்தாள்.

வேண்டாம். விடக் கூடாது. எதிர்த்துப் போராட வேண்டும் என்றெல்லாம் மனம் தீவிரமாக நினைத்தாலும், அதைச் செயல்படுத்த ஆயிரத்தில் ஒரு பங்காகக் கூட இந்துரேகாவால் முடிந்திருக்கவில்லை.

காட்டாற்று வெள்ளத்தைக் கையால் தடுக்க முயற்சிப்பது போல, தன்னை விடுவித்துக் கொள்ள அவள் செய்த அந்த சிறு முயற்சிகளெல்லாம் துளியும் பயனற்றுப் போயின.

அன்று வழக்கத்தை விடவும் சற்று நேரம் கழித்துத் தான் படுக்கையை விட்டே எழுந்திருந்தாள் இந்துரேகா.

அதே நேரம் கணவன் குளித்து முடித்து விட்டு வெளியே வருவது தெரிந்தது.

என்ன நெஞ்சழுத்தம் இருந்திருந்தால், முழுத் தவறையும் தன் மேல் வைத்துக் கொண்டு ஒன்றுமே நடவாதது போல இப்படி இருப்பானென்று எரிச்சலும் கோபமும் போட்டி போட்டுக் கொண்டு வந்தன.

ஆனாலும் அதைக் கேட்பதற்காக மீண்டுமொரு முறை கணவனின் முன்பாகப் போய் நிற்கப் பிடிக்காமல் பல்லைக் கடித்துத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

அதிலும் நேற்று இரவு கேட்கப் போய் என்னவாயிற்று என்று நினைத்தவளுக்குத் தன் மீதே கோபம் தான் வந்தது.

அந்த அளவிற்கா கணவனின் கைகளில் சற்றும் வெட்கமே இல்லாமல் தான் தன்னையே மறந்து தொய்ந்து போக வேண்டுமென்று ஆதங்கத்துடன் நினைக்கத் தோன்றியது.

கணவன் தன்னைப் பற்றி என்ன நினைத்திருப்பான் என்றும்.

இனி வரும் நாட்களில் தன்னை மேலும் கூட கிள்ளுக் கீரையாக நடத்துவானோ?

''இன்னைக்குக் கொஞ்சம் நேரத்திலயே கிளம்பணும். இன்னும் ஒரு மணி நேரத்துல ரெடியாயிடு...''

''நான் இன்னைக்கு வேலைக்குப் போகல.''

தான் சொல்லி முடிக்கும் முன்பே பட்டென்று இடைமறித்துச் சொன்ன மனைவியை எதுவும் பேசாமல் சில



வினாடிகள் பார்த்தவன், சரிதானென்று தோளைக் குலுக்கி விட்டுக் கிளம்பியே விட்டிருந்தான்.

கணவன் மேலும் ஏதாவது கேட்பான், சுள்ளென்று முகத்தில் அடித்தாற் போலப் பேசித் தனது கோபத்தைச் சற்றேனும் தீர்த்துக் கொள்ளலாமென்று எதிர்பார்த்தவளுக்கு மிகுந்த ஏமாற்றமே மிஞ்சியது.

சரி தான். இரவு பார்த்துக் கொள்ளலாமென்று முயன்று தன்னைத் தானே சமாளித்துக் கொள்ளும் முன் வெகுவாகச் சிரமப்பட்டுத் தான் போனாள்.

அந்த அளவிற்கு அவளுடைய நெஞ்சம் உள்ளுக்குள் தீயாய்க் கொதித்துக் கொண்டிருந்தது.

அதைத் தனது அத்தையே கவனித்துக் கேட்ட பிறகு தான் அதுவும் மிகவும் கொஞ்சம் தனது முக பாவனையை மாற்றிக் கொண்டாள் எனலாம்.

''என்னமா, யார் மேல இவ்வளவு கோபம்?''

''அதெல்லாம் ஒண்ணுமில்ல அத்தெ,'' என்று அவசரமாகச் சொன்னவளுக்குத் தான் சொன்னதை அவர் நம்பவில்லை என்பது வெளிப்படையாகவே தெரிந்தது.

''சரி சரி. வந்து சாப்புடு.''

''எல்லாரும்...''

''நேரம் பாத்தியா, ஒன்பரைக்கு மேல ஆச்சு. எல்லாரும் சாப்பிட்டு முடிச்சு அவங்கங்க வேலயப் பாத்துட்டுக் கிளம்பியாச்சு,'' என்றவரைப் பார்த்தவள், ''இல்ல அத்தெ, நீங்க, அபர்ணாக்...''

''நாங்க முன்ன பின்ன சாப்புடுவோம். நீ இருக்கறதுக்கு முதல்ல உன் வயித்துப் பாட்டப் பாரு.''

''சரி அத்தை,'' என்றவள் சாப்பிடுவதற்காகப் பிளேட்டை எடுக்கப் போக,

''காலைல என்ன குடிச்ச?'' என்று கேட்டார்.

''ஒண்ணும் குடிக்கல அத்தெ. தல சுத்தல் கொஞ்சம் அதிகமா இருந்ததால இன்னைக்கு வழக்கத்த விடவும் லேட்டா தான் படுக்கையை விட்டே எழுந்தேன்...''

''பாத்தாலே தெரியுது. சாப்டுட்டுத் திரும்பவும் போய் ரெஸ்ட் எடு போ.'

''இல்ல அத்தெ. இப்ப ஒரு அளவுக்குப் பரவா யில்ல...''

''சொன்னதச் செய். சும்மா உன் இஷ்டத்துக்கு எதை யாவது செஞ்சுக்கிட்டு உடம்புக்கு இழுத்துக்காத. இப்ப மெத்தனமா இருக்கறதெல்லாம் அப்புறம் பின்னாடி தான் பாதிக்கும்.''

''................''

''இன்னைக்கு முழுக்கவே நீ நேராநேரத்துக்கு வந்து சாப்டுட்டு மட்டும் போய் ஓய்வெடுத்துக்கோ.''

''சரி அத்தெ,'' என்றவளுக்கு இவருடைய கரிசனத்தை விடவும் கோபம் தான் நன்றாக இருக்கிறதோ என்று தோன்றியது.

காலை உணவோடு மேலும் ஒரு மணி நேரத்திற்கும் மேலேயே இருந்து ஓரளவு வேலைகளையும் செய்து முடித்து விட்டுத் தங்களுடைய அறைக்கு வந்து சேர்ந்த இந்துரேகாவிற்கு, ஏனோ எதன் மீதுமே பிடிப்புத் தோன் றாமல், எரிச்சலே மேலோங்கியது.



மதியம் வரை அவளுடைய துணிகளை நன்றாகத் தேய்த்து எடுத்து அடுக்கி வைப்பதிலேயே நேரம் சென்று விட்டிருக்க, மதிய உணவிற்குப் பிறகு வந்து படுத்தவள், வெகு நேரம் தூங்கிப் போய் விட்டிருந்தாள்.

மீண்டும் எழுந்த போது மணி நான்காகி விட்டிருந் தது தெரிந்தது.

கைகால் முகம் கழுவித் தலைவாரிக் கொண்டு மீண் டும் சமையலறைக்கு வந்தவள், மாலை டிபன் காபிக்குப் பிறகு, சமையலில் இரவு உணவுக்குத் தனது அத்தைக்கு உதவினாள்.

''அத்தெ!'' என்று அழைத்துக் கொண்டே அபர்ணா வர, ''வாம்மா,'' என்று சந்தோஷமாக வரவேற்றார்.

''என்ன அதிசயமா ஒரு நாள்ல வந்துட்ட?''

''ஆமா அத்தெ. அப்பிடித்தான உங்ககிட்டயும் சொல் லிட்டுப் போனேன்.''

''அது சரி தான், ஆனா அங்க போனதுக்கப்புறம் உம் மனசு மாறிடுமே.''

''இன்னைக்கு மாறலேன்னு வெச்சுக்கோங்களேன். எனக்கு ஒரு கப் காபி கிடைக்குமா அத்தெ?''

''இதோ ஒரு நிமிஷம்மா,'' என்றவர், இந்துரேகாவிடம் திரும்பி, ''முதல்ல காபி கலக்கி அபர்ணாவுக்குக் குடு,'' என்றார்.

''சரி அத்தெ,'' என்றவளிடம், ''கொஞ்சம் சீக்கிரம் போடு. முக்கியமாக் குடிக்கற மாதிரி!'' என்று விட்டுப் போனாள் அபர்ணா.

தன்னால் இயன்ற அளவு விரைவாகவும், நன்றாகவும் கலக்கியவள், அதை அபர்ணாவிற்குக் கொடுப்பதற்காக எடுத்துச் சென்றாள்.

அவள் தன்னுடைய அறையில் இருக்க, கொண்டு போய்க் கொடுத்தாள்.

அவளுடைய பாவனையும், பார்வையும் நான் என்ன அவளுடைய வேலைக்காரியா, இவர்கள் சொல்கிறபடி இவர்களுடைய வேலைக்காரியா, இவர்கள் சொல்கிறபடி யெல்லாம் ஆடுவதற்கு என்று இந்துரேகாவை எண்ண வைத்தன.

"ஒரு நிமிஷம்."

காபியைக் கொடுத்துவிட்டு இரண்டு எட்டு எடுத்து வைத்திருந்தவள், அபர்ணாவின் அழைப்பில் நின்று திரும்பினாள்.

"என்ன, உங்க வீட்டுக்காரர் கிட்ட நீ எதுவுமே கேக்க லையா..."

"............."

"ஏன் கேக்கறேன்னு உனக்கே தெரியும்னு நினைக் கறேன். வரவர ஷர்மிளியோட அட்டகாசம் ரொம்ப அதி கமா இருக்கு. நானே அவள ரகுவோட வெளிய நிறைய முறை பாத்துட்டேன்...."

"............"

"பாவம், நீயும் தான் என்ன பண்ணுவ? ஆனா ரொம் பவும் கண்டுக்காம விட்டுடாத. அப்புறம் நாளைக்கு உன் னையே யாருன்னு கேட்டாலும் கேட்டுடுவாங்க!" என்ற அபர்ணா கையிலிருந்த காபியைக் குடிக்கத் தொடங்கி யிருக்க, தானும் அங்கிருந்து நகர்ந்தாள் இந்துரேகா.



ஆனால் அவளுடைய நெஞ்சம் உலைக்களம் போலக் கொதித்துக் கொண்டிருந்தது.

தவறு செய்தவன் துளியும் குற்ற மனப்பான்மையே இல்லாமல் சுற்றிக் கொண்டிருக்கும் பொழுது, எந்தப் பாவமும் அறியாத நாம் மட்டும் ஏன் இப்படி நிம்மதியை இழந்து தவிக்க வேண்டுமென்று கோபத்துடன் நினைக்கத் தோன்றியது.

ஆனால் தன்னுடைய இந்தக் கோபத்தினால் என்ன பயன், ஏதோ ஒரு மூலையில் கொஞ்சமாக ஒட்டிக் கொண்டிருக்கும் நிம்மதியையும் சேர்த்து அது எடுத்துக் கொண்டு போவதைத் தவிர.

"என்னம்மா, என்ன யோசனை?"

தனது அத்தையின் கேள்வியில் நடப்புக்கு வந்தவள், அப்போதைக்கு மனதிற்குத் தோன்றிய ஒரு பொய்யைச் சொல்லி ஒரு வழியாகச் சமாளித்து வைத்தாள்.

ஆனால் மீண்டும் மீண்டும் கூடத் தொடர்ந்து வந்த அனைவரும் என்னவாயிற்று என்று விசாரித்ததில் அன்றும் கோபமனைத்தும் கணவனின் மீதே திரும் பியது.

# 14

முன்தினம் போலவே தனக்கு முன்பாக வந்து நின்ற மனைவியைப் பார்த்தான் ரகுபாலன்.

கணவனின் உதடுகளில் நெளிந்த அந்தப் புன்னகை இந்துரேகாவை மிகுந்த கோபத்திற்குள்ளாக்கியிருந்தது.

''நேத்து நான் சொன்னது தான் நிஜம் இல்லையா?'' என்று கேட்ட கணவனை எரித்து விடுவதைப் போலப் பார்த்தவள்,

''நீங்களெல்லாம் ஒரு மஷனுனா?'' என்று கேட்டாள்.

மூச்சு வாங்க உதடு துடிக்கக் கேட்ட மனைவியைப் பார்த்தான் ரகுபாலன்.

கணவனின் உணர்ச்சி துடைக்கப்பட்ட பார்வையில் இப்பொழுது கோபம் இன்னும் அதிகம் தான் ஆனது.

''இதுக்கு மேல என்னால பேசாம இருக்க முடியாது....''

''அதனால?''

''நான் என் அம்மா வீட்டுக்குக் கிளம்பிப் போகப் போறேன்... நிரந்தரமா.''

''............''

''நாளைக்கே...''

''ஏன் இப்ப நல்ல நேரமில்லையா?''

என்னது? தனது காதுகளில் சரியாகத்தான் விழுந்ததா?

''என்ன பாக்கற? ராங் கால்குலேஷன் பண்ணிக்கிட்டு சின்னக் குழந்த மாதிரி நடந்துக்கறேன்னு பாத்தா, உன் முட்டாள்தனம் ரொம்பவும் தான் எல்லை மீறிப் போயிட்டிருக்கு...''

''ஆமாம், இன்னுங் கூட உங்க கூட நின்னு பேசிட்டிருக்கேனே, நான் முட்டாளே தான்.''



''வெறும் முட்டாள் இல்ல. வடிகட்டின அடி முட்டாள்.''

''சரி தான், ஒத்துக்கறேன். ஆனா தொடர்ந்து அப்படியே இருக்க நான் விரும்பல.''

''போதும், வாய மூடு.''

''எதுக்கு மூடணும்? நீங்க என்ன செஞ்சாலும் கையாலாகாத்தனமாப் பாத்துட்டே இருப்பேன்னு நினைச்சுட்டீங்களாக்கும்?''

''இந்து...''

''போதும் உங்களோடான என் வாழ்க்கை. இன்னும் ஒரு நாள் மட்டும் எப்பிடியோ பல்லக் கடிச்சுக்கிட்டுப் பொறுத்துக்கோங்க. நாளைல இருந்து அந்த ஷர்மிளி கூட யாருக்கும் பயப்படாம சந்தோஷமாக் குடும்பம் நடத்தலாம்.''

''வாய மூடு. உன்னத் தவிர வேற எந்தப் பொண்ணயும் நான் மனசளவுல கூடத் தீண்டினது கிடையாது.''

''நம்பிக்கறேன்.''

சட்டென்று மனைவியை அருகில் இழுத்திருந்தவன்,

''இந்து, என்னப் புரிஞ்சுக்கோடா ப்ளீஸ்...'' என்று அவளுடைய கண்களைப் பார்த்து உணர்ந்து சொன்னான்.

''முட்டாளால எப்பிடிங்க புரிஞ்சுக்க முடியும்?''

''சை'' என்று மனைவியை உதறிவிட்டு அந்த வினாடியே அறையை விட்டு வெளியேறத் திரும்பினான்.

''ஒரு நிமிஷம்.''

அழைத்த மனைவியின் குரலில் கோபத்துடன் திரும்பாமலே நின்றான்.

''நாளைக்குச் சாயங்காலம் நீங்க வேலைய விட்டுத் திரும்பி வரும்போது நான் வீட்ல இருக்க மாட்டேன். என் ஃப்ரண்ட்டுக்குக் கல்யாணம்னு சொல்லிட்டுக் கிளம்பப் போறேன். ஏன், அது தான் உண்மையும் கூட. ஆனா இனிமேல் எப்பவுமே திரும்பி வரமாட்டேங்கறது மத்தவங்களுக்கு மெதுவாத் தான் புரியும்...''

தான் பேசிக் கொண்டிருக்கும் போதே விடுவிடு வென்று சென்று விட்டிருந்த கணவனைச் செய்வதறி யாது பார்த்தபடி அப்படியே நின்று விட்டிருந்தாள்.

ஆனால் கண்களிலிருந்து கண்ணீர் மட்டும் அதன் பாட்டுக்கு வழிந்து கொண்டே இருந்தது.

தான் இவ்வளவு சொல்லியும் பேசாமல் சென்று கொண்டே இருக்கிறானென்றால் நீ என்ன செய்தாலும் எப்படிப் போனாலும் எனக்கு அதைப் பற்றி ஒன்று மில்லையென்று சொல்லாமல் சொல்வதைப் போலத் தானே அர்த்தம்.

இல்லையே, தன் ரகு அப்படிப்பட்டவன் இல்லையே.

தன்னுடைய வார்த்தைகளுக்கும், உணர்வுகளுக்கும் அவன் எப்பொழுதும் மதிப்புக் கொடுப்பவனாயிற்றே.

தான் ஒரு முட்டாள். இப்பொழுது தான் அப்பிடியெல்லாம் எதுவும் இல்லை என்றாயிற்றே.

இனியும் கண்டதையும் எண்ணிக் கலங்குவதில் என்ன பயன்?



என்னதான் படுக்கையில் சென்று விழுந்திருந்தாலும் அன்று இந்துரேகாவிற்குத் தூக்கம் அருகில் கூட வர மாட்டேன் என்று விட்டிருந்தது.

வெகு நேரம்வரை படுக்கையில் புரண்டு கொண்டே இருந்தவள், அதற்குப் பிறகே தூங்கத் தொடங்கினாள்.

அதற்குப் பிறகும் சிறிது நேரம் கழித்தே படுக்கைக்கு வந்த ரகுபாலன் சத்தம் செய்யாமல் சென்று படுத்துக் கொண்டான்.

காலையில் தான் கண் விழித்த போதும் படுக்கையில் கணவன் இல்லாததைக் கண்டாள் இந்துரேகா.

ஆனாலும் தான் இரவு எடுத்த முடிவில் எந்த மாற்ற மும் இல்லாதவாறு பார்த்துக் கொண்டாள்.

ஏன் அந்த எண்ணம் இன்னும் அதிகத் தீவிரமடைந் திருந்தது என்று வேண்டுமானால் சொல்லலாம்.

உடனே எழுந்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வேகமாகக் கீழே இறங்கி வந்தவள், அங்கும் தனது கணவன் இல்லாததைக் கவனித்தாள்.

''வாம்மா, இப்பதான் எழுந்தியா?''

தனது அத்தை கேட்க, ''இல்ல அத்தெ. அப்பவே எழுந் துட்டேன்,'' என்றாள்.

''ரகு ஏன் நேரத்துலயே கிளம்பிப் போறான்?''

தன்னைக் கேட்டால் என்னவென்று சொல்வது? ஆசைக் கணவனாகத் தன்னிடம் மட்டும் அனைத் தையும் சொல்லி விட்டா சென்றான்?

''என்னமா?''

''ஏதோ அவசர வேலயா இருக்கும்னு நினைக்...''

''உங்க ரெண்டு பேருக்கும் ஏதாவது பிரச்சனையா?''

''அப்பிடியெல்லாம் ஒன்னுமில்...''

''ரகுவ இந்த மாதிரி நான் இது நாள் வரைக்கும் பாத்ததே இல்ல. எப்பவுமே சுறுசுறுப்பா... அவனப் பாத்தாலே அவனோட உற்சாகம் நம்மையும் தொத் திக்கும். அப்படிப்பட்டவன் இப்ப சில நாளாய்ப் பாக்கவே வித்யாசமா... சொல்லு. எதுவா இருந்தாலும் பரவா யில்ல.''

''அச்சச்சோ! அப்பிடியெல்லாம் ஒண்ணுமில்ல அத்தை...''

''சரி தான், விடு. என் கண்ணுக்குத் தான் அப்பிடிப் படுது போலிருக்கு!'' என்று தனது அத்தை அவர் பாட் டுக்கு வேலையில் கவனமாகச் செல்ல,

ஏதோ ஒரு இனம் புரியாத குற்ற உணர்வு வந்து தன்னைச் சூழ்ந்து கொள்வதை என்ன முயன்றும் இந்துரேகாவால் தடுக்க முடிந்திருக்கவில்லை.

''இந்தாம்மா, இந்தக் காப்பிய எடுத்துக்கோ.''

''சரி அத்தெ.''

''அப்புறம் சீக்கிரம் குடிச்சுட்டு வந்து எல்லாத்தையும் டேபிள் மேல எடுத்து வை. இனி ஒவ்வொருத்தரா சாப் பிட வர ஆரம்பிச்சுடுவாங்க.''

''சரி அத்தெ.''

''எடுத்து வெச்சுட்டு நீ போய்க் கிளம்பற வேலயப் பாரு. அப்புறம் உனக்கும் வேலைக்கு லேட்டாயிடப் போகுது.''



தான் இன்றும் வேலைக்குச் செல்லப் போவதில் லையே. அதை எப்படி இவரிடம்....

''என்னமா?''

''அத்தெ, நான் நேத்தே கம்பெனிக்குக் கூப்புட்டு இன்னும் மூணு நாளைக்கு லீவ் கேட்டுட்டேன்...''

''மூனு நாளைக்கா, எதுக்கு?''

''ஊர்ல என் கூடப் படிச்ச என் ஃப்ரண்ட்டுக்குக் கல் யாணம். போயிட்டு வரலாம்னு...''

''என்னமா, விளையாட்றியா?''

''சின்ன வயசுலிருந்தே ரொம்பப் பழக்கம் அத்தெ. பக்கத்து வீடுங்கறதால ஃபேமிலி ஃப்ரண்ட்சும் கூட...''

''அப்படிப்பட்டவ அன்னைக்கு ஊருக்குப் போகாம இருந்திருக்கலாமல்ல.''

''அப்பத் தெரியாது அத்தெ. அங்க போனதுக்கப்புறம் தான் அவளுக்குக் கல்யாணங்கற விஷயமே எனக்குத் தெரிஞ்சது. அவருகிட்டயும் சொல்லிட்டேன்...''

''என்னவோ போ. எப்பக் கிளம்பணும்?''

''இன்னைக்கு மதியத்துக்குள்ள...''

''சரி சரி. இனி நான் சொல்ல என்ன இருக்கு? உன் இஷ்டப்படி செய்.''

அப்படிச் சொல்லிவிட்டு நிற்காமல் சென்று விட் டிருந்த தனது அத்தையின் வார்த்தைகளிலிருந்து இந்து ரேகாவால் எதையும் கண்டு கொள்ள முடிந்திருக்க வில்லை.

இருந்தாள்.

ஆனாலும் கிளம்புவதில் உறுதியாக இருந்தாள்.

தொடர்ந்து வந்த இரண்டு மணி நேரங்களில் கிளம்பிக் கீழேயே வந்திருந்தவள், ஹால் சோஃபாவில் அமர்ந்து அன்றைய நாளிதழைப் புரட்டிக் கொண்டிருந்த தனது அத்தையிடம் சென்று நின்றாள்.

''நான் கிளம்பறேன் அத்தெ.''

அப்படிச் சொன்ன தனது மருமகளை எதுவும் பேசாமல் நிமிர்ந்து பார்த்தார் மதுரவாணி.

அவருடைய பார்வையில் தன்னுடைய கணவனைக் கண்ட இந்துரேகாவிற்கு ஏனோ மனதிற்கு ஒரு மாதிரியாகி விட்டிருந்தது.

ஆனாலும் முயன்று தன்னைச் சாதாரணமாகக் காட்டிக் கொண்டாள்.

''அதென்ன, கிளம்பறேன்? போய்ட்டு வர்றேன்னு சொல்லிப் பழகு. சரி, பாத்துப் போய்ட்டு வா. ஊர்ல எல்லாத்தையும் கேட்டதா சொல்லு.''

''சரி அத்தெ.''

''கப்புல ஏதாவது எடுத்துட்டுப் போறியா? வழில பசிச்சா சாப்புட்றது...''

''இல்ல அத்தை, வேண்டாம்,'' என்று அவசரமாக மறுத்து விட்டிருந்தவளுக்கு ஏனோ அவர் தனது வார்த்தைகளைச் சிறிதும் சந்தேகப்படாமல் நம்பி விட்டிருந்தது மனதை உறுத்துவதாக இருந்தது.

அடுத்த சில நிமிடங்களில் கையில் இருந்த அந்தப் பெரிய பையுடன் வீட்டை விட்டுக் கிளம்பியே விட்டிருந்தாள் இந்துரேகா.



தனது அத்தையின் பார்வையில் ஏதும் வித்தியாசமாகத் தெரிகிறதோ என்று அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

ஆனால் அதெல்லாம் ஆட்டோ பிடித்து சென்ட்ரல் பஸ் ஸ்டேண்ட் வந்து பேருந்தில் ஏறி அமரும் வரை தான்.

அதற்குப் பிறகு பயணச் சீட்டை வாங்கிக் கொண்டு ஜன்னல் ஓரமாகக் கிடைத்த ஸீட்டில் சென்று கண்களை மூடித் தலை சாய்த்து அமர்ந்து கொண்டாள்.

# 15

அதற்குப் பிறகு அவளுடைய மனக் கண்களில் தோன்றியவன் அவளுடைய கணவன் மட்டுமே.

ஒரு வேளை நாம் தான் அவசரப்பட்டுக் கணவனைத் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறோமோ என்று தோன்றிய எண்ணத்தைத் தலையைச் சிலுப்பி உதறினாள்.

பட்டாலும் புத்தி வராத ஜென்மங்கள் என்பார்களே, அதற்குச் சரியான உதாரணம் தான் மட்டும் தான் என்று தன்னையே கடிந்து கொண்டாள்.

மேலும் ஒரு மணி நேரம் சென்றிருக்கும். பாதி தூரத்திற்கும் மேலேயே கடந்திருப்பாள். அப்பொழுது தனது மொபைலுக்கு அழைப்பு வர எடுத்துப் பார்த்தாள்.

அபர்ணா.

இவர்கள் ஏன் தனக்கு அழைக்க வேண்டும்.

உடனே அட்டெண்ட் செய்து காதில் வைத்திருந் தாள்.

ஆனால் பேருந்து சென்று கொண்டிருக்கும் வேகத் திற்கு ஹலோ, ஹலோ என்பதைத் தவிர வேறு எதுவுமே இந்துரேகாவின் காதுகளில் விழுந்திருக்கவில்லை.

சில வினாடிகள் இடைவெளியில் மீண்டும் ஒரு முறை வந்த அழைப்பும் அதே போலக் கட்டாகி விட் டிருக்க, சில நிமிடங்களில் ஒரு ஊரில் பேருந்து நிற்க உடனே அந்த இடைவெளியில் தானே அபர்ணாவுக்கு அழைத்தாள்.

உடனே இணைப்புக் கிடைக்க, ''ஹலோ சொல்லுங் கக்கா,'' என்றாள்.

அபர்ணா அப்படியொரு குண்டைப் போடுவாள் என்று இந்துரேகா, கனவிலும் நினைத்துப் பார்த்திருக்க வில்லை.

அவள் சொன்னது இதுதான்.

அவளுடைய அதாவது இந்துரேகாவின் கணவன் எதிர்பாராத விதமாக ஒரு விபத்தில் சிக்கி இப்பொழுது மருத்துவனையில் இருக்கிறான் என்பது தான் அது.

மேலும் விவரம் கேட்பதற்கு முன்பே, ''நேரில் வா. மற் றதைப் பார்த்துக் கொள்ளலாம்,'' என்று அவள் அழைப் பைத் துண்டித்து விட்டிருந்தது அவளை விதிர்விதிர்க்கச் செய்திருந்தது.



ஒரு வித நடுக்கத்தில் கைகளும், கால்களும் நடப் பிற்கு ஒத்துழைக்க மறுக்க,

பிரம்மப் பிரயத்தனப்பட்டுப் பேருந்து கிளம்பும் முன்பே பையுடன் கீழே இறங்கினாள்.

இறங்கியவளின் கால்கள் அதன் பாட்டிற்கு ஒரு கால் டாக்ஸியின் அருகில் சென்று நிற்க, அந்த வினாடியே அதில் ஏறிக் கொண்டு முகவரி சொன்னாள்.

அவளுடைய வேண்டுகோளின்படி கால் டாக்ஸி பறக்க, ஊரின் எல்லையைத் தொட்டதும் மற்றொரு முறை அபர்ணாவை அழைத்து எந்த மருத்துவனை என்று கேட்டு டிரைவருக்கு வழி சொன்னாள்.

அபர்ணாவின் குரலிலும் தெரிந்த பதட்டம் இந்து ரேகாவைத் தன்னிலை மறந்து கதறச் செய்திருந்தது.

ஆனாலும் முயன்று சில நிமிடங்களில் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டவள் அடுத்த அரை மணி நேரத்தில் அவளுடைய கணவன் ரகுபாலன் அட்மிட் செய்யப்பட்டிருந்த மருத்துமனையின் வாசலிலேயே கொண்டு வந்து விடப்பட்டாள்.

ஒரு ஆயிரம் ரூபாய் நோட்டை எடுத்துக் கொடுத்து விட்டு இந்துரேகா மருத்துவமனைக்குள் ஓட, அவள் மறந்து விட்டுப் போன அவளுடைய பையையும் மீதிப் பணத்தையும் கொடுப்பதற்காக அவளைப் பின் தொடர்ந்து சென்றான் அந்த கால் டாக்ஸி டிரைவர்.

ரிஷப்சனில் பெயர் சொல்லி விவரம் கேட்ட போது இப்பொழுது அந்தப் பேஷண்ட் ஐ.ஸி.யூ. வில் என் றார்கள்.

அவர்கள் பதில் சொல்வதற்குள் ஒரு முறை உயிர் போய் வந்ததென்றால், அவர்கள் சொன்ன பதிலைக் கேட்ட பிறகோ மீண்டுமொரு முறை செத்துப் பிழைத் தாள்.

கடவுளே! தீவிர சிகிச்சைப் பிரிவில் வைத்திருக்கிறார் களென்றால்,

நெஞ்சு படீர்படீரென்று அடித்துக் கொள்ள, அவர் களிடமே வழி கேட்டுக் கொண்டு ஓடினாள்.

அவள் எதிர்பார்த்தது போலவே, குடும்ப அங்கத்தினர் அனைவருமே அங்கே இருக்க, முதலில் அமர்ந்திருந்த தனது அத்தையிடம் சென்றாள்.

கைகால்கள் வெலவெலத்துப் போயிருக்க, உயிரைக் கண்களில் தேக்கிக் கொண்டு தனது அத்தையைப் பார்த்தாள்.

''அத்தெ...''

''வாம்மா, உன் வீட்டுக்கார...''

அதற்கு மேல் பேச முடியாமல் அவர் அழ ஆரம்பித் திருக்க, ''சொல்லுங்க அத்தெ, அவருக்கு என்ன ஆச்சு?'' என்று முயன்று வரவழைத்த குரலில் கேட்டாள்.

''அது தான் சொல்ல மாட்டேங்கறாங்களே. ஆனா நினைவே இல்லையாம்மா. மண்டைல நல்ல அடி!'' என்று அவர் மீண்டும் அழ ஆரம்பித்திருக்க, தானும் உயிர் நிலையிலேயே அடி வாங்கியதைப் போலத் துடித்துப் போனாள் இந்துரேகா.

திடீரென்று கண்களை இருட்டிக் கொண்டு வர அப் படியே சுவரில் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டாள்.



மனம் ஊமையாய்க் கதறிக் கொண்டிருக்க, விட்டால் கதறி விடுவாள் போல இருந்தாள்.

எப்படி, என்ன என்றெல்லாம் அனைவரும் பேசிக் கொண்டது காதுகளில் விழுந்தது.

கடவுளே! அனைத்தும் தன்னால் தானோ, தான் மட்டும் கொஞ்சம் பொறுமையாக நடந்து கொண்டிருந் தால் கணவனுக்கு இந்த மாதிரி ஆகியிருக்காதோ என்ற குற்ற மனப்பான்மையே அவளை மேலும் மேலும் வேதனைக்குள்ளாக்கிக் கொண்டே இருந்தது.

இங்க ரகுபாலன் பேஷண்ட் அட்டெண்டர்ஸ் என்று யாரோ அழைக்கும் குரல் கேட்க, அனைவருமே ஒரு சேரத் திரும்பிப் பார்த்தனர்.

ஒரு மருத்துவர் வந்து கொண்டிருக்க, அவர் தான் பெரிய மருத்துவர் என்பது அனைவரும் பேசிக் கொண்ட திலிருந்து தெரிந்தது.

''சொல்லுங்க டாக்டர். இப்ப எங்க பையனுக்கு எப்படியிருக்கு?'' என்று மாமனார் முன்னே செல்ல, ''கண் முழிச்சுப் பாத்தானா?'' என்று கேட்டான் வினு பாலன்.

''தலைல பலமா அடிபட்டிருக்கறதால இப்பத்துக்கு எதுவுமே சொல்ல முடியாது. குறைஞ்சது இன்னும் இருபத்து நாலு மணி நேரத்துக்கு அப்புறம் தான் எதை யும் சொல்ல முடியும்....''

''அப்பிடின்னா எங்க பைய...''

அதற்கு மேல் பேச முடியாமல் மாமனாரின் குரல் கரகரத்து விட்டிருக்க, அவரை இடைமறித்துப் பேசினார் பெரிய மருத்துவர்.

''நம்பிக்கையோட இருங்க, எங்களால முடிஞ்ச வரைக்கும் நாங்களும் எல்லாத்தையும் செஞ்சுட்டு தான் இருக்கோம்....''

''உயிருக்கு ஆபத்து இல்லதான டாக்...''

''இப்பதான சொன்னேன். திரும்பவும் இப்பிடிக் கேட்டீங்கன்னா என்ன சொல்ல முடியும், சொல்லுங்க. கடவுள் மேல நம்பிக்கை வைங்க!'' என்று அவர் பாட்டுக்குச் சொல்லிவிட்டு மற்றவர்களின் மனம் படும் பாடு பற்றித் துளியும் கவலையற்றவராய் மருத்துவர் செல்ல, கனத்த மனதுடன் அனைவரும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டனர்.

அடுத்த சில நிமிடங்களில் வந்த செக்யூரிட்டி, ''யாராவது ரெண்டு பேரு மட்டும் இருங்க. மத்தவங் கெல்லாம் கிளம்பிக்கோங்க,'' என்று விட்டுச் செல்ல, ஆண்கள் தாங்கள் இருவரும் இருந்து கொள்வதாகச் சொன்னார்கள்.

கண்கள் கலங்கப் பெண்கள் அனைவரும் கிளம்பி யிருக்க, பேயறைந்ததைப் போல அமர்ந்திருந்த தனது சிறிய மருமகளைத் திரும்பிப் பார்த்தார் மதுரவாணி.

உடனே அருகில் சென்றவர், ''வாம்மா, வீட்டுக்குப் போய்ட்டுத் திரும்பவும் வரலாம்,'' என்று அழைத்தார்.

''............''

''இந்து, உன்னைத்தான்...''

அவர் சொல்லி முடிப்பதற்குள்ளேயே, 'இல்லை, நான் வரவில்லை,' என்பதைப் போலத் தலையை ஆட்டினாள் இந்துரேகா.



''இங்க இருந்துட்டு என்னமா பண்ணப் போற? யாரை யுமே உள்ள விட மாட்டாங்க. நாளைக்கு வரைக்கும் இப்பிடியே உக்காந்திருக்கப் போறியா?''

''நான் வரல.''

''இந்து.''

''ப்ளீஸ் என்ன விட்டுடுங்க அத்தெ,'' என்று அவள் சொன்னதைக் கேட்டு வினாயகமூர்த்தி அதாவது அவளுடைய மாமனார் தானும் அருகில் வந்தார்.

''இந்து, இங்க பாருமா. நீ இருக்கற நிலைல இங்க இருந்து என்ன பண்ணப் போற?''

''நான் வரமாட்டேன். தயவுசெஞ்சு என்ன விட்டுடுங்க ப்ளீஸ்!'' என்றவள், அதற்கு மேல் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாதவளாய் அப்படியே கீழே அமர்ந்து முழங் கால்களில் முகம் புதைத்து அழத் தொடங்கி விட்டிருந் தாள்.

''இந்து, இங்க...''

யார் என்ன அழைத்தும் இந்துரேகா வர முடியா தென்று விட்டிருக்க, அதற்கு மேல் வற்புறுத்த வேண்டா மென்று அவளையும் விட்டுவிட்டு அனைவரும் கிளம்பி விட்டிருந்தனர்.

மற்றவர்களுக்காக மட்டும் இடையே இரண்டு முறை எதையோ குடித்து வைத்தாள்.

அப்படி மருத்துவனையில் அமர்ந்திருந்த நேரமனைத் தும் கண்களிலிருந்து கண்ணீர் அதன் பாட்டிற்கு வழிந்து கொண்டே இருக்க இலக்கின்றி எங்கோ பார்த்தபடி அமர்ந்திருந்தாள்.

ஒரு வழியாக மருத்துவர் சொல்லி விட்டிருந்த இரு பத்து நாலு மணி நேரத்திற்கும் மேலேயே ஒரு இரண்டு மணி நேரங்களும் சென்று விட்டிருக்க, மருத்துவரின் பதிலுக்காக அனைவரும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு காத்திருந்தார்கள்.

அவர்கள் எதிர்பார்த்தது போலவே மருத்துவர் வர, அனைவருமே ஒரு சேர எழுந்து சென்றனர்.

பேஷண்ட் காலைய நேரத்துல ஒரு தடவ கண் முழிச்சுப் பார்த்திருக்கார்.

இப்ப அர மணி நேரத்துக்கு முன்னாடி பேசவும் கூட செஞ்சிருக்கார்.

மருத்துவர் சொன்னதைக் கேட்டு அங்கிருந்த அனை வருடைய முகங்களிலும் சந்தோஷமும், நிம்மதியும் ஒரு சேரப் பரவின.

இப்ப இருக்கற நிலமைய வெச்சுப் பாக்கும் போது உடனடி உயிருக்குப் பாதிப்போ, இல்ல... ரொம்ப பயப் படற அளவுக்கோ எதுவுமில்லன்னு சொல்றேன். அவ் வளவு தான்.

மத்தப்படி எதையும் இப்பவே உறுதியா சொல்ல முடியாது, ஏன் சொல்றேன்னா அவரு தலைல பட்டது ஒண்ணும் சாதாரண அடி கிடையாது.

மீண்டும் அனைவரும் கவலையுடனும், பயத்துட னும் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ள, ஆனாலும் நம்பிக்கையக் கைவிடாதீங்க என்று மேலும் சில நிமி டங்களும் கூடப் பேசிக் கொண்டிருந்து விட்டு, அதற்குப் பிறகே மருத்துவர் அங்கிருந்து கிளம்பினார்.



அதோ இதோ என்று நோயாளி அபாய கட்டத்தை முழுமையாகத் தாண்டி விட்டார் என்று மருத்துவர்கள் சொல்ல, மேலும் ஒரு வாரமும் கூட ஆகி விட்டிருந்தது.

அதைக் கேட்டு அனைவரும் அடைந்த சந்தோஷத்தை வார்த்தைகளால் நிச்சயம் விவரித்து விட முடியாது.

அன்று ரகுபாலனைத் தீவிர சிகிச்சைப் பிரிவிலிருந்து தனி அறைக்கு மாற்றிக் கொடுக்க, பத்து நாட்களுக்குப் பிறகு, அப்பொழுது தான் கணவனை முதன் முறையாகப் பார்த்தாள் இந்துரேகா.

ஆளே இளைத்துப் போய், யாரோ போல...

அந்தக் கம்பீரம், சிரிப்பு எல்லாம் எங்கே போயிற்று...

கணவன் நல்ல தூக்கத்திலிருப்பது தெரிந்தது.

என்னுடைய ரகுபாலனா என்று நினைத்தவளுக்குக் கண்கள் கலங்கி விட்டிருக்க, சுற்றியிருக்கும் மற்றவர் களுக்காகத் தன்னை முயன்று கட்டுப்படுத்திக் கொண் டாள்.

அதற்குப் பிறகும் ரகுபாலன் மருத்துவமனையி லிருந்து வீடு வந்து சேர, மேலும் பத்து நாட்களும் கூட ஆகி விட்டிருந்தன.

தனி அறைக்கு மாற்றிக் கொடுத்த நாளிலிருந்தே சில நிமிடங்களும் கூடப் பிரியாது தானே அருகில் இருந்து தனது கணவனைக் கண்ணின் இமை போலக் கவனித் துக் கொண்டாள்.

அதன் பலனாக முன்னைக்கு இப்பொழுது எவ்வளவோ தேறியிருந்தான் ரகுபாலன்.

ஆனாலும் இத்தனை நாட்களாக மருத்துவர்கள் கொடுத்திருந்த வீரியம் மிக்க மருந்துகள் அவனைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தான் பழைய நிலைக்குத் திரும்ப விட்டன.

கடந்த சில நாட்களாகவே கணவன் நன்றாகப் பேச ஆரம்பித்து விட்டிருந்தாலும் தன்னிடம் ஒரு வார்த்தை கூடப் பேசாதது இந்துரேகாவை மிகுந்த வேதனைக் குள்ளாக்கிக் கொண்டிருந்தது.

ஆனாலும் அதை முயன்று தனக்குள் மறைத்துக் கொண்டு வெளியே வழக்கம் போல இயல்பாக நட மாடிக் கொண்டிருந்தாள்.

அதிலும் கணவன் தன்னிடம் கடைசியாக என்னப் புரிஞ்சுக்கோடா ப்ளீஸ் என்று உணர்ந்து சொன்ன வார்த் தைகளும், அதைத் தொடர்ந்து மிகுந்த விரக்தியுடன் தன்னை உதறி விட்டுச் சென்றதும் தான் அவளுக்கு மீண்டும் மீண்டும் நினைவுக்கு வந்து கொண்டே இருந்தன.

தொடர்ந்து வந்த சில நாட்களில் கணவன் வேலைக் கும் செல்லத் தொடங்கி விட்டிருக்க, ஒரு நீண்ட இடைவெளிக்குப் பிறகு தானும் வேலைக்கு மீண்டும் செல்லத் தொடங்கினாள் இந்துரேகா.

அதிர்ஷ்டவசமாக முன்னறிவிப்பற்ற விடுமுறைக்குப் பிறகும் கூட தன்னை அந்தக் கம்பெனியிலேயே மீண் டும் வேலைக்கு எடுத்துக் கொண்டதில் எல்லையற்ற சந்தோஷம் அடைந்தாள்.

ஏனோ பழையபடி அனைத்துமே சரியாகி விட்டாற் போல மனதளவில் மிகுந்த நிம்மதியடைந்தாள்.



ஆனால் அதெல்லாம் கணவனைக் காணாத போது தான்.

கணவன் அருகில் இருக்கும் பொழுதோ தான் ஏதோ மிகப் பெரிய குற்றத்தைச் செய்து விட்டதைப் போல அவள் மனம் கிடந்து அடித்துக் கொள்ளும்.

அதற்கேற்றாற் போலக் கணவனும் தன்னிடம் பாரா முகமாக இருந்தது அவளை மிகுந்த வேதனைக்குள் ளாக்கிக் கொண்டிருந்தது

முன்னைப் போலக் கணவன் தன்னிடம் ஆசையாக வும், அன்பாகவும் நடந்து கொள்ள மாட்டானா என்று அவளது மனம் கிடந்து ஏங்கியது.

# 16

அன்று ஞாயிற்றுக் கிழமையாதலால் ஏற்கெனவே மதுரவாணி வேண்டிக் கொண்டது போல, குடும்பத் துடன் அனைவரும் குலதெய்வக் கோவிலுக்குக் காலை யில் நேரத்திலேயே இரண்டு கார்களில் கிளம்பினர்.

ஒரு காரை ரகுபாலன் ஓட்ட, மற்றொன்றை அவ னுடைய அண்ணன் வினுபாலன் ஓட்டிக்கொண்டு வந்தான்.

அந்த அளவிற்குக் கணவன் முழுமையாகக் குண மடைந்திருப்பது இந்துரேகாவை எல்லையற்ற ஆனந் தத்தில் தள்ளியிருந்தது.

ஏனோ பழையபடி அனைத்துமே சரியாகி விட்டாற் போல வாய் திறந்து அனைவரிடமும் நன்றாகப் பேசவும் சிரிக்கவும் கூடச் செய்தாள்.

அது அவளுடைய கணவன் ரகுபாலனின் கவனத்திலும் விழவே செய்தது.

மனைவியின் அந்த மாற்றம் அவனையும் மனதளவில் மிகவும் சந்தோஷப்பட வைத்திருந்தது.

அது மதுரவாணியின் கவனத்திலும் படவே செய்தது.

காரில் பின் பக்கமாக ஏறி அமரப் போன சிறிய மருமகளை ஒரு அதட்டு அதட்டி முன்னால் மகனுக்குப் பக்கமாக அமர வைத்தார்.

சிறிய மகனுக்கும் அவனுடைய மனைவிக்கும் இடையில் ஏதோ சரியில்லை என்பது மட்டும் இத்தனை நாட்களில் அவருக்குத் தெளிவாகப் புரிந்திருந்தது.

ஆனால் இப்பொழுது சில நாட்களாகக் கணவன் மனைவி இருவருமே நடந்து விட்ட அனைத்தையும் மறக்க முயற்சிப்பதும், பரஸ்பரம் அன்புக்காக ஏங்குவதும் கூட அவரது கவனத்தில் விழவே செய்தது.

அவளுடைய கணவனுக்கு அடிபட்ட நாளிலிருந்து இன்று வரை மனதளவிலும் உடலளவிலும் தன்னைத் தானே வருத்திக் கொண்டு இந்துரேகா தனது மகனைக் கவனித்துக் கொண்ட விதம் அவரை நெஞ்சு நெகிழச் செய்திருந்தது.

அதிலும் தன்னுடைய உணவையும், தூக்கத்தையும் கூட மறந்து அவளுடைய கணவனை அவள் பார்த்துக் கொண்ட விதம் அவருக்கு அவளின் மீதிருந்த



மதிப்பையும், அக்கறையையும் மேலும் பல மடங்கு உயரச் செய்திருந்தது.

அவள் தனது மகனைக் கவனித்துக் கொள்ள, அவரோ யாருடைய கண்களையும் உறுத்தாத வண்ணம் இந்துரேகாவைக் கவனித்துக் கொண்டார்.

சும்மா என்றாலும் கூடப் பரவாயில்லை. இரண்டு உயிராயிற்றே என்று சில நேரங்களில் சற்று அதட்டியும் கூட உண்ணவும், ஓய்வெடுக்கவும் வைத்தார்.

இடையிடையே ஷர்மிளியும் சில முறை வந்து ரகுபாலனைப் பார்த்து விட்டுச் சென்றாள்.

அபர்ணா ஒப்புக்கு ஒரு வார்த்தை அழைத்ததில் அவள் தானும் கோவிலுக்குக் கிளம்பி விட்டிருக்க, எங்கே மகனருகில் அமர்ந்து கொள்ள அவள் முந்திக் கொள்வாளோ என்ற பயத்தில் தான் அவர் இந்துரேகாவை அதட்டி முன்னால் மகனருகில் அமர வைத்ததும்.

இந்த ஷர்மிளியால் தான் சின்ன மகனுக்கும் மருமகளுக்கும் இடையே கருத்து வேறுபாடே வந்ததோ என்று ஓரளவு நடந்ததனைத்தையும் சரியாகவே ஊகித்த மதுரவாணி, மீண்டும் அவள் மகனை நெருங்கி விடாதவாறு முடிந்த அளவு பார்த்துக் கொண்டார்.

யாருடைய கண்களையும் உறுத்தாத வண்ணம் தான்.

அவர் அப்படி நினைத்துக் கொண்டிருக்க, நடந்து கொண்டிருந்த அனைத்துமே அபர்ணாவின் கழுகுக் கண்களில் விழவே செய்தது.

ஓ அப்படியா சேதி என்று அவள் மீண்டும் கணவன் மனைவி ஒன்று சேர்வதைத் தடுக்கத் தன்னால் ஆனதைச் செய்தாள்.

இரண்டு மணி நேரங்களில் அனைவரும் கோவிலைச் சென்றடைந்திருந்தனர்.

மதுரவாணி கொண்டு சென்றிருந்த பூஜைப் பொருட்களை யெல்லாம் வெளியே எடுத்து வைத்துக் கொண்டிருக்கத் தானும் சென்று உதவினாள் இந்துரேகா.

''நீ போம்மா, நான் பாத்துக்கறேன்.''

''இல்ல அத்தை, எனக்கு எந்த வேலையும் இல்ல. பொங்கல் வெச்சு சாமிக்குப் படையல் போட நான் உங்களுக்கு ஹெல்ப் பண்றேன்,'' என்றாள்.

''சொன்னா கேளுமா. ஆள் பாக்கறதுக்கே இளைச்சு எப்படி இருக்க தெரியுமா? பேசாம நீ போய் உம் புருஷனப் பாரு. இதோ சுசி, அபர்ணா, சுபா எல்லாரும் வர்றாங்க பாரு. அவங்க வேல செய்யட்டும்.''

தனது அத்தை ஒரேயடியாக அப்படிச் சொல்லி விட்டதற்குப் பிறகு மீண்டும் மறுத்துப் பேச முடியாது போய் விட, ''சரி அத்தை,'' என்று மனமே இல்லாமல் அங்கிருந்து நகர்ந்தாள்.

''இந்து, ஒரு நிமிஷம்மா.''

''சொல்லுங்க, அத்தெ.''

''இந்தா, இதுல எல்லாப் பழங்களும் இருக்கு. நறுக்கி நீ எடுத்துக்கிட்டு அப்பிடியே எல்லார்க்கும் கொண்டு போய்க் கொடு,'' என்று தனது அத்தை கொடுத்த கவரையும், சில டிஸ்போஸபிள் ப்ளேட்களையும் எடுத்துக் கொண்டு, அந்தப் பெரிய மரத்தடி நிழலில் இருந்த அந்தத் திண்ணைக்கு வந்தாள்.

''ஹலோ என்ன நீங்க விட்டா எப்பவுமே பிஸியாவே இருப்பீங்க போலிருக்கு!'' என்று ஷர்மிளி வர,



''அதெல்லாம் ஒண்ணுமில்லையே,'' என்று புன்னகையுடன் சொன்னாள் இந்துரேகா.

''ஓ தன்னடக்கமா?'' என்று சிரித்தவள், ''உங்களப் பாத்தா எனக்கு ரொம்பப் பொறாமையா இருக்கு. ஏன் பெருமையாவும் கூட!'' என்றாள்.

''ஏன்?''

''பின்ன, ரகுவுக்கு ஆக்ஸிடெண்ட் ஆன நாள்ல இருந்து நீங்கதான் சோறு தண்ணி கூட இல்லாம உயிர் குடுத்து அவர உயிரோட மீட்டுக் கொண்டு வந்தீங்களாமே, எல்லாரும் பேசிக்கறாங்க.''

''அப்படியெல்லாம்...''

''கடவுளே! திரும்பவும் தன்னடக்கமா? ஏன் மத்தவங்க சொன்னா தானா, நானே பாத்துக்கிட்டு தான இருந்தேன். இல்லேன்னு சொல்லாதீங்க....''

''அது என்னோட கடம.''

''கடம மட்டும் தானாக்கும். இதுவே எனக்குக் கல்யாணமாகி எங்க வீட்டுக்காரருக்கு இந்த மாதிரி விபத்து நடந்திருந்தா நானெல்லாம் நீங்க பாத்துக்கிட்டதுல பத்துல ஒரு பங்கு கூட பாத்திருப்பேனான்னு எனக்குச் சந்தேகமா இருக்கு. ஏன் நீங்க ரகுவப் பாத்துக்கிட்டதுல பாதி அளவுக்குக் கூட என்னால முடியாதுன்னு தான் எனக்குத் தோணுது.'

என்ன இவள் ஒன்றுமே இல்லாத ஒரு சிறிய விஷயத்தைப் போய் இந்த அளவிற்குப் பெரிதுபடுத்திப் பேசுகிறாள் என்று இந்துரேகாவால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

இன்னும் திருமணமான பாடையே காணோம், அதற்குள் பாவம் அந்த இல்லாத கணவனுக்கும் விபத்து என்று கற்பனை...

''என்ன இந்து, ஏதோ யோசனை போலிருக்கு.''

''ஒண்ணுமே இல்லாத விஷயத்தப் பெரிசு பண்ணிப் பேசறீங்களேன்னு நினைச்சேன்.''

''சரி, நீங்களே சொல்லுங்க. நெருப்புன்னு சொன்னா வாய் வெந்துடாது. அந்த மாதிரி விளையாட்டுக்குத் தான் கேக்கறேன். தயவு செஞ்சு தப்பா எடுத்துக்காதீங்க.''

''என்ன, சொல்லுங்க?''

''ஒரு வேள விபத்துல ரகுவுக்கு ஏதாவது ஆகியிருந்தா, ஸாரி ஐ ஸே திஸ் ஒரு வேள அவர் இறந்து போயிருந்தா...''

ஷர்மிளி கேட்டுக் கூட முடித்திருக்கவில்லை. அந்த வினாடியே இந்துரேகாவின் கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் வழியத் தொடங்கி விட்டிருந்தது.

அந்த அழுகையினூடே வினாடி கூடத் தயங்காது, ''அந்த நிமிஷமே நானும் செத்துப் போயிருப்பேன். அவர் இல்லாத உலகத்துல நான் மட்டும் எப்பிடி உயிர் வாழ முடியுமாம்....'' என்று தனக்குத் தானே கேட்டுக் கொண்டாள்.

''என்ன மன்னிப்பீங்களா இந்து?'' என்று திடீரென்று கண்கள் கலங்க ஷர்மிளி தனது கைகளைப் பிடித்துக் கேட்க, அதற்குப் பிறகு தான் முயன்று நடப்புக்கு வந்து அவளைப் புரியாமல் பார்த்தாள் இந்துரேகா.

''என்ன பாக்கறீங்க? உங்க முன்னாடி நின்னு பேசக் கூட எனக்குத் தகுதியில்ல. ஏன்னா நான் உங்களுக்குத்



துரோகம் பண்ண இருந்தேன். ஆனா உங்க ரெண்டு பேரோட உண்மையான அன்புக்கு முன்னாடி நான் எவ்வளவு கேவலமா நடந்துக்கிட்டிருக்கேன்னு எனக்கு இப்பதான் புரியுது....''

''அதெப்படி அவ்வளவு உறுதியா சொல்றீங்க? ஒரு வேள உங்களுக்குரியத நான் தட்டிப் பறிச்சிரு....''

''சை. கிடையாது! எனக்கு ரகு மேல எப்பவுமே ஒரு ஈர்ப்பு. அவ்வளவு தான். படிக்கற காலத்துலிருந்தே அவர் எல்லாத்துலயுமே ஃபர்ஸ்ட்டா வருவார். அதப் பாத்து மத்த பொண்ணுங்க எல்லாம் அவர் மீது உரிம கொண்டாடும் போது அதத் தடுக்க என்னால ஆனத செய்வேன். அந்த மாதிரி ஒரு தப்புக் கணக்கோட உங்க வாழ்க்கைக்குள்ளயும் பிரச்சனை பண்ண இருந்தேன். ஏன், உங்க ரெண்டு பேரையும் ரொம்பவுமே கஷ்டமும் படுத்திட்டேன். தயவு செஞ்சு என்ன மன்னிப்பீங்களா?''

''பரவாயில்ல. விட்டுடுங்க. கவலப்படாதீங்க....''

''எவ்வளவு பெருந்தன்மையா நடந்துக்கறீங்க! ரகு கூட நான் அவரோட மனச மாத்த முயற்சி பண்ணினப்ப, ஆமா, நான் தான் அவர்கிட்ட எப்பிடியெப்பிடியோ நடந்துக்க முயற்சி செஞ்சேன். ஆனா அவரு ஜெம். அவர் மேல எந்தத் தப்பும் கிடையாது. உங்களைத் தவிர, ஏன்... எனக்கு விவரம் தெரிஞ்ச நாள்ல இருந்தே அவரு நான் உட்பட எந்தப் பொண்ணயுமே தப்பான எண்ணத்தோட பாத்தது கூடக் கிடையாது.

''அப்பிடி நான் அவரோட மனசக் கலைக்க ஒரு முறை முயற்சி செஞ்சப்ப, எனக்கு இந்துவோட சந்தோஷமும் நிம்மதியும் தான் ரொம்ப முக்கியம். அதுக்கு முன்னாடி

என்னப் பொறுத்த வரைக்கும் மத்ததெல்லாம் தூசுன்னு சொன்னார்.

''எவ்வளவு அன்நியோன்யமான தம்பதி நீங்க! அத னால தான் கடவுள் ஒரு பெரிய துன்பத்தக் குடுத்திருந் தாலும் கூட அது வந்துட்டுப் போன சுவடே தெரியாம திரும்பவும் எல்லாத்தையும் சரி பண்ணிட்டார்.

''நீங்க ரெண்டு பேரும் ரொம்ப காலம் சந்தோஷமா இணை பிரியாம வாழணுங்கறது தான் அந்தக் கடவு ளோட விருப்பம். என்னோட ஆசையும் கூட...''

இன்னும் ஷர்மிளி என்னென்ன சொன்னாளோ, அதெல்லாம் இந்துரேகாவின் காதுகளுக்குள் கூடச் சென்றிருக்கவில்லை.

அப்படியானால் தன்னுடைய ரகுவின் மேல் உண்மை யிலேயே எந்தத் தவறுமே இல்லையா?

நாம் தான் இத்தனை நாளும் அவனைத் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறோமா?

கடவுளே! கணவன் அப்பொழுதும் சொல்ல வேறு செய்தானே!

அவனுடைய குணத்திற்கு மாறாகத் தன்னிடம் எந்த அளவிற்கு இறங்கி வந்து, உண்மையைத் தனக்குப் புரிய வைக்க முயற்சி செய்தான்.

ஆனால் அதை நம்பாமல் எவ்வளவு பெரிய தவறை எவ்வளவு சுலபமாகச் செய்து விட்டிருக்கிறேன்.

தன்னால் தான், அதாவது தான் கொடுத்த அந்த மன வேதனையால் தான் கணவனுக்கு அந்த விபத்தே நிகழ்ந்ததோ?



கடவுளே! என் ரகு என்னிடம் பழையபடி நடந்து கொள்ள நீ தான் எனக்கு அருள் புரிய வேண்டுமென்று மனதார வேண்டிக் கொண்டாள் இந்துரேகா.

ஏனோ மேலே நினைக்க நினைக்க ஒன்றுமே முடி யாமல் மனம் மிகவும் பாரமாகி விட, தனது கைகளில் முகத்தைப் புதைத்துக் கதறித் தீர்த்தாள்.

அவர்கள் அமர்ந்திருந்த அந்த மரம் மிகப்பெரியது என்பதால் அவர்கள் அமர்ந்திருக்கும் திண்ணையைப் போலவே அந்த மரத்திற்குப் பின்பக்கமும் ஒரு திண்ணை இருப்பதையும், அதில் காற்று சுகமாக வருகிறதே என்று அதை அனுபவிப்பதற்காக ரகுபாலன் வந்து அமர்ந் திருப்பதையும் பெண்கள் இருவருமே அறிந்திருக்க வில்லை.

அதே போல இவ்வளவு நேரமும் தாங்கள் இருவரும் பேசிக் கொண்டிருந்த அனைத்தையும் அவன் முழுமை யாகக் கேட்டு விட்டதையும்,

மனைவியின் அழுகை ரகுபாலனின் கண்களிலும் கண்ணீரை வரவழைத்திருக்க, சுற்றுப்புறத்தை உணர்ந்து தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

தன்னைத் தவறாகப் புரிந்து கொண்டதற்காகக் கதறி அழும் மனைவியை எழுந்து சென்று சமாதானப்படுத்து வதற்காகப் பரபரத்த கால்களையும், மனதையும் கூட.

அதிலும் தான் இல்லாத உலகில் அவளுக்கும் ஒன் றுமே இல்லையென்று சொல்கிறாளென்றால் அவளுக் குத் தன் மீது எவ்வளவு அன்பு இருக்க வேண்டும்.

ஏனோ அந்த வினாடியில் தன் அளவிற்குப் பெரும் பாக்கியம் செய்தவன் இந்த உலகில் யாருமே இருக்க

முடியாது என்பதைப் போலப் பெருமையாக உணர்ந் தான் ரகுபாலன்.



# 17

கோவிலில் பூஜையை முடித்துக் கொண்டு, அப் படியே மதிய உணவையும் முடித்துக் கொண்டு, மீண் டும் அனைவரும் வீடு வந்து சேர்ந்த போது, நேரம் மாலை ஐந்து மணி ஆகி விட்டிருந்தது.

வந்ததும் வராததுமாக அபர்ணா தனது கணவனை அழைத்துக் கொண்டு தங்களுடைய சொந்தத்தில் ஒரு விசேஷமென்று கிளம்பி விட்டிருக்க, சுசித்ராவும், சுபர்ணாவும் பரிட்சைக்குப் படிக்க வேண்டுமென்று உள் அறைக்குச் சென்று விட்டிருந்தனர்.

ஷர்மிளியும் வரும் வழியிலேயே தனது வீட்டில் இறங்கிக் கொள்ள, மீதியிருப்பவர்களுக்கு மட்டும் டீ கலந்தார் மதுரவாணி.

''இந்து.''

''இதோ வர்றேன் அத்தெ,'' என்று இந்துரேகா சில வினாடிகளில் வர, ''இந்தாம்மா. இதக் கொண்டு போய் மாமாவுக்கும் ரகுவுக்கும் குடுத்துட்டு வா,'' என்று இரண்டு டீ கப்களை ட்ரேயில் வைத்துக் கொடுத்தார்.

சில வினாடிகளில் கொண்டு போய்க் கொடுத்து விட்டு வந்தவளிடம், ''இந்தாம்மா, நீயும் ஒரு கப் எடுத் துக்கோ,'' என்றார்.



''அப்புறம் சுசி, சுபாவுக்கு அத்தெ?''

''அவங்களுக்கு வேண்டாமாம்மா. கேட்டுட்டேன்,'' என்றவர், ''சூடு ஆறிப் போறதுக்கு முன்னாடி நீ எடுத் துக்கோ,'' என்றார்.

டீ கப்பைக் கையில் எடுத்துக் கொண்டே நின்றவளைப் பார்த்து, ''என்னமா?'' என்று கேட்டார்.

''அவரப் பத்து நாள் கழிச்சு செக்கப்புக்கு வரச் சொன் னாங்க அத்தெ. இன்னைக்கு விட்டா அப்புறம் கஷ்டம். நாள் தள்ளிப் போயிடும்.''

''சரி, உம் புருன்தான. நீயே போய்ச் சொல்லிக் கூட் டிட்டுப் போ.''

அப்படிச் சொல்லிவிட்ட தனது அத்தையைச் செய்வ தறியாது பார்த்தாள் இந்துரேகா.

''என்ன?''

''நீங்க ஒரு வார்த்த அவர்கிட்ட சொன்னீங்கன்....''

''என்னமா பிரச்சன உங்க ரெண்டு பேருக்கும்? அவனப் பாத்தா நீ எப்படா பேசுவேன்னு பாத்துட்டு இருக் கற மாதிரியிருக்கு. நீ என்னடான்னா இப்பிடி சாதாரண மாப் பேசக் கூடத் தயங்கிட்டிருக்க....''

''...............''

''என்ன, பேசு?''

''அவருக்கு டாக்டர் கொடுத்த மருந்தெல்லாம் தீந்து போயிடுச்சு அத்த. கண்டிப்பா இன்னைக்கு செக்கப் போயாகணும். நான் கூப்பிட்டா வர முடியாதுன்னு ஏதாவது சொல்லிட்டார்னா என்ன பண்றதுன்னு பயமா இருக்கு...'' என்று மேலும் ஏதோ சொல்ல வந்தவளுக் கும் தொடர்ந்து பேசக்கூட முடியாத அளவுக்கு அழுகை வந்து விட்டிருந்தது.

ஏன் சொல்லப் போறான்?

''வர முடியாதுன்னு அப்பிடி நீ என்ன செஞ்ச?''

கடவுளே! இவரிடம் எதைச் சொல்வது, எப்படிப் புரிய வைத்து இனி,

''என்னன்னு சொல்றது, எல்லாத் தப்பும் எம்மேல தான் அத்தெ. நாந்தான் அவரத் தப்பாப் புரிஞ்சுக்கிட் டேன். ஆனா அவரு எவ்வளவு நல்லவர் தெரியுமா....''

என்றவளுக்கு மேலும் அழுகை வந்து விட, கைகளால் முகத்தை மூடிக் கொண்டு குலுங்கி அழத் தொடங்கி விட்டிருந்தாள்.

இப்படிச் சொல்பவளை என்ன சொல்லித் தேற்றுவ தென்று புரியாமல் செய்வதறியாது மதுரவாணியும் பார்க்க, இந்துரேகாவின் அழுகை மேலும் அதிகமானதே தவிரத் துளியும் குறைந்திருக்கவில்லை.

சில வினாடிகள் யோசித்துப் பார்த்த மதுரவாணிக்கோ முதலில் தவறு அனைத்தும் தன் மேல் தான் என்று சொல்வதற்கு எவ்வளவு பெரிய மனம் இருக்க வேண்டும் என்று நினைக்கத் தோன்றியது.

உண்மையிலேயே தவறே செய்திருந்தாலும் கூட அதை எத்தனை பேர் இப்படி மனதார ஒத்துக் கொள்வ தோடு, வருந்தவும் வேறு செய்வார்களென்றும்.

அதிலும் அவளாக மனதறிந்து எந்தத் தவறையும் செய்திராத போதே இந்த அளவிற்கு வருந்துகிறா ளென்றால்,

''இந்து, இங்க பாருமா.''

மேலும் ஒரு முறையும் கூட மதுரவாணி அழைக்க, அதற்குப் பிறகே முயன்று நடப்புக்கு வந்து நிமிர்ந்து அவரைப் பார்த்தாள் இந்துரேகா.



''ஒரு நிமிஷம் இப்பிடி வந்து உக்காரு,'' என்று அவர் அழைக்க, கண்களைத் துடைத்துக் கொண்டு, அவருக்கு அருகில் இருந்த இருக்கையில் சென்று அமர்ந்தாள்.

ஆனாலும் மீண்டும் அழுகை வர, உதட்டைக் கடித் துத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

''இந்தா, முதல்ல இந்த டீயக் குடி.''

தனது அத்தை எடுத்துக் கொடுத்த கப்பை வாங்கிக் கொண்டவள், அவருடைய வார்த்தைக்காகக் குடிக்கவும் செய்தாள்.

''வயித்துப் புள்ளக்காரி (இப்பிடி) அழக்கூடாதுமா!'' என்றவர், ''ஒரு நிமிஷம் இரு. வர்றேன்,'' என்று எழுந்து சென்றார்.

நேராக ஹாலுக்கு வந்தவர், அங்கே மகன் ரகுபாலன் மட்டுமே அமர்ந்து டி.வி. பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டார்.

''அப்பா எங்கப்பா?''

''அவரு ஃப்ரண்டப் பாத்து நாளாச்சு, பாத்துட்டு வந் துட்றேன்னு இப்பத்தான் கிளம்பினார். என்னமா, சொல் லுங்க. ஏதாவது வேணுமா?''

என்று தாயைப் புரியாமல் பார்த்த ரகுபாலன், ''என்னமா?'' என்று கேட்டான்.

''ஒரு நிமிஷம் இங்க வாப்பா.''

''என்னமா, சொல்லுங்க,'' என்று கேட்டுக் கொண்டே எழுந்தவன், தனது தாயைப் பின் தொடர்ந்து டைனிங் ஹாலுக்கு வந்தான்.

கலங்கிய கண்களுடன் அங்கு தனது மனைவியும் அமர்ந்திருப்பதைக் கண்டவன், ''என்னம்மா, சொல் லுங்க?'' என்றான்.

''கண்ணா...''

''அம்மா... என்ன சொல்லுங்க...'' என்று அந்தச் சில வினாடிகளிலேயே எதையெதையோ எண்ணிப் பதறிப் போய்க் கேட்டான் ரகுபாலன்.

அதே நேரம் இந்துரேகாவும் அவர்கள் இருவரையும் கண்டு எழுந்து நின்றிருக்க, ''என்ன மன்னிச்சுடுங்கமா!'' என்று கலங்கிய கண்களுடன் மகன் மருமகள் இருவரையும் பொதுவாகப் பார்த்து மிகவும் உணர்ந்து சொன்னார் மதுரவாணி.

''அத்தெ...'' என்று இந்துரேகா பதறிப் போய் விட்டிருக்க, தனது தாயை இப்பொழுது மேலும் விளங்காத பாவனையுடன் பார்த்தான் ரகுபாலன்.

''ஆமாம்மா. முக்கியமா நீதான் என்ன மன்னிக்கணும்!'' என்று தன்னருகில் வந்து நின்றிருந்த தனது மருமகளின் கையைப் பிடித்துக் கொண்டவருக்கு, ''நான் உன்ன எப்பிடியெல்லாம் கொடுமப்படுத்தியிருக்கேன். ஆனா நீ உன் சின்ன வயசுக்கு எந்த அளவுக்குப் பெருந்தன்மையா நடந்துட்டிருக்க...'' என்று தொடர்ந்து மேலே பேச முடியாத அளவுக்கு அழுகையில் குரல் கரகரத்துப் போயிற்று.

''என்னப்பா பாக்கற, நீயும் எத்தனையோ தடவ என்ன, ஏன் இந்த அம்மா இப்பிடியெல்லாம் சின்னத்தனமா நடந்துக்கறாங்கன்னு யோசிச்சிருக்க, இல்லையா? ஆனாலும் அம்மாங்கற மரியாத குடுத்து எதுவுமே கேக்காம பொறுத்துப் போன இல்...''

''அம்மா, என்னாச்சு உங்களுக்கு. இப்ப நீங்க பேசறது தான் எனக்கு ஒண்ணுமே புரியல. நீங்க வயசுல பெரிய



வங்க. உங்க அனுபவத்துக்கு நீங்க எது சொன்னாலும் அதுல ஒரு நியாயம் இருக்கும், இருந்திருக்கும்...''

''இல்லப்பா. இந்து விஷயத்துல நான் ஒரு சராசரி மாமியாரா தான் நடந்துக்கிட்டேன். ஏன், அதுக்கும் கீழ யோன்னு கூடச் சொல்லலாம்...''

''ஐயோ! அத்தெ, தயவு செஞ்சு இந்த மாதிரி பெரிய வார்த்தையெல்லாம் சொல்லாதீங்க...''

''சரி தான். போனதெல்லாம் போகட்டும். இனிமேல் நான் நிச்சயம் அந்தத் தப்புகள செய்யவே மாட்டேன்!'' என்று உணர்ந்து தனக்குத் தானே சொல்லிக் கொண்டவர் -

''கண்ணா! எப்பேர்ப்பட்ட சொர்க்கம் உனக்கு மனைவியா கிடைச்சிருக்கா தெரியுமா? தயவு செஞ்சு அவ என்ன தப்பு செஞ்சிருந்தாலும் மன்னிச்சு விட்டுடுப்பா. ஆனா அவ தப்பு எதுவும் செஞ்சிருக்கவே முடியாதுன்னு தான் எனக்குத் தோணுது,'' என்று தனது தாய் சொல்லிக் கொண்டிருக்கும் போதே இடைமறித்து -

''ஆமாம்மா. என் மனைவி எந்தத் தப்புமே செய்யல. ஏன், இன்னும் எத்தன ஜென்மங்கள் எடுத்து வந்தாலும் தப்பா நடந்துக்கவோ, யாரோட மனசையும் புண்படுத்தற மாதிரி பேசவோ கூட அவளால் முடியாது அப்பிடியிருக்கும் போது அவளை மன்னிக்க வேண்டிய அவசியம் மட்டும் எங்கிருந்து வந்தது....''

கணவன் சொன்ன வார்த்தைகளைக் கேட்டவளால் தன்னுடைய காதுகளையே நம்ப முடிந்திருக்கவில்லை. சந்தோஷத்தில் நெஞ்சு நிறைந்து போயிருக்க, ''ரகு...'' என்று எல்லையற்ற ஆவலுடன் கணவனைப் பார்த்தாள்.

''இல்ல, ரகு... நான்...''

"இந்து..." என்று அழைத்த கணவன் காதலுடன் தனது இரண்டு கைகளையும் நீட்ட, உதடு துடிக்கப் பார்த்தாள்.

சில வினாடிகள் தான்.

கணவனின் கண்களில் தெரிந்த காதலும், ஏக்கமும் தன்னை என்னவோ செய்ய, ஓடிச் சென்று கணவனின் கைகளுக்குள் தஞ்சம் புகுந்திருந்தாள்.

இந்துரேகாவின் உதடுகள் அதன் பாட்டிற்கு, "ரகு... ரகு..." என்று முணுமுணுத்துக் கொண்டிருக்க, எனது உயிருக்குயிரான மனைவியை இனி எப்பொழுதுமே பிரிய மாட்டேன் என்பதைப் போலத் தனது மார்போடு இறுக அணைத்துக் கொண்டான் ரகுபாலன்.

சில வினாடிகளில் திரும்பித் தனது தாயைப் பார்த்தவனுக்கு அவருடைய கண்களும் கலங்கியிருப்பது தெரிந்தது.

"டிஃபன் டேபிள் மேலயே வெச்சுடுங்கமா. நாங்க வந்து சாப்புட்டுக்கறோம்," என்றவன், "இன்னைக்கு டாக்டர்கிட்ட செக் அப் பண்ண வேண்டிய நாள். பரவாயில்ல. நாளைக்கு நாங்க ரெண்டு பேரும் வேல முடிஞ்சு அப்பிடியே போய்ட்டு வந்துட்றோம்," என்று மனைவியுடன் அந்த அறையை விட்டு நகர்ந்தான்.

ஆனால் இந்து ரேகாவோ சுற்றி நடக்கும் எதையுமே அறியாதவளாய்க் கணவனின் அணைப்பில் தன்னை மறந்திருக்க, அந்த நிலை கலைந்து விடாதவாறு மனைவியைத் தங்களுடைய அறைக்கு அழைத்துச் சென்றான் ரகுபாலன்.

அந்த அளவிற்குக் கணவனின் கையணைப்பில் சுகம் போலப் பாதுகாப்பாகவும் உணர்ந்தாள் இந்துரேகா.

✱